
தமிழரசு
16-7-1990 ரூ.1



பெருந்தலைவர் காமராஜருடன் பேரறிஞர் அண்ணா

# இந்த இதழில்...


| | |
|---|---|
| வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் முதல்வர் ... | 2 |
| பெருந்தலைவர் காமராசர் ... | 7 |
| உன் பிறந்த நாள் சிறந்த நாள்! (கவிதை) —மாண்புமிகு முதல்வர் கலைஞர் ... | 9 |
| சென்னையில் பாபுஜெகஜீவன்ராம் சிலை திறப்பு ... | 11 |
| எரிசக்தி-90 ... | 13 |
| முதல்வருக்கும் அரசுக்கும் எங்கள் நன்றி ... | 17 |
| திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் மீன் வளர்ப்போர் முகமை ... | 19 |
| சுழற்சி முறைப் பாசனம் ... | 21 |
| நூல்நயம் ... | 23 |
| பெருந்தலைவர் காமராசர் படத்தொகுப்பு ... | 24 |
| மாணவர் பக்கம் ... | 27 |
| ஆதிதிராவிடர் பழங்குடியினருக்குத் தொழில் வழிகாட்டும் நிலையம் ... | 29 |
| 12 இலட்சம் பேர் பலன்பெறும் கடன் நிவாரணத் திட்டம் ... | 33 |
| தமிழகத்திற்குத் தடையின்றி மத்திய திட்ட உதவி தேவை ... | 39 |
| நகர்ப்புற வீட்டுவசதி ... | 41 |
| வேளாண்மை உற்பத்தி பெருகிட ... | 43 |




நாடு முன்னேற - வறுமையும் அறியாமையும் போகவேண்டும்; இவையிரண்டும் போனாலன்றி எந்த ஒரு நாடும் முன்னேறியதாகச் சொல்ல முடியாது.

—பெருந்தலைவர் காமராசர்


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

ஆடித் திங்கள் - 1

மலர்:21 இதழ்:2

16-7-1990


அட்டைப்பட விளக்கம்

பெருந்தலைவர் காமராஜரின் 88-வது பிறந்த நாளையொட்டி (ஜூலை-15) அவருடைய திருவுருவப்படம் இவ்விதழ் அட்டையை அலங்கரிக்கிறது.

# வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் முதல்வர்

**வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் 67 திட்டங்கள் துவக்கி வைக்கப்பட்டன; அவற்றின் மூலம் 67 ஆயிரத்து எழுநூற்று ஐம்பத்தேழு பேர் பயனடைந்தார்கள். அவற்றுக்காகத் தமிழக அரசின் பல்வேறு துறைகள் ஒதுக்கீடு செய்த மொத்த நிதி ரூ 67 கோடியே 87 இலட்சத்து 63 ஆயிரம் ஆகும். இந்த வகையில்- மாண்புமிகு முதல்வர் அவர்கள், 1.7.1990 அன்று காலை முதல் இரவு வரை வடஆர்க்காடு அம்பேத்கர்/ மாவட்டத்தில் பங்கேற்ற பலவகை நிகழ்ச்சிகளின் தொகுப்புக் கட்டுரையே இது:**

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 1.7.90 அன்று காலை முதல் இரவு வரை வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்; பல்வேறு திட்டங் களைத் தொடங்கி வைத்தார்; தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர் திரு வுருவச் சிலைகள், வடஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் ஆகியவற் றைத் திறந்து வைத்ததோடு, ஏழை எளிய மக்களுக்கான நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

காலை 9 மணியளவில் தொடங்கிய அனைத்து நிகழ்ச்சிகளும் இரவு 10.30 மணியளவில்தான் முடிவுற்றன. மாண்புமிகு முதல்வர் அவர்கள், எல்லா நிகழ்ச்சி களிலும் பல்லாயிரக்கணக்கான மக்களால் பேருவகையோடு வரவேற்கப்பட்டார். வேலூர் நகரமே திருவிழாக் கால நகரம் போலக் கோலாகலமாகக் காட்சியளித்தது

அத்தனை நிகழ்ச்சிகளிலும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன்- மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் மின்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்களும் திரு தி.அ. முகமது சகி எம்.பி. அவர் களும், வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எம். சத்திய மூர்த்தி இ.ஆ.ப., அவர்களும் கலந்து கொண்டார்கள்.

### கூட்டுறவுச் சர்க்கரை ஆலை

வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நவீன முறை விரிவாக்கம் - நாட்டுக்கு அர்ப்பணிப்பது; தொழிலாளர் குடி யிருப்பு- விருந்தினர் இல்லம்- சர்க்கரைக் கிடங்கு- நிர்வாக அலுவலகக் கட்டடம் ஆகியவற்றைத் திறந்து வைப்பது; மெட்ரி குலேஷன் பள்ளி, கூடுதல் தொழிலாளர் இல்லம், தென் இந்திய சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம் அடிக்கல் நாட்டுவிழா ஆகியவை- அன்று காலையில் முதல் நிகழ்ச்சியாக வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் அம்முண்டியில் உள்ள வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை வளாகத்தில்- வேலூர் ரம்யா இசைக்குழுவினர் இன்னிசை யோடு தொடங்கியது.



முத்துமண்டபம் திறப்பு விழா

மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் மின்துறை அமைச்சர் திரு. துரை முருகன் அவர்கள் தலைமையில் நடை பெற்ற இந்த விழாவில் பங்கேற்கு முன் பாகக் கரும்புப் பயிரிடல் குறித்து அமைக் கப்பட்டிருந்த கண்காட்சியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்டார்.

சர்க்கரைத் துறை இணை ஆணையர் திரு வை. பழனிச்சாமி இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்; சர்க் கரைத் துறை ஆணையர் திரு. மு.க.அ. தய்யப் இ.ஆ.ப., அவர்கள் திட்ட விளக்க உரையினைப் படித்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பில் திரு டி.ஆர். கெஜ பதி எம்.எல்.ஏ. கரும்பு உற்பத்தி யாளர்கள் சார்பில் ஆரணி திரு எத்தி ராஜ், திமிரி ஸ்ரீராமுலு, ஊராட்சி ஒன்றி யத் தலைவர்கள் சார்பில் திரு ஜி. நடராசன் மற்றும் திரு அ.க.அ. அப்துல் சமது எம்.பி., திரு தி.அ. முகமது சகி எம்.பி., ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசினார்கள்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்கள் தமது தலைமையுரையில்- இந்த ஆலைக்குப் போதுமான மின்சாரம் வழங்கத்தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் மாநிலத்தில், விவசாயப் பணிகளுக்குப் பகலில் 8 மணி நேரமும்; இரவில் 6 மணி நேரமும் மின்சாரம் கிடைக்கும் என்றும், கரும்பு வரத்திற்கேற்ப சாலைகள் செப்பனிடப்படவும்- ரயில்வே பாலத்தைப் பலப்படுத்தவும்- பை பாஸ் சாலை அமைக்கவும் நிதி ஒதுக்கீடுகள் செய்யப் பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மேலே குறிப்பிட்ட திட்டங்களைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப் பிட்டதாவது:

" இந்த ஆலையின் விரிவாக்கம் என்பது ஏற்கெனவே உள்ள 1,250 டன் சர்க்கரை உற்பத்தி என்பதிலிருந்து 2,500 டன் என்ற அளவில் விரிவடைகிறது. இதனால்- பதினைந்தாயிரம் விவசாயிகள் ஏற் கெனவே பங்கு பெற்றார்களென்றால், மேலும் சில ஆயிரம்பேர் இதனால் பயன்



ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில்...

பெறக் கூடும். கூடுதலாக ஒரு ஐயாயிரம் பேர் அங்கத்தினர்களாக இணையும் சூழ்நிலையும் இந்த விரிவாக்கத்தின் மூலம் ஏற்படுகின்றது.

தமிழகத்தில் இப்போது 30 சர்க்கரை ஆலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன; ஒன்றிரண்டு ஆலைகளுக்கான அடிக்கல் நாட்டு விழாக்கள் அண்மையில் நடைபெற்றன; விரைவில், மேலும் ஒன்றிரண்டு சர்க்கரை ஆலைகளுக்கான தொடக்க விழாக்கள் நடைபெறவிருக்கின்றன.

கரும்புக்கு, இந்த வட்டாரத்திலே 30 ரூபாய் ஊக்கத் தொகை உள்ளிட்ட 371 ரூபாய் தரப்படுகிறது. அதை 400 ரூபாயாக அறிவிக்கும்படி சொன்னார்கள்; அப்படிச் செய்தால்- சர்க்கரையின் அடக்க விலை அதிகமாகி, சாதாரண மக்கள் அதற்குத் தரவேண்டிய விலையும் அதிகமாகிவிடும். அப்படிச் செய்தால் கழனிகளையெல்லாம் கரும்பு வயல்களாக்கும் எண்ணமும் பலருக்கு ஏற்பட்டு, சர்க்கரை ஆலைகள் அதிகமாகலாம். சர்க்கரை ஆலைகள் அதிகம் வருமானால்- உணவு தானியத்திலே அரிசியை மாத்திரம் நம்பி வாழ்கிற தமிழ்நாட்டு மக்களுக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்ற அந்த அச்சமும் இந்த அரசுக்கு இருக்கின்றது.

தமிழ்நாட்டிலேதான் ஒரு புதிய ஊக்கத் தொகையை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறோம். குறிப்பாக- இதுவரையிலே கூட இந்தக் கூட்டுறவுத்துறை சர்க்கரை ஆலை ஈட்டிய லாபம், கூட்டுறவு- மற்றும் பொதுப்பணித்துறை சர்க்கரை ஆலைகள் ஈட்டிய லாபம் 15 கோடி ரூபாய் என்றால், அந்த 15 கோடி ரூபாவை, ஆலைக்குக் கரும்பைக் கொடுக்கின்ற விவசாயிகளுக்கு அந்தக் கரும்பின் விலையை- அந்த லாபத்தைப் பகிர்ந்து, உயர்த்திக் கொடுக்கின்ற ஒருமுறை இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கரும்புச் சக்கைகளைக் கொண்டு காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவிட நிதிநிலை அறிக்கையிலேயே நான் அறிவித்திருக்கிறேன். அடுத்த கட்டமாகத் தென்னார்க்காடு மாவட்டத்திலே காகித உற்பத்தி செய்கின்ற ஒரு தொழிற்சாலை கிட்டத்தட்ட 500 கோடி ரூபாயிலிருந்து ஆயிரம் கோடி ரூபாய் வரை அமையக் கூடியதாக உருவாக இருக்கிறது. சர்க்கரை உற்பத்தியிலிருந்து கிடைக்கும் 'மொலாசஸ்'சிலிருந்து எரிசாராயம் தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் அரசின் சார்பிலேயே ஏற்படுத்தத் திட்டமிட்டு, சேலத்திலும் அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலேயும் எரிசாராயத் தொழிற்சாலைகளை நாம் உருவாக்க இருக்கிறோம்.

தொழில் வளத்தில், ஏற்கெனவே மூன்றாவது இடத்தில் இருந்த தமிழ்நாடு- 1989-ல் நாங்கள் ஆட்சிக்கு வருகின்ற நேரத்திலே 13-வது இடத்திற்குப் போய் விட்டிருந்தது. அதனை மீண்டும் மூன்றாவது இடத்திற்காவது கொண்டு வந்து சேர்க்கும் பணி இந்த அரசுக்கு இருக்கிறது. அதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை''.

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார். இவ்விழாவில் ஒரு பெண் குழந்தைக்கு 'மணிமேகலை' என்று பெயரிட்டார்.

விழா முடிவில்- வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை தனி அலுவலர் திரு சி. ஆரோக்கியசாமி நன்றி கூறினார்.

## வெடிமருந்து தொழிற்சாலை

இரண்டாவது நிகழ்ச்சியாக, வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம், காட்பாடிக்கு அருகில் உள்ள 'டெல்' குடியிருப்பில்- ரூ.42.59 கோடி மொத்த முதலீட்டில் வெடி ஊக்கி திட்டத்துவக்க அடையாளமாகத் தாமத வெடி ஊக்கி விற்பனைத் துவக்கம் மற்றும் கலவை வெடிமருந்து அடிக்கல் நாட்டுவிழா, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

'டிட்கோ' மற்றும் 'டெல்' தலைவர் திரு க. வெங்கடேசன் இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்றினார். நிர்வாக இயக்குநர் திரு சுகவனேஸ்வர் இ.ஆ.ப. அவர்கள் திட்ட அறிக்கை படித்தபோது இத்தொழிற்சாலை மூலம் 995 பேர் வேலைவாய்ப்புப் பெற்றிருப்பதாகத் தெரிவித்தார். திரு அ.க.அ. அப்துல் சமது எம்.பி. வாழ்த்துரை வழங்கினார்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்கள் தலைமையுரையாற்றுகையில்- ''என் பெயர் முருகனாக இருப்பதாலோ என்னவோ, எனது தொகுதியில் மலைமேல் அமைந்திருப்பதாக இந்த ஒரே ஒரு தொழிற்சாலை அமைந்திருக்கிறது'' என்று நகைச்சுவை ததும்பக் குறிப்பிட்டார்.

திட்டங்களைத் துவக்கிவைத்துச் சிறப்புப் பேருரை ஆற்றிய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்- ''வெடி மருந்துத் தொழிற்சாலை எனினும் அழிவுக்குப் பயன்படாமல் ஆக்கப் பணிக்குப் பயன்படுவது இது'' என்று குறிப்பிட்டார். ''பாட்டாளி வர்க்கத்தை நாம் என்றுமே அலட்சியப்படுத்தியதில்லை: தொழிற்சாலைகளிலே பணிபுரிகிற நேரத்தில் மட்டுமல்ல; வெளியே, அதற்குப் பிறகும் தொழிலாளர்கள் நலம் காணத் துணை நிற்கும் அரசு இது'' என்றும் தமது உரையில் தெரிவித்தார்.

விழா முடிவில்- பொது மேலாளர் திரு வி. பாலகிருஷ்ணன் நன்றி கூறினார்.

## பெரியார் சிலை திறப்பு

அன்று மாலை, வேலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில், ஏறத்தாழ ரூ. 70 ஆயிரம் செலவில் உருவாக்கப்பட்ட தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலையை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்.

. மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்களும் இந்த விழாவில் கலந்து கொண்டார். ஒன்றியப் பெருந்தலைவர் திரு நா. சுப்பிரமணியம் வாழ்த்துரை வழங்கினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில்...



மாண்புமிகு முதல்வர் அவர்கள், தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

**''வீழ்ந்துபட்ட இந்தச் சமுதாயம் தலை நிமிர வேண்டும் என்பதற்காக 95 வயது வரையிலே ஓடியாடி உழைத்து, இறுதி யாக இதே வேலூர் மருத்துவமனையில் உடல் நலிவுற்றுத் தன்னுடைய விழிகளை மூடிய ஐயா அவர்கள், கோடிக்கணக் கான மக்களின் வழிகளைத் திறந்த பெருமைக்குரியவராவார். சிலர் இந்த அரசு மீது இப்போது புழுதிவாரித் தூற் றிடக் காரணமே- பெரியாரின் அடி மட்டக் கொள்கைகளை உள்ளத்திலே ஏந்தி, அறிஞர் அண்ணா அவர்களின் இலட்சியங்களைப் பரப்புகின்ற பணியிலே ஈடுபட்டிருக்கின்ற ஒரே ஒரு காரணம் தான். அந்த எதிர்ப்புக் கண்டு கலங்கி, பெரியாரினுடைய கொள்கைகளையோ, அண்ணாவினுடைய இலட்சியங்களையோ நாம் விட்டுவிடப் போகின்றவர்கள் அல்ல; அந்த உறுதியை இந்தச் சிலை நிழலில் நாம் மீண்டும் ஒருமுறை எடுத்துக் கொள்வோம்''.**

வாழ்த்துரையின் போது- ''இத்தனை யாண்டுக்காலமாக நாங்கள் கண்டு வந்த கனவை நனவாக்கியமைக்காக- இலங்கை அரசு செய்யத்தவறிய ஒரு நல்ல காரியத் தைச் செய்தமைக்காக எங்கள் குடும்பத்தின் சார்பில் எங்கள் வாரிசுகளின் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்'' என்று கண்கலங்கி, உணர்ச்சி வசப்பட்டு நாத் தழுதழுக்கக் கூறினார்.

திரு தி.அ. முகமது சகி எம்.பி., திரு வி.எம். தேவராஜ் எம்.எல்.ஏ., மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்கள் ஆகியோர் வாழ்த்துரைக்குப் பின்னர் மாண்புமிகு செய்தி தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தலைமையுரை யாற்றினர். அவர்கள் தமது தலைமையுரையில்- ''இந்த நாட்டுக்காகப் பாடுபட்ட அண் மைக்காலத் தியாகிகளை மட்டுமல்ல; தமிழ் மண்ணுக்காகப் பாடுபட்ட பழந் தமிழ் மன்னர்களையும் கூட மாண்புமிகு

**விக்கிரம ராஜ சிங்கனின் இயற்பெயர் கண்ணுசாமி; கண்டியிலே அவர் ஆளு வதற்கு வழிவகுத்துக் கொடுத்ததே பண் டாரக வன்னியன்தான். இத்தகைய சிறு சிறு வரலாற்றுக் குறிப்புகளை வைத்துத் தான் 'பாயும் புலி பண்டாரக வன்னியன்' என்று ஒரு தொடர் கதையை நான் எழுதினேன். விரைவில் அது நூலாக வெளிவரவிருக்கிறது.**

நான் ஆட்சிப் பொறுப்பிலே இல்லாத போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த பொழுது தான் இந்தக் கல்லறையை யெல்லாம் புகைப்படம் எடுத்து பத்திரி கைகளிலும் வெளியிட்டேன்.

இப்போது இந்த முத்து மண்டபம் இங்கே எழுப்பப்பட்டுள்ள காரணத்தால் இங்கே நல்ல சாலைகளெல்லாம் அமைய விருக்கின்றன. இந்தப் பரந்த வெளியில் ஒரு அழகான சோலையும், அருங்காட்சி யகமும் அமையவிருக்கின்றன. அந்த அருங்காட்சியகத்தில் கண்டி மன்னனு டைய வரலாறெல்லாம் செதுக்கப்பட்டு, இது ஒரு நல்ல சுற்றுலா மையமாக வட ஆர்க்காடு மாவட்டத்தில் விளங்கவிருக் கிறது.

# குடியிருப்புத் திறப்பு விழா

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் (29.6.90) அன்று, செங்கை அண்ணா மாவட்டம் ஆதனூரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்காக 35 ஏக்கர் நிலப் பரப்பில் ரூ. 2 கோடியே 72 இலட்சம் செலவில் கட்டப்பட்ட 412 வீடுகள் கொண்ட குடி யிருப்பினைத் திறந்து வைத்தார். விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கண்ணப்பன் அவர்களும், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு கே. சுந்தரம் அவர்களும் மற்றும் சட்டமன்ற ஊராட்சி மன்ற உறுப்பினர்களும் உயர் அதிகாரிகளும் பங்கேற்றார்கள்.

**முத்து மண்டபம்**

இலங்கையை ஆண்ட கடைசித் தமிழ் மன்னன் கண்டி விக்கிரம ராஜ சிங்கன் நினைவு முத்து மண்டபம்-ரூ7.5இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டிருந்தது; அதன் திறப்பு விழா அன்று மாலை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு செய்தி தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்கள் தலைமை தாங்கினார்.

இவ்விழாவில் வரவேற்புரையாற்றிய திருமதி ஜெயந்தி இ.ஆ.ப., பேசுகையில் ''இந்த முத்து மண்டபம், நாட்டுப்பற்றை எடுத்துக்காட்டும் சின்னமாக விளங்கும்'' என்றார். அதையடுத்து- முத்து மண்ட பத்தை உருவாக்கிய தமிழ்நாடு கட்டு மானக் கழக நிர்வாக இயக்குநர் திரு இரத்தினவேலு திட்ட விளக்கவுரை யாற்றினார். வேலூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு நா. சுப்பிரமணியம் வாழ்த் துரை வழங்கினார்.

கண்டி மன்னன் விக்கிரமராஜசிங்க னின் வாரிசான திரு ராஜசிங்கன் தமது

முதல்வர் அவர்கள் பெருமைப்படுத்தி வருகிறார். தஞ்சாவூரில் மாமன்னன் ராஜராஜனுக்குச் சிலை வைத்தது போலவே இங்கே இலங்கையை ஆண்ட கடைசித் தமிழ் மன்னன் கண்டி விக்கிரம ராஜ சிங்கனுக்கு நினைவு முத்து மண்டபத்தை முதல்வர் அவர்கள் அமைத்திருக்கிறார்கள்; இப்படிப்பட்ட உயரிய பணிகளுக்காகவே தலைவர் அவர்களைத் தமிழ் மக்கள் இதயத்தில் ஏந்துவார்கள்'' என்று தெரி வித்தார்.

முத்து மண்டபத்தைத் திறந்து வைத்து, ஆவண மலரை வெளியிட்டு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''இலங்கையில் கண்டி பகுதியை ஆண்ட தமிழ் மன்னர்களில், கடைசியாக ஆங்கிலேயரை எதிர்த்து நின்று 1816-ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களால் சிறைப் பிடிக்கப்பட்டு, வேலூர் கோட்டையிலுள்ள சிறைச்சாலையில் பதினாறாண்டுக்காலம் குடும்பத்தோடு அடைக்கப்பட்டு வேலூர் கோட்டைச் சிறைச்சாலைக்குள்ளேயே மாண்டுபோன மன்னன் விக்கிரம ராஜசிங்கன்தான் இங்கே கல்லறை வடிவாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றான்.

**இதற்கு நான் முத்து மண்டபம் என்று பெயரிட்டதற்குக் காரணமே- ஆழமான கடலில் தேடி எடுப்பது போல, இங்கே அடர்ந்து கிடந்த குடிசைகளுக்கு மத்தியில் இந்த முத்தை நாம் கண்டெடுத்திருக் கிறோம் என்பதால்தான். இந்த முத்து மண்டபம் தமிழர்களுடைய இன உணர்வைப் பறைசாற்றட்டும்; இந்த முத்து மண்டபம் இலங்கையிலே கடைசி வரையில் ஆங்கிலேயர்களை எதிர்த்த ஒரு தமிழ் மன்னனுடைய வீரத்தை முரசொலிக்கட்டும்; அந்த நினைவு என்றென்றும் நமக்கு எழுச்சியைத் தரட்டும்!''**

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மா. சத்தியமூர்த்தி இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்.

இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு குழந்தைக்கு 'மதிவாணன்' என்று பெயர் சூட்டினார்.

**மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம்**

அன்றிரவு 7 மணியளவில் - வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற மாபெரும் விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தார்.

விழாவிற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் தலைமை தாங்கினார்.

செய்தி-சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி ஜெயந்தி இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

திரு வி.எம். தேவராஜ் எம்.எல்.ஏ., தொழில் நுட்பக் கல்வித்துறை இயக்குநர் டாக்டர் டி.ஆர். நடேசன், வருவாய்த் துறைச் செயலாளர் திரு ஏ.எம். சாமிநாதன் இ.ஆ.ப., திரு பி. அப்துல்சமது எம்.எல்.ஏ., திரு வி. கோவிந்தன் எம்.எல்.ஏ., டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு விழாக் குழு உறுப்பினர் டாக்டர் பெருமாள், திரு வை. பாலசுந்தரம், திரு கே.ஆர். சுந்தரம் எம்.எல்.ஏ திரு டப்ள்யூ. ஆர். வரதராசன், திருமதி சத்தியவாணிமுத்து, திரு ஆர். ஜீவரத்தினம் எம்.பி., திரு தி.அ. முகமது சகி எம்.பி., திரு அ.க.அ. அப்துல் சமது எம்.பி., ஆகியோர் இவ்விழாவில் உரையாற்றினார்கள்.

அதைத் தொடர்ந்து மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித்துறை- மற்றும் மின்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்களும், சிறப்புரையாற்றினார்கள்.

விழா மேடைக்கு வருமுன், வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்ட அலுவலகக் கட்டட வளாகத்தில் உள்ள அறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாலை யணிவித்தார். சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு அவர்களின் துணைவியாருக்குப் பொன்னாடை அணிவித்தார்.

டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு விழாவினைத் தொடங்கி வைத்ததும், டாக்டர் அம்பேத்கர் சிலையைத் திறந்து வைத்தும் 'சி.பி. சிற்றரசு மாளிகை' எனப் பெயரிடப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தைத் திறந்து வைத்தும், பெரியார் அரசினர் பொறியியல் கல்லூரியைத் துவக்கி வைத்தும், அரசுத் திட்ட விளக்க முகாமைத் தொடங்கி வைத்தும், ஏழை எளிய மக்களுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கியும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய விழாப் பேருரைச் சுருக்கம் வருமாறு:

''இன்றைக்கு அம்பேத்கர் சிலையைத் திறக்கிறோம்; பெரியார் சிலையைத் திறக்கிறோம்; சி.பி.சி. அவர்கள் பெயரால் மாளிகையைத் திறக்கிறோம். அன்னை மணியம்மையார் பெயரால் வளாகத்தை இங்கே உருவாக்கி வைத்திருக்கிறோம், பெரியார் பெயரால் பொறியியற் கல்லூரியைத் திறந்திருக்கிறோம். இந்தப் பெரியவர்கள் எந்தத் தத்துவத்திற்காக- கொள்கைக்காக- இலட்சியத்திற்காகப் பாடுபட்டார்களோ, எந்த மக்களுடைய நல்வாழ்வை மையமாக வைத்து உழைத்தார்களோ, கருத்துக்களைச் சொன்னார்களோ அவைகளைச் செயல்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் நலிந்தோருக்காக, ஏழை எளிய விவசாயிகளுக்காக, தொழிலாளர்களுக்காக இந்த அரசு இதுபோன்ற கோடிக்கணக்கான ரூபாய்க்கான திட்டங்களை அறிவித்து அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

**''இங்கே இலட்சக் கணக்காகக் கூடியிருக்கிற தமிழ்ப் பெருங்குடிமக்களே, உங்களுக்கு நான் சொல்லிக் கொள்ளுவேன்- நான் வாழ்ந்தாலும் உங்களுக்காக வாழ்வேன்; வீழ்ந்தாலும் உங்களுக்காக வீழ்வேன். இதுதான் நான் உங்கள் மத்தியிலே எடுத்துக் கொள்ளுகின்ற தொடர் சபதம்.''**

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேசினார்.

விழாமுடிவில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மா. சத்தியமூர்த்தி இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்.

**—நிகழ்ச்சித் தொகுப்பு**
**பி.எல்.ஆர்.**

## அரசுத் துறைகளிலிருந்து 'தமிழரசு' இதழ்களுக்குச் சந்தாச் செலுத்துவது குறித்த விதிமுறைகள்:

1. அரசுத் துறைகள் 'தமிழரசு' இதழுக்குச் சந்தா செலுத்துவதற்கு எந்தவிதக் கடன் பட்டியல்களும் (Invoice-Credit Bill) வழங்கப்பட மாட்டாது.

2. 'தமிழரசு' இதழுக்குச் சந்தா செலுத்திய தேதிக்குப் பிறகு வெளிவரும் இதழ்களிலிருந்துதான் சந்தாதாரர்களுக்கு இதழ்கள் அனுப்பப்படும்.

3. 'தமிழரசு' இதழ்களுக்கான சந்தாவைச் செலுத்தி, முன் தேதியிட்ட இதழ்களைக் கேட்டால் அவற்றை அனுப்ப இயலாது.

4. 'தமிழரசு' சந்தா கீழ்கண்ட விவரங்களின்படி செலுத்த வேண்டும்.

அ. தமிழரசு (தமிழ்) ஆண்டுச் சந்தா ரூ. 24.000

தமிழரசு (தமிழ்) அரையாண்டுச் சந்தா ரூ. 12.00

ஆ. தமிழரசு (ஆங்கிலம்) ஆண்டுச் சந்தா ரூ.12.00

ஆங்கில இதழுக்கு அரையாண்டுச் சந்தா கிடையாது.

சந்தாத் தொகையைப் பணவிடை (Money Order) அல்லது வங்கி வரைவோலை (Demand Draft) மூலம் உதவி இயக்குநர், (விற்பனை-விநியோகம்) (Assistant Director (Circulation) )தமிழரசு அலுவலகம் என்ற பெயருக்குத் 'தமிழரசு' அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002 என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

5. சந்தாத் தொகை கிடைத்த பிறகே இதழ்கள் அனுப்ப முடியும். சந்தா செலுத்தும், முன்புள்ள பழைய இதழ்களை எக்காரணம் கொண்டும் சேர்த்து அனுப்ப இயலாது.

6. சந்தா செலுத்திய பிறகு சந்தா எண்ணைக் குறிப்பிட்டுத் 'தமிழரசு' அலுவலகத்திலிருந்து கடிதம் அனுப்பிய பிறகு, அச்சந்தா எண்ணைக் குறிப்பிட்டே கடிதம் எழுத வேண்டும்.

தமிழரசு இதழ்களைச் சரிவர விநியோகிக்கவும் தகுந்த முறையில் கடிதங்களுக்குப் பதில் கடிதங்கள் அனுப்பவும், மேற்படி விதிமுறைகளைக் கடைபிடிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**—உதவி இயக்குநர்**
**(விற்பனை-விநியோகம்)**
**தமிழரசு அலுவலகம்,**
**சென்னை-2.**

**TNPSC**

**விளம்பர எண்: 22/90**

தமிழ்நாடு பொதுச் சார்நிலைப் பணியில், தமிழ்நாடு திரைப்படப் பிரிவில் செய்தித் திரைப்பட ஒளிப்பதிவாளர் (Newsreel Cameraman) பதவியில் இரண்டு காலியிடங்களுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 30.7.1990 அன்று மாலை 5.45 மணி வரையில் வர வேற்கப்படுகின்றன. (நியமன ஒதுக்கீட்டு விதி இத்தெரிவுக்குப் பொருந்தாது).

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூ.1,820-60-2,300-75-3,200

**வயது:** 1.7.1990 அன்று 35-க்குக் குறைவாக.

**தகுதி: அ:** (i) ஸ்டேட்போர்டு ஆஃப் டெக்னிகல் எஜுகேஷன் அண்டு ட்ரெய்னிங், தமிழ்நாடு, சென்னை அவர்களால் வழங்கப்பட்ட சினிமாடோகிராபியில் ஒரு பட்டயம் (Diploma) மற்றும்

(ii) ஃபீட்சர் (Feature) ஃபிலிம்ஸ் அல்லது டாக்குமென்டரி ஃபிலிம்ஸ் அல்லது நியூஸ்ரீல் ஃபிலிம்ஸ் தயாரிப்பில் ஒளிப்பதிவாளராக மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத செயல் வழி அனுபவம்.

அல்லது

ஆ. (i) குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதி; மற்றும்

(ii) ஒளிப்பதிவாளராக ஏழு ஆண்டுகளுக்குக் குறையாத செயல்வழி அனுபவம்.

**குறிப்பு:** தெரிவுக்குரிய குறைந்தபட்ச மதிப்பெண்களையேனும் பெறும், இப்பதவிக்கான கல்வித் தகுதியைப் பெற்ற ஆதரவற்ற விதவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விளக்கம்:** "ஆதரவற்ற விதவை" என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும் பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்கும் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் "பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில் தரப் பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2. அவர்களுக்கு எழுத்துமூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 19.6.1990 அன்றோ அதற்குப்பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை அண்ணா சாலை தலைமை அஞ்சல் நிலையத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 19.6.1990 அன்றோ அதற்குப்பிறகோ வாங்கப்பட்ட, பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம் விளக்கு கிளை, சென்னை-600 006-ல் செலுத்தத்தக்க ரூபாய் 10/-க்கான கேட்புக்காசோலை (Demand Draft)-யுடன் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்பட மாட்டா.

டிஐபிஆர்/1551/எம்.எஸ்/90/அக்கார்ட்

## பெருந்தலைவர்

# காமராசர்



### வாழ்க்கைக் குறிப்பு

1903- விருதுபட்டி என்னும் விருது நகரில் குமாரசாமி நாடார் சிவகாமி அம்மாள் தம்பதிக்கு 1903 ஜூலை 15 அன்று மகனாகப் பிறந்தார். 1907-ல் தங்கை நாகம்மாள் பிறப்பு.

1908- காமராசர் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் சேர்க்கப்பெற்றார். ஏனாதி நாயனார் வித்யாசாலாவிலும், சத்திரிய வித்தியாசாலாவிலும் சேர்ந்து படித்தார்.

1909- தந்தை மறைவு. தாய்மாமன் கருப்பையா நாடார் காமராசர் குடும்பத்திற்கு உதவியாக இருந்தார்.

1914- ஆறாவது வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபோது, பள்ளி செல்வதை நிறுத்திக் கொண்டார்.

1919- ஏப்ரல் - ரவுலட் சட்டத்தை எதிர்த்துக் காந்தியடிகள் விடுத்த அழைப்பை ஏற்றுக் காங்கிரசின் முழு நேர ஊழியரானார்.

1920- ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டார்.

1921- தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிச் செயலராக இருந்த பெரியாரை முதன் முதலாக விருதுநகரில் சந்தித்து, அவரது உறுதி மிக்க பேச்சுத் திறனைப் போற்றினார்.

1923- நாகபுரி கொடிப் போராட்டத்தில் பங்கு கொண்டார். மதுரையில் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டார்.

1925- கடலூரிலிருந்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1926- சத்தியமூர்த்தி - சீனிவாச அய்யங்கார் ஆகியோருடன் தேர்தல் பணி புரிந்தார்.

1927- சென்னையில் கர்னல் நீல் சிலையை அகற்றும் போராட்டத்தை நடத்த அண்ணல் காந்தியிடம் அனுமதி பெற்றார். போராட்டம் நடைபெறுவதற்குள் அரசாங்கமே நீல் சிலையை அகற்றிவிட்டது.

மதுரைக்கு வருகைபுரிந்த சைமன் குழுவை எதிர்த்தார்.

1930- வேதாரண்யத்தில் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டதால், இரண்டாண்டு அலிபூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

1931- காந்தி இர்வின் ஒப்பந்தம் காரணமாகக் காமராசர் விடுதலை செய்யப்பட்டார். இராமநாதபுரத்திலிருந்து சென்னை மாநிலக் காங்கிரஸ் செயற்குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1933- சதி வழக்கில் காமராசர் சிறைக்கனுப்பப்பட்டு, குற்றம் நிரூபிக்கப் படாததால் விடுதலை செய்யப்பட்டார்.

1934- காமராசர் உழைப்பால் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வென்றது.

1936- காரைக்குடியில் நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டித் தேர்தலில் சத்தியமூர்த்தி தலைவராகவும், காமராசர் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1937- சட்டமன்றப் பொதுத் தேர்தலில் விருதுநகர் தொகுதியில் வென்றார். விருதுநகர் நகராட்சி மன்றத் தேர்தலில் 7-வது வார்டில் போட்டியிட்டு வென்றார்.

1940- தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரானார்.

1941- யுத்தநிதிக்கு எதிர்ப்புப் பிரச்சாரம் செய்ததால், கைது செய்யப்பட்டு, வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

சிறையில் இருக்கும்போதே 1941-மே 31 விருதுநகர் நகராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1942- மார்ச்-சிறையிலிருந்து விடுதலையானதும், ஒருநாள் மட்டும் நகராட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிறகு, தீவிர கட்சிப் பணிக்காக நகராட்சித் தலைவர் பதவியை விட்டு விலகினார்.

1942- ஆகஸ்ட்டு போராட்டத்தில் கைது செய்யப்பட்டு, அமராவதி சிறைச் சாலையில் இரண்டு ஆண்டுகள் கழித்த பிறகு, வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டார். 1945-ல் விடுதலை ஆனார்.

1946- மே 16—தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்றார். அதே ஆண்டு சென்னை சட்டமன்றத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1947- ஆகஸ்ட்டு 15 - இந்தியா விடுதலை பெற்றது. நேருவின் தலைமையில் இடைக்கால அரசு உருவானது. அண்ணல் காந்தியடிகளைப் போற்றி அறிக்கை வெளியிட்டார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் ஆனார்.

1948- மூன்றாவது முறையாகத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஆனார்

1949- இலங்கையில் சுற்றுப்பயணம்.

1950- நான்காவது முறையாகத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஆனார். 1952- தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக டாக்டர் சுப்பராயன் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வழிவகுத்தார்.

1952- நாடாளுமன்ற உறுப்பினர்- சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் பெரும்பான்மை பெறமுடியவில்லை. இராஜாஜி முதலமைச்சர் ஆவதற்குக் காமராசர் ஒத்துழைப்பு நல்கினார். 1952 டிசம்பரில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1953- இலங்கையில் சுற்றுப் பயணம் செய்தார்.

1954- பிப்ரவரியில் மலாய் நாட்டில் சுற்றுப் பயணம். குலக் கல்வித் திட்ட எதிர்ப்பு காரணமாக இராஜாஜி முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்யவும், சட்டமன்றக் காங்கிரஸ் கட்சித் தலைவராகக் காமராசர் போட்டியிட்டு வென்றார்.

1954- ஏப்ரல் 13— சென்னை மாநிலத்தின் முதலமைச்சர் ஆனார். குடியாத்தம் தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிட்டு வென்றார்.

1955- ஆவடி காங்கிரஸ் மாநாடு வெற்றிகரமாக நடைபெற காமராசர் அரும் பணி ஆற்றினார்.
இராமநாதபுரம் மாவட்டத்தில் புயலாலும் பேய் மழையாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்த்து, நிவாரண உதவிகளைச் செய்தார்.

1956- மொழிவழி மாநிலம் என்ற திட்டத்தின்படி புதிய தமிழகம் உருவாவதற்கு ஆதரவு தெரிவித்தார். பள்ளிகளில் இலவச மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

1957- பொதுத் தேர்தலில் போட்டியிட்டு, வென்று, இரண்டாவது முறையாக முதலமைச்சர் ஆனார்.

1960- ஏழைப் பிள்ளைகள் அனைவருக்கும் 11-ஆம் வகுப்பு வரை இலவசக் கல்வி அளித்தார்.

1961- அக்டோபர் 9-சென்னை மாநகராட்சி உருவாக்கிய காமராசர் திருவுருவச் சிலையைப் பிரதமர் நேரு திறந்து வைத்தார்.

1962- பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று, மூன்றாவது முறையாக முதலமைச்சர் ஆனார்.

1963- எல்லாருக்கும் இலவசக் கல்வித் திட்டத்தை அமல்படுத்தினார். அக்டோபர் 2- காமராசர் திட்டத்தின் படி முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார்.

1964- அனைத்திந்தியக் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மே 27-ல் நேரு அவர்கள் மறைந்த பிறகு, லால் பகதூர் சாஸ்திரி பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட காமராசர் ஆவன செய்தார்.

1965- இந்தியா - பாகிஸ்தான் போர் ஏற்பட்டபோது பஞ்சாப் போர் முனைப் பகுதிகளுக்குக் காமராசர் சென்று வீரர்களை உற்சாகப் படுத்தினார்.

1966- தாஷ்கண்ட் சென்று லால்பகதூர் மறைவு எய்தியதால், இந்திராகாந்தி, பிரதமராவதற்குக் காமராசர் ஆவன செய்தார். சோவியத் நாட்டிற்கும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் காமராசர் சென்று வந்தார்.

1967- பொதுத் தேர்தலில் காமராசர் தோல்வியடைந்தார்.

1969- நாகர்கோயில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு பெற்றார்.
காமராசர் அவர்களின் தாயார் மறைவு.

1971- பொதுத் தேர்தலில் காங்கிரஸ் தோல்வி. நாடாளுமன்ற உறுப்பினராகக் காமராசர் தேர்வு.

1972- தாமிரபத்திர விருது பெற்றார்.

1975- பெருந்தலைவர் காமராசர் 1975 அக்டோபர் 2 அன்று அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாளில் நம்மைவிட்டு உடலால் பிரிந்தார். நினைவாக நம் நெஞ்சில் நிறைந்திருக்கிறார்.

தொகுப்பு: வ. இராசமனோகரன்


உன் பிறந்தநாள்
சிறந்த நாள்!
தனிமனிதன் வாழ்வல்ல உன்வாழ்வு
தன்மானச் சரித்திரத்தின் அத்தியாயம்!
குமரிமுதல் இமயம்வரை உன்கொடிபறக்கக்
கோலமிகு தமிழகத்தில் புகழ்பொழித்தாய்
'குணாளா! குலக்கொழுந்தே!' என்று பண்பின்
மணாளர் எங்கள்அண்ணன் உனைஅழைத்தார்!
பச்சைத் தமிழன்எனப் பகுத்தறிவுத் தந்தை
இச்சையுடன் உன் உச்சி முகர்ந்தார்!
கருப்புக் காந்தியென உன்னை - இந்தக்
கடல்சூழ் நாடு கைகூப்பித் தொழுததன்றோ!
வாழ்க்கையின் ஓரத்தில் நீ எம்மிடம்வாஞ்சையும் காட்டினாய் - உன்
வாழ்வையே ஒரு பாடமாய் அனைவர்க்கும் நிலைநாட்டினாய்!
இன்றைக்கு உன்றன் பிறந்தநாள்;
என்றைக்கும் அது சிறந்தநாள்!
—15.7.1976ல், பெருந்தலைவர் காமராசர் பிறந்தநாளன்று 'முரசொலி'யில் எழுதிய கவிதை
முதல்வர் கலைஞர்

# சிறு சேமிப்புத் துறையின்
# பரிசுகள் இணைந்த
# சேமிப்பு பெருக்கும் திட்டம் 1990

## வென்றிடுங்கள் ஒரு அழகிய மாருதி கார்!




- ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கு வருமான வரி விலக்கு மற்றும் பரிசுகள்
- அனைத்து மாவட்டத்திலும் ஒவ்வொரு ஒரு லடசம் கூபபன்களுக்கு குலுக்கல் நடைபெறும்
- NSS 87ல் முதலீடு செய்து 100% வருமானவரி விலக்கு ரூ.40,000/- வரை பெற்றிடுங்கள்
- NSC 8வது வெளியீடு/PPF ல் முதலீடு செய்து கணிசமான அளவு வருமான வரி விலக்கு பெறுங்கள்.
- மத்திய அரசுக்கு இணையாக சிறுசேமிப்பு முகவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும்.
- ரூ.1000/-ம் அதற்கு மேலும் முதலீடு செய்பவர்களுக்கு 1% ஊக்கத்தொகை கிடைக்கும்*

ரூ.500/- முதலீடு செய்து பளபளப்பான புதிய மாருதி காருக்கு சொந்தக்காரர் ஆகும் அதிர்ஷ்டசாலி நீங்களாக கூட இருக்கலாம். சிறு சேமிப்பு–வரிவிலக்குடன் உயர் வருவாயை அளிக்கும் முதலீட்டு திட்டங்கள்,



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 முதல் பரிசு - பஜாஜ் ஸ்கூட்டர் | 2 இரண்டாவது பரிசுகள் - E.C. டி.வி. | 3 மூன்றாவது பரிசுகள் ரெப்ரிஜிரேடடர் | 5 நான்காவது பரிசுகள் - மோபா | 10 ஐந்தாவது பரிசுகள் தையல் எந்திரம் | 10 ஆறாவது பரிசுகள் - சைக்கிள் | 30 ஏழாவது பரிசுகள் - குவார்ட்ஸ் கைக் கடிகாரம் | 200 ஆறுதல் பரிசுகள் - சுவர்க்கடிகாரம் |

ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு இலவச பரிசுக்கூப்பன் பெற்றிடுங்கள். தனி நபர்கள் மட்டுமே கீழ்க்கண்ட திட்டங்களில் தமிழ்நாட்டில் ஜுன் '90 முதல் டிசம்பர் '90 வரை முதலீடு செய்து பெறலாம்.
சேமிப்பு பத்திரம் எல்லா அஞ்சல் நிலையங்களில் கிடைக்கும்

- தேசிய சேமிப்பு பத்திரம் 8வது வெளியீடு
- தேசிய சேமிப்பு திட்டம் 1987
- பொது சேமநல நிதி
- மாதாந்திர வருமானத் திட்டம்
- விவசாயிகள் சேமிப்பு பத்திரம்
  இந்திரா சேமிப்பு பத்திரம்
- அஞ்சலகக் குறித்தகால முதலீடு
- அஞ்சலக தொடர்வைப்புத் திட்டம்/ வளரும் மாத சேமிப்புத்திட்டம்

பரிசுக் கூப்பன்கள்–
மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள்,
வட்டாட்சியர் அலுவலகங்கள்
வட்டார வளர்ச்சி
அலுவலங்களில் கிடைக்கும்.

இயக்குநர்,
சிறுசேமிப்புத்துறை
143, அண்ணா சாலை,
சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209

DIPR/MS/90/ARIES



## சென்னையில்

# பாபு ஜெகஜீவன்ராம்

## திருவுருவச்சிலை திறப்பு

**மா**ண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் 28.6.90 அன்று சென்னையில் - முன்னாள் இந்தியத் துணைப் பிரதமர் பாபு ஜெகஜீவன்ராம் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார்.

காமராசர் சாலையில் - சேப்பாக்கம் எழிலகத் தின் முன் அமைக்கப்பட்டுள்ள அந்தத் திருவுருவச் சிலையின் திறப்பு விழா நிகழ்ச்சி - சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்றது.

திருவுருவச் சிலையைத் திறந்து வைத்துப் பேசிய மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் - "நானும் பாபு ஜெகஜீவன்ராமும் நாற்பதாண்டுக் கால நண்பர்கள். சமூக ஏற்றத் தாழ்வுகளை நீக்கப் பாடுபட்ட அவர், எல்லாத் தரப்பு மக்களும் போற்றத்தக்கவராக விளங்கினார்" என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தமது தலைமை உரையில், திரு பாபு ஜெகஜீவன்ராம் அவர்களின் தொண்டு மனப்பான்மையைப் பெரிதும் புகழ்ந்துரைத்தார்.

முன்னாள் மத்திய அமைச்சர் திரு சவுத்ரி சந்த்ராம், பாபு ஜகஜீவன்ராம் அவர்கள் புதல்வி திருமதி மீராகுமார், இந்தியன் வங்கித் தலைவர் திரு எம். கோபாலகிருஷ்ணன், துறைமுகப் பொறுப்புக் கழகத் தலைவர் திரு ஆ. பால்ராஜ், இ.ஆ.ப., திரு முனுசாமி ஆகியோர் இவ்விழா வில் உரையாற்றினர். திரு எம். குப்புசாமி வர வேற்புரையாற்றினார். விழா முடிவில் திரு எம். அழகர்சாமி நன்றி கூறினார்.

சென்னை-திருவல்லிக்கேணியில் உள்ள பெல்ஸ் சாலை, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணைப்படி 'பாபு ஜெகஜீவன்ராம் சாலை' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது!



பெண்கள் விழிப்படைந்தால்- குடும்பம் முன்னேறும்; கிராமங்கள் முன்னேறும்; தேசமே முன்னேறும்!

நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதிலும், ஒற்றுமையோடு பாடுபடுவதிலும்தான் நமது முன்னேற்றம் இருக்கிறது!

—பெருந்தலைவர் காமராசர்

K. THAMPURAN
PROPRIETOR

# SREE KUMARI HANDICRAFTS COMPLEX

4-A, MADAVA PURAM, KANNIYAKUMARI-629 702.

*SHOW ROOM*

SREE KUMARI HANDICRAFT STORE
SANNATHI STREET, KANNIYAKUMARI

PHONE:286.



உத்தரவாதமுள்ள 22 காரட் தங்க நகைகளுக்கு

# அலி ஜூவல்லர்ஸ்

மீனாட்சிபுரம்,
நாகர்கோவில்

தொலைபேசி

கடை: 3397, 4421
வீடு: 3700, 7200

- மின் உற்பத்தியைவிட மின்சாரத்தைச் சேமிப்பதில் நாம் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்!
- தமிழகத்தில் இப்பொழுது உள்ள பத்து சதவிகித மின்வெட்டும் ஜூலை 1 முதல் இருக்காது!

—முதல்வர் கலைஞர்



# எரிசக்தி 90

'எரிசக்தி '90' என்னும் பொருட்காட்சி மற்றும் கருத்தரங்கின் தொடக்கவிழா 28.6.90 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடந்தது.

பொருட்காட்சியைத் தொடங்கி வைத்து, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்—

தமிழகத்தில் 1989-ஆம் ஆண்டில் நாங்கள் மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்டபோது நம்முடைய் பொதுப் பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகன் குறிப் பிட்டதைப் போல் மின்வெட்டு பெரும் அளவிற்கு நம்மைத் தாக்குகின்ற நிலைமை இருந்தது. ஒரு அறுபது சதவிகிதம் மின்வெட்டு இருக்கக் கூடிய சூழலிலேதான் இந்த அரசு பொறுப்பேற்க நேர்ந்தது. அத்தகைய ஒரு பயங்கரமான சூழ்நிலை தமிழகத்திலே ஏற்படுவதற்கு முக்கியமான காரணமாக நாங்கள் பொறுப்பிற்கு வருவ தற்கு முன்பே 10.10.1988-ஆம் நாள் எண்ணூரிலே அனல் மின்நிலையத்தில் ஏற்பட்ட ஒரு பெரும் தீ விபத் தின் காரணமாக ஒவ்வொன்றும் 110 மெகாவாட் திறன் கொண்ட மூன்றாவது மற்றும் நான்காவது பிரிவுகள் இயங்காமலே போய்விட்டன. நான் வேடிக்கையாக அல்ல, வேதனையோடு சொல்லிக் கொள்கிறேன். அந்தச் செய்தி கூட நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகுதான் அரசின் கவனத்திற்கே வந்தது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போலவே தேர்தல் நடைபெறுகின்ற அந்தக் கால கட்டத்திலே 25.1.89 அன்று அந்த அனல் மின் நிலையத்திலே 110 மெகாவாட் திறன் கொண்ட ஐந்தாவது பிரிவும் பழுதடைந்து மின் உற்பத்தி மேலும் பாதிக்கப்பட்டது. அதே நாளில் சொல்லி வைத்தாற் போல் திருப்பெரும்புதூரில் 400 மெகாவாட் திறன்

21-வது ஆண்டில் 'தமிழரசு'

# தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டுபுரியும் 'தமிழரசு'

எல்லா அரசுகளும் தங்கள் சாதனைகளை விளக்கும் பத்திரிகைகளை நடத்துகின்றன. எனினும், அவற்றுள் எதையும் பொதுமக்கள் விரும்பி வாங்கிப் படிப்பதில்லை. தமிழக அரசு நடத்தும் 'தமிழரசு' ஒன்று மட்டும் பொதுமக்களிடமும் விற்பனையாகும் பத்திரிகையாக உள்ளது. அது தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் தொண்டு செய்து வருகிறது.

தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளிலும் வெளியிடப்பெற்ற 'பாக்கிய லட்சுமி', சௌபாக்கியம், மேழிச் செல்வம், இன்காம், ஆரோக்கிய மார்க்கம், மெட்ராஸ் ஹெல்த் எஜுகேஷன், சீரணி (கிராம நலம்) ஆகிய 7 பத்திரிகைகளையும் ஒருங்கிணைத்து 1.7.1970-இல் தமிழ்நாடு அரசு, 'தமிழரசு' என்னும் பெயரில் திங்கள் இருமுறை இதழ் ஒன்றை நிறுவியது.

'தமிழரசு' இதழில் 'வெண்பாப் போட்டி' துவக்கப் பெற்று, தமிழ்க் கவிஞர்களுக்கு ஊக்கமும், கவிதைத் துறை வளர நல்லதொரு சூழ்நிலையும் உருவாகியுள்ளது. இதுவரை 67 வெண்பாப் போட்டிகள் நடைபெற்றுள்ளன. முதலமைச்சர் கலைஞர், இவ்விதழில் எழுதிய 'இனியவை இருபது' என்ற பயணக் கட்டுரைத் தொடர், நூல் வடிவில் வெளிவந்துள்ளது.

ஆதாரம்: 'தமிழ் இதழ்கள்'
சோமலெ
சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு (1975)

---

கொண்ட துணை மின் நிலையத்தில் 315 மெகாவாட் (டிரான்ஸ்பார்மர்) மின்மாற்றி எந்திரம் பழுதடைந்து சென்னை மாநகரத்தினுடைய மின் விநியோகம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

இப்படி அடிமேல் அடி விழுந்து இடிமேல் இடி விழுந்து நாங்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்ட அந்தக் காலக் கட்டத்தில் மின்வெட்டு அறுபது சதவிகிதம் என்ற அளவிற்கு உயர்ந்து நின்றது. இருந்தபோதிலும், இந்த அரசு தொய்வில்லாமல் தொடர்ந்து மிக வேகமாக எடுத்துக் கொண்ட முயற்சிகளின் காரணமாக எண்ணூர் அனல் மின் நிலையத்திலிருந்து மூன்று நான்கு மற்றும் ஐந்தாவது பிரிவுகளில் செப்பனிடும் பணி, அதைப் போலவே திருப்பெரும்புதூரிலே அமைந்துள்ள 315 மெகாவாட் மின்மாற்றியின் பழுது நீக்கும் பணி இவை களெல்லாம் வேகவேகமாக அப்போது நம்முடைய நேரு அவர்கள் மின்சாரத்துறை அமைச்சராக பொறுப்பேற்றி ருந்த கால கட்டத்தில் மிக வேகமாக நடைபெற்றன.

மேட்டூர் அனல் மின்நிலையத்திலே புதிய இரண்டு உற்பத்தி பிரிவுகளை 420 மெகாவாட் திறன் கொண்ட அந்தப் பிரிவுகளை விரைவாக அந்தப் பணியை முடித்து அதுவும் இயக்கி வைக்கப்பட்டது. நண்பர் வெங்கட்ராமன் பொறுப்பேற்றுள்ள இந்தத் துறையில் காற்றாலைகள் 14 மெகாவாட் திறனுக்கு நெல்லை கட்டபொம்மன் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் அமைக்கப்பட்டு அவை களும், பிறகு பைகாரா, வைகை போன்ற கீழ் பவானி நுண்புனல் உற்பத்தி மூலமாக 14 மெகாவாட் திறன் உள்ள அளவிற்கு நமக்கு மின் உற்பத்தியும் கிடைக்கக் கூடிய சூழ்நிலைகளும் ஏற்பட்டன.

நெய்வேலியிலும், கல்பாக்கத்திலும் அமைந்துள்ள மைய அரசினுடைய மின் உற்பத்தி நிலையத்திலேகூட நாம் எடுத்துக்கொண்ட தீவிரமான விரைந்த முயற்சி களின் காரணமாக உடனடியாக இவைகள் எல்லாம் இயங்க வழிகோலப்பட்டு 1.7.89 முதல் மின்வெட்டு 60 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதமாக குறைக்கப்பட்டு, பிறகு 25.7.89 அன்று முதல் 40 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதமாக மின் வெட்டு குறைக்கப்பட்டு, பிறகு 20.12.89 முதல் மின்சக்தி பயனீட்டில் இருந்த மின் வெட்டு 20 சதவிகிதத்திலே இருந்து 10 சதவிகிதமாக குறைக்கப்பட்டு, பிறகு 21.1.90-ல் மின்வெட்டு அறவே நீக்கப்பட்டது.

மின்வெட்டு அறவே நீக்கப்பட்டாலும் கூட டிமாண்ட் கட் 25.7.89-ல் 20 சதவிகிதமாக இருந்தது. பிறகு 16.2.90-ல் 10 சதவிகிதமாக அது குறைக்கப்பட்டு இன்று வரையிலே டிமாண்ட் கட் 10 சதவிகிதம்- அதுவும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மிகக் குறைவானது தான்.

உங்களிடத்திலே இந்தப் புள்ளி விபரத்தினை சொல்ல வேண்டுமேயானால் 85-ஆம் ஆண்டில் 1.2.85-ல் எனர்ஜி கட் 30 சதவிகிதமாகவும், டிமாண்ட் கட் 30 சதவிகிதமாகவும் இருந்திருக்கிறது. 1.3.85-ல் எனர்ஜி கட் 50 விழுக்காடாகவும், டிமாண்ட் கட் 50 விழுக்காடா கவும் இருந்திருக்கிறது. 2.7.85-ல் எனர்ஜி கட் 30 ஆகவும், டிமாண்ட் கட் 30 சதவிகிதமாகவும் இருந்திருக் கிறது. 1.1.86-ல் எனர்ஜி கட் 40 சதவிகிதமாகவும், டிமாண்ட் கட் 40 சதவிகிதமாகவும் இருந்திருக்கிறது. 22.1.86-ல் எனர்ஜி கட் 20 சதவிகிதமாகவும், டிமாண்ட் கட் 20 சதவிகிதமாகவும் இருந்திருக்கிறது.

1.1.87-ல் மின்சக்தி வெட்டு 40 சதவிகிதமாகவும், அதைப்போலவே டிமாண்ட் கட் 40 சதவிகிதமாகவும் இருந்திருக்கிறது. 16.9.88-ல் எனர்ஜிகட் 30 சதவிகித மாகவும், அதைப்போலவே டிமாண்ட் கட் 30 சதவிகித மாக இருந்திருக்கிறது. 1.3.89-ல் எனர்ஜி கட் 40 சதவிகிதம், டிமாண்ட் கட் 40 சதவிகிதம். 24.4.89-ல் எனர்ஜி கட் 60 சதவிகிதம், டிமாண்ட் கட் 60 சத விகிதமாக இருந்தது. 21.6.89-வும் எனர்ஜி கட் 60 சதவிகிதம், டிமாண்ட் கட் 60 சதவிகிதம். 1.7.89-ல் எனர்ஜி கட் 40 சதவிகிதமாகவும், டிமாண்ட் கட் 40 சதவிகிதமாகவும் இருந்திருக்கிறது. 25.7.89-ல் எனர்ஜி கட் 20 சதவிகிதமாகவும் டிமாண்ட்கட் 20 சதவிகிதமாக வும் இருந்திருக்கிறது. 20.12.89-ல் எனர்ஜி கட் 10 சதவிகிதமாகவும், டிமாண்ட் கட் 20 சதவிகிதமாகவும் இருந்தது. 12.1.90-ல் எனர்ஜி கட் இல்லை, டிமாண்ட் கட் 20 சதவிகிதமாக இருந்தது. 16.2.90-ல் எனர்ஜி கட் இல்லை. டிமாண்ட் கட் 10 சதவிகிதம் என்று வந் திருக்கிறது.

இன்று உண்மையிலேயே இந்த விழாவிலே மகிழ்ச்சி கரமான ஒன்றைத் தெரிவிக்கிறேன். 1.7.90 முதல் இந்த பத்து சதவிகித மின்வெட்டும் இருக்காது என்ற மகிழ்ச்சி கரமான செய்தியை (கைதட்டல்) இந்த விழாவிலே நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் ஏற்கெனவே முதலில் குறிப்பிட்டதைப் போல மின் உற்பத்தியைவிட மின்சாரத்தைச் சேமிப்பதிலே நாம்

# எரிசக்தியைச் சேமிப்பதும் புதுப்பிப்பதும்...

சேமிப்பு என்பது, நாம் சேமமுற வாழ வழி வகுப்பதாகும்.

சேமிப்பு என்கிறபோது, பணத்தை மட்டுமே சேமிப்பது என்று நாம் எண்ணி விடுகிறோம்.

அன்றாட வாழ்க்கையில் நாம் சேமிப்பதற்கு எவ்வளவோ இருக்கிறது.

உதாரணத்துக்கு ஒன்றைச் சொல்லலாம்.

மின்சாரத்தை நாம் சேமிக்கலாம். அதனால் நமக்கு மட்டுமல்ல. சமுதாயத்துக்கும் பயனுண்டு. அதேபோல, தண்ணீரையும் சேமிக்கலாம்.

இவையெல்லாம் நமக்குத் தெரிந்ததே! ஆனால் அன்றாட அவசர வாழ்க்கையில் அவற்றையெல்லாம் மறந்து விடுகிறோமே!

அவற்றையெல்லாம் நினைவுபடுத்தவும். சேமிப்பின் அவசியத்தைக் கடைப்பிடிக்கவும் ஒரு தூண்டுகோலாக அமைந்தது ஒரு பொருட்காட்சி...

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் ஜூன் 28 முதல் ஜூலை 1 வரை நடந்த அந்தப் பொருட்காட்சிதான், 'எரிசக்தி 90'.

இந்தப் பொருட்காட்சி மற்றும் கருத்தரங்கினை, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், பெட்ரோலியம் சேமிப்பு ஆராய்ச்சி நிறுவனம், சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி ஆகியவை சேர்ந்து ஏற்பாடு செய்திருந்தன.

எரி சக்தியைச் சேமிக்க முடியுமா?

''முடியும்'' என்பதைச் சொல்லாமல் சொன்னது, இந்த அழகிய அதே சமயத்தில் ஆக்கப் பூர்வமான இந்தப் பொருட்காட்சி.

எரிசக்தி சேமிப்பதை மட்டும் இந்தப் பொருட்காட்சி வலியுறுத்தவில்லை. எரிசக்தி வளர்ச்சிக்குத் தேவையான புதிய எரிசக்தி உத்திகளை உபயோகிப்பது பற்றியும் இது விளக்கிக் காட்டியது.

சுமார் 45 நிறுவனங்கள் கலந்து கொண்ட இந்தப் பொருட்காட்சியில், மைய அரசு மரபு சாரா எரிசக்தித்துறை, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், தமிழக ஊரக வளர்ச்சித் துறை, நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன், சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, தமிழ்நாடு மின்வாரியம் போன்ற நிறுவனங்கள் பங்கு கொண்டு சிறப்பித்தன.

சூரிய வெப்பம், சூரிய ஒளி, காற்று, மரம், செடி ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் எரிசக்தியை எப்படி நாம் பயன்படுத்திக் கொள்வது என்பதை, இந்தப் பொருட்காட்சியில் நாம் நேரில் தெரிந்து கொள்ள முடிந்தது.

பொருட்காட்சியோடு, பயனுள்ள கருத்தரங்கும் நடைபெற்றது. மின்சாரத்தைச் சேமித்தல், பெட்ரோலியப் பொருட்களைச் சேமித்தல், புதிய எரிசக்தித் திட்டங்கள் ஆகியவை குறித்து கருத்தரங்கு பல பயனுள்ள கருத்துக்களை வெளியிட்டது. பொதுமக்களும், மாணவர்களும் பயனடையும் வகையில், உற்பத்தியாளர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், தொழில் நுட்ப நிபுணர்கள் போன்றவர்கள் எளியமுறையில், எரிசக்தி சேமிப்பு முறையை விளக்கிச் சொன்னார்கள்.

பொதுவாக, ''எரிசக்தியைச் சேமிப்பதும், புதுப்பிப்பதும்'' என்பதுதான், இந்தப் பொருட்காட்சி மற்றும் கருத்தரங்கின் முக்கிய நோக்கமாக இருந்தது.

பொருளாதாரத் துறையில் வளர்ந்து வரும் நம் நாட்டிற்குப் பல வழிகளில் எரிசக்தி தேவைப்படுகிறது. அப்போதுதான், தொழில், வேளாண்மை, போக்குவரத்து, வாணிபம் மற்றும் வீடுகளுக்கான தேவைகளை நிறைவேற்றி, பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த இயலும். மின்சார வளர்ச்சிக்காக நாடு முழுவதும் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் முதலீடு செய்யப்படுகின்றன. புதிய மின்சாரம் நமக்குத் தேவை என்றாலும், தற்போது கிடைக்கக்கூடிய மின்சாரத்தை நாம் சேமிப்பது அவசியம் என்பதையும் மறுக்க முடியாது.

ஒரு யூனிட்டைச் சேமிப்பது, இரண்டு யூனிட்டுகளைத் தயாரிப்பதற்குச் சமமாகும். இன்று தொழில் துறை 50% மின்சாரத்தைப் பயன்படுத்துகிறது. விவசாயம் 20% பயன்படுத்துகிறது. தொழில் துறையிலும், வேளாண்மைத் துறையிலும் மின்சாரம் சேமிக்கப்பட்டால், அது நாட்டுக்கு நல்ல பயனை விளைவிக்கும்.

மேலும், பொருளாதார வளர்ச்சிக்கு எல்லா இடங்களிலும் எப்போதும் மின்சாரத்தைத்தான் பயன்படுத்த வேண்டுமென்பதில்லை. மின்சாரத்திற்குப் பதிலாக சூரிய வெப்பம், சூரிய ஒளி, காற்றின் சக்தி, தாவரச் சக்தி ஆகியவற்றை நல்ல முறையில் பயன்படுத்தலாம். இதுபோன்றவற்றைத் தமிழகத்தில் பயன்படுத்துவதற்குச் சிறந்த வாய்ப்புகள் உண்டு.

இந்தப் பணியில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு, மக்களுக்கு குறிப்பாக கிராமப்புறங்களில் மரபு சாரா எரிசக்தியைப் பயன்படுத்துவது பற்றிய விளக்கங்களை அளித்து; புதிய உத்திகளைக் கையாளச் செய்து நல்ல சாதனைகளைப் புரிந்திருக்கின்றது.

அதிக நாட்டம் செலுத்தவேண்டும் என்பதை மறந்து விடுவதற்கில்லை. இதைக்கூட சொல்ல வேண்டுமா என்று கேட்கக்கூடும். ஏனென்றால் 'லயன் லாஸ்' என்ற நிலையை எடுத்துக் கொண்டால்கூட இந்தியாவிலேயே தமிழ்நாடு என்ற இந்த மாநிலத்திலேதான் அது 18 சதவிகிதமாக இருக்கிறது. மற்ற மாநிலங்களிலெல்லாம் இதைவிட அதிக சதவிகித அளவிற்குத்தான் 'லயன் லாஸ்' இருக்கிறது. மற்றவர்கள் நம்மைவிட 'லயன் லாஸ்' செய்கிறார்கள் என்பதற்காக நாம் இதைக் குறைக்கக் கூடாது என்பதல்ல. அந்த 18 சதவிகிதத்தையும் மேலும் குறைக்கும் முயற்சிகளில் நாம் ஈடுபட வேண்டும். அதற்கான ஒத்துழைப்பைத் தரவேண்டியவர்கள் தந்தாக வேண்டும்.

இந்த சேமிப்பின் மூலம் தமிழகத்தின் எதிர்காலத்தில் எல்லா வளர்ச்சியையும் நாம் நல்ல முறையிலே உருவாக்க முடியும். இதைச் சொல்ல வேண்டிய அவசியம், இதற்கொரு பொருட்காட்சியை நடத்த வேண்டிய அவசியம்



# புதியதோர் உலகு செய்வோம்

'சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள்
தாங்கிநடை பெற்றுவரும் சண்டை உலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப்போம்; பின்னர்
ஒழித்திடுவோம்; புதியதோர் உலகு செய்வோம்!

மனித-இயல்பே சில நேரங்களில் கொஞ்சம் அளவுக்கு மீறி இருப்பதாகத் தெரிந்தால் அல்லது தேவைக்கேற்ப இருப்பதாகத் தெரிந்தால் அதை மிச்சப்படுத்த வேண்டும் என்று எண்ணுவது கிடையாது.

உதாரணமாக ஒரு ஓட்டலிலே சென்று ரூம் வாடகைக்கு எடுத்து தங்குவதாக வைத்துக்கொள்வோம். மனித இயல்பு-அந்த ஓட்டலை விட்டு காலி செய்து விட்டோ அல்லது ஓட்டலில் தங்கியிருப்பவர்கள் கடைத் தெருவுக்கோ அல்லது பக்தர்களாக இருந்தால் கோயிலுக்கோ செல்லுகிற நேரத்தில் அவர்கள் அந்தக் கதவை வெளியில் பூட்டிக்கொண்டு போன பிறகுகூட மின்விசிறிகள் ஓடிக் கொண்டிருக்கும், அவர்களுடைய இயல்பை உணர்ந்திருக்கிற காரணத்தால்தான் ஓட்டல்காரர்கள் வெளியே ஒரு சுவிட்சை வைத்திருப்பார்கள். எதற்காகத் தெரியுமா? இவர்கள் பேனை (Fan) 'ஆப்' செய்திருக்கமாட்டார்கள். உள்ளே எரியும் விளக்கை அணைத்திருக்க மாட்டார்கள். எனவே அவர்கள் அலட்சியமாகப் போய்விட்டாலும் அதை நிறுத்த வேண்டும் என்பதற்காக வெளியில் ஒரு சுவிட்சை வைத்திருப்பார்கள். அது தமிழ்நாட்டிற்கு அல்லது மக்களுக்குப்பெருமை என்று கருதுகிறீர்களா? அல்ல. நம்முடைய அலட்சியத்திற்காக சூட்டப்பட்ட 'சர்டிபிகேட்'தான் அறைக்கு வெளியே வைக்கப்பட்டிருக்கின்ற சுவிட்சு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

எனவே ஒரு அறையிலே போடப்பட்டிருக்கின்ற விளக்கு, மின்விசிறி இவைகளெல்லாம்கூட இதில் என்ன 'கரண்ட்' அதிகமாகிவிடப் போகிறது என்று எண்ணுவதோ அல்லது 500 ரூபாய் ரூமிற்கு வாடகை வாங்குகிறானே ஓட்டட்டுமே என்று அந்த எரிச்சலிலே போவதோ அந்த ஓட்டலுக்கு மாத்திரம் நஷ்டம் அல்ல. எல்லோருக்கும் சேர்த்துதான் நஷ்டம். அங்கே விரையமாகிற, வீணாகிற, தேவையில்லாமல் சுற்றிக் கொண்டிருக்கிற, விசிறிக்கோ எரிந்து கொண்டிருக்கிற விளக்கிற்கோ பயன்படுகின்ற அந்த மின்சாரம் மிச்சப்படுமேயானால்தேவைப் படுகிற நேரத்தில் ஒரு விளக்கிற்கும், மின்விசிறிக்கும் அது பயன்படும் என்பதை நாம் உணர்ந்தால் அது ஒரு பெரிய சமுதாய நன்மை என்பதை நாம் உணரமுடியும்.

எனவே இந்த அளவிலே ஒவ்வொரு காரியத்திலும் நாம் இந்த மின்சாரம் சேமிப்பைப்பற்றி கவலைப்பட்டாக வேண்டும். வேறுவகையிலே அனல், புனல், காற்று இவைகளை மாத்திரம் நம்பியில்லாமல் வேறுவகையிலே சூரிய வெப்பத்தில்கூட மின்சாரத்தை இன்றைக்கு உற்பத்தி செய்யமுடியும். அதன்மூலமாகவும் அந்த மின்சாரத்தின் பயனை அந்த அளவிற்குப் பெறமுடியும் என்கின்ற விஞ்ஞானப் புதுமைகள் எல்லாம் இன்றைக்கு நாட்டிலே வந்திருக்கின்றன.

இங்கே கடல் அலையில் கிடைக்கின்ற மின்சாரத்தைக் கொண்டு குடிசைகளிலே விளக்கேற்ற முடியும் என்று இந்த மேடையிலே விளக்கு போட்டு காட்டியிருக்கிறார்கள். இதில் இங்கே ஒரு விளக்கு எரிகிறது. அங்கே ஒரு விளக்கு எரிகிறது. இதற்கும், அதற்கும் கனெக்ஷன் இல்லை என்றாலும்கூட அதிலே சொல்லப்படுகின்ற தத்ரூபமான உண்மை என்னவென்றால் கடல் அலைகளிலே இருந்து கிடைக்கின்ற அந்த மின் உற்பத்தி ஏழை-எளியோர்களுடைய வீட்டிலே விளக்கு எரிவதற்கு பயன்படும், எனவே அதையும் நாம் விட்டு விடக்கூடாது என்பதற்காகத்தான் இந்த முயற்சிகளிலே நாம் இன்றைக்கு ஈடுபட்டிருக்கின்றோம். அது பலன் அடைய எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை.

இந்தக் கருத்தரங்கத்திலே இன்றைக்கு வெளியிடுகின்ற கருத்துக்கள் அதற்கு மேலும் உரமூட்டுகின்ற வகையிலே அமையட்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அமையும் என்று நான் நம்புகிறேன். இந்த பொருட்காட்சியின் தத்துவங்கள் தமிழகம் முழுவதும் உள்ள கிராமப்புற மக்களெல்லாம் தெரிந்து கொள்கின்ற அளவிற்கு விரிவடைய வேண்டும், அதற்கான முயற்சிகளை இந்தத் துறையினர் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

முன்னதாக, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத் தலைவர் திரு. டி.வி. வெங்கட்டராமன் இ.ஆ.ப. அனைவரையும் வரவேற்றார்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"தென்னகத்தில் மின்வெட்டு இல்லாத மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகிறது. 8-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நமக்கு 4,345 மெகாவாட் (34,464 மில்லியன் யூனிட்) மின்சாரம் தேவைப்படுகிறது. ஆனால் நமக்கு 3,017 மெகாவாட் மின்சாரம்தான் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1400 மெகாவாட் மின்சாரம் பற்றாக்குறை ஏற்படும். இதனால் பாதிப்பு ஏற்படாமல் இருக்க மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அதிகக் கவனம் செலுத்தி வருகிறார்.

"1986-ல் மத்திய அரசு ஒப்புதல் அளித்தும் மின் நிலையம் தொடங்காமல் திட்டத்தைக் கிடப்பில் போட்டிருந்தனர். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் முயற்சி செய்து 2 ஆயிரம் ஏக்கர் நிலத்தைக் கைப்பற்றி 1000 ஏக்கரை மின் உற்பத்தி நிலைய விரிவாக்கத் திட்டத்துக்குத் தந்தார்".

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிர்வாகி திரு இராமலிங்கம், பெட்ரோலியம் சேமிப்பு ஆராய்ச்சி நிறுவன அலுவலர் திரு ஆர்.ஆர். மண்டல், மத்திய அரசின் மரபு சாரா எரிசக்தித்துறை இணைச்செயலர் திரு டி.சி.ஏ. சீனிவாசன் ஆகியோர் பேசினார்.

விழாவில், பொருட்காட்சியையொட்டி பள்ளி-கல்லூரிகளுக்கு நடத்தப்பட்ட வினாடி-வினாப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

—பி.வி. கிரி

பயனடைந்தோர் பகர்வன:

# "முதல்வருக்கும் அரசுக்கும் எங்கள் நன்றி"



டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டம்



கா. இந்திரா காந்தி

ஏ. அம்சா

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில், அரசு நலத் திட்ட உதவிகளால் பயனடைந்தோர் பலராவர். அவ்வாறு பயன்பெற்ற பெண்மணிகள் தமிழக அரசுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் புகழ்மாலை சூட்டினர். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ், பயனடைந்த ஒரு பயனாளியைச் சந்தித்தபோது அந்தச் சகோதரி கூறியவை-

''என்பெயர் இந்திரா காந்தி. என் கணவர் பெயர் காசிநாதன், நாங்க திருவண்ணாமலை பக்கத்திலே பழையனூர் காலனியிலே குடியிருக்கோம்; எனக்கு மூணரை வயதிலே ஒரு குழந்தை இருக்கு - இது இரண்டாவது குழந்தைங்க. என் புருஷன் ஆடு மேய்ப்பார்-மாடு மேய்ப்பார்-சமயத்திலே கிணறு வேலை செய்வாரு. கூலி வேலையிலே எப்போதும் தட்டுப்பாடுங்க. முதல் குழந்தை 3 வருசத்துக்கு முன்னாலே பிறந்தப்போ என்னான்னு கூட கேட்கறதுக்கு ஆளில்லை - இப்போ 2-வது குழந்தை பிறந்தப்போ கவர்மெண்ட் ஆயாமாருங்க வந்து விசாரிச்சாங்க. கவர்மெண்ட்டிலே, கர்ப்பிணியா இருக்கிறவங்களுக்கு மாசம் ரூ.50 வீதம் நாலு மாதத்துக்கு போஷாக்குக்காக ரூ.200/- தர்றாங்க என்று சொல்லி ஒரு பேப்பர்ல கையெழுத்து வாங்கிட்டுப் போனாங்க- ஒருநாள் திடுதிப்பென்று ரூ.200/- கொடுத்து இந்தா புடி- நல்லா சத்தான சாப்பாடு சாப்பிடு; உடம்பைக் கவனிச்சுக்க'' என்று சொன்னாங்க. வறுமையிலே வாடி பசியால் நொந்து குழந்தைக்குப் பாலூட்ட முடியாத எங்க நிலையைப் பார்த்து முதலமைச்சரு ரூபாய் கொடுத்திருக்காங்க; அவருக்கும் இந்த அரசாங்கத்துக்கும் என் நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன்'' என்று கூறினார்.

திருவண்ணாமலையை அடுத்துள்ள பழையனூர் குடியிருப்பைச் சார்ந்த ஏழுமலை மனைவி அம்சாவைச் சந்தித்தபோது, அவர் முக மலர்ச்சியோடு என்ன சொன்னார் தெரியுமா?

''என் புருஷன் பெங்களூரிலே ஒரு ஓட்டல்ல சமையல்காரரா வேலை செய்யறாருங்க எப்பவாவது வருவார், போவார்; வர்றப்போ எதுனா பணம் கொடுப்பாரு. என் மாமனாரும்-மாமியாரும் கூலி வேலை செய்றாங்க-நானும் கூலி வேலைக்குப் போவேன். நான் கர்ப்பிணியா இருக்கிறப்ப ஒருநாளு கூலி வேலைக்கு வயக்காட்டுக்குப் போனேன்; அப்ப ஒருத்தரு பேப்பர்ல படிச்சு, கர்ப்பமா இருக்கிறவங்களுக்கு போஷாக்குச் செலவுக்கின்னு அரசாங்கத்துல ரூபாய் தராங்க என்று சொன்னாரு; அதன்படி நானும்-மாமியாரும் பி.டி.ஓ. ஆபிஸ்ல போய் மனு எழுதிக் கொடுத்தோம். என் குழந்தை புஷ்டியாய் வளர்ரதுக்கும், நான் நல்லா சாப்பிடறதுக்கும் கவர்மென்ட்ல பணம் கொடுக்கிறாங்க என்று அவரும் சொன்னாரு. அடுத்த ஒரு வாரத்திலே ரூ. 200/-ம் கொடுத்தாருங்க- இந்த மாபெரும் உதவிக்காகத் தமிழக முதல்வருக்கும் தமிழ்நாடு அரசுக்கும் ஏழைபாளைங்க ரொம்ப ரொம்ப நன்றி சொல்லனுமுங்க'' என்று சொன்னார் அந்தப் பெண்மணி, மிகுந்த நன்றியுணர்ச்சியோடு.

—ஜீ. மணிக்குமார்,
செய்தி-மக்கள்தொடர்பு அலுவலர்,
திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம்.

இனிய வாழ்த்துக்கள்

# லெட்சுமி
# டூரிஸ்ட் ஹோம்

## கன்னியாகுமரி

**போன்: 333**



## திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில்

# மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைப் பணிகள்

**பொ**து மக்களின் மீன் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டும், உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காகவும் தீவிர நடவடிக்கை எடுக்கும் நோக்கத்துடன் திருநெல்வேலி மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை திருநெல்வேலி 10.12.1980-இல் தொடங்கப்பட்டது. இம்முகமையின் பணிகள் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் மற்றும் சிதம்பரனார் மாவட்டம் ஆகியவற்றில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### குறிக்கோள்

மீன் வளர்ப்பதற்குத் தகுதியான நீர்நிலைகளைச் சீரமைப்பு செய்து மீன் உற்பத்திக்கான அதிக பட்ச அளவு நீர்ப்பரப்பினைத் தயார் செய்தல்.

மீன் வளர்ப்பில், நவீன தொழில் நுட்ப முறைகளைக் கடைப்பிடித்து உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரித்து, பொது மக்களின் மீன் உணவுத் தேவையினைப் பூர்த்தி செய்தல்.

செயல்முறைகளைத் தீவிரப்படுத்துவதன் மூலம் மேன்மேலும் அதிக அளவு நீர்ப்பரப்பினை மீன்வளர்ப்பிற்குக் கொண்டு வருதல்.

மீன் வளர்ப்பதற்கு முன்வரும் நபர்களுக்கு, நவீன தொழில் நுட்ப முறைகளில் பயிற்சி அளித்து மீன் வளர்ப்பினால் ஏற்படும் வேலை வாய்ப்பினை அதிகப்படுத்தி, அதன் மூலம் புறநகர் வாழ் மக்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஏற்படுத்துதல்.

### செயல்முறை

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நீர்நிலைகளில் மீன் வளர்ப்பிற்குத் தகுதி வாய்ந்தவை எவை என்பது பற்றி அளவாய்வு செய்யப்படுகிறது. தேர்வு செய்யப்பட்ட நீர்நிலைகள், சம்பந்தப்பட்ட உரிமையாளர்களிடமிருந்து (வருவாய்த் துறை, பஞ்சாயத்து, நகராட்சி, அறநிலையத்துறை மற்றும் தனியார்) நீண்ட காலக் குத்தகைக்கு (10 வருடங்கள்) முகமையின் கீழ் முதல் கட்டமாக எடுக்கப்படுகின்றன. மீன் வளர்ப்பினை மேற்கொள்ளுவதற்காக விண்ணப்பித்துள்ள நபர்களில் தகுதியானவர்கள் துணைக் குழுவின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒரு எக்டேர் நீர்ப்பரப்பளவுள்ள குளம், ஒரு நபருக்கு ஒதுக்கப்படுகிறது. அதற்குமேல் உள்ள நீர்ப்பரப்பிற்கு ஏற்றவாறு மீன் வளர்ப்போர் எண்ணிக்கையும் உயர்த்தப்பட்டு நீர்நிலைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட மீன் வளர்ப்போருக்கு மீன் குஞ்சுகளை இருப்பு செய்வதற்கு ஏற்றவாறு குளங்களைத் தயார் செய்தல், உரமிடுதல், மீன் குஞ்சுகள் இருப்பு செய்தல், உணவிடுதல் மற்றும் இனம் சம்பந்தமான முறைகள் குறித்துப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

எஸ்.எம். பஷீர்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி
கட்டபொம்மன் மாவட்டம்

குளங்கள் தயார் செய்யப்பட்ட பிறகு கலப்பு இன மீன் வளர்ப்பிற்காக கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் சாதாக்கெண்டை, வெள்ளிக் கெண்டை, புல்கெண்டை இன மீன்குஞ்சுகளை இருப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. விரைவில் வளர்ச்சி அடையும் இந்த இன மீன் குஞ்சுகள் முகமையின் மூலமாக வாங்கப்பட்டு ஒரு எக்டேருக்கு 5,000 மீன் குஞ்சுகள் வீதம் இருப்பு செய்யப்படுகின்றன. பின்னர் மீன் குஞ்சுகள் போதுமான அளவு வளர்ச்சி அடைந்துவிட்டனவா என்றும், உணவு மற்றும் உரம் இடும் முறையில் மாற்றம் ஏதாவது தேவையா என்பதை அறியவும் சோதனை மீன்பிடிப்புப் பணி அவ்வப்போது மேற்கொள்ளப்படுகிறது.

ஒவ்வொரு மாதம் இதன் வளர்ச்சி பற்றி அறியப்பட்டு விரிவாக்கப் பணி பார்க்கப்படுகிறது. 8 முதல் 10 மாதங்களானதும் மீன்களைப் பிடித்து விற்பனை செய்து, அதன் மூலமாக மீன் வளர்ப்போருக்குச் சுயவேலை வாய்ப்பு அளிப்பதுடன் இலாபகரமான தொழிலுக்கு உதவுவதோடு, மீன் உற்பத்தியையும் ஒரு எக்டேருக்கு 1,000 கிலோ முதல் 1,500 கிலோ வரை பெருக்குவதற்கும் வழி வகுக்கப்படுகிறது. ஒரு எக்டேருக்கு 3,000 கிலோ மீன் உற்பத்தி என்ற உச்சநிலைக் குறியீட்டை அடைய, குறிப்பிட்ட சில குளங்களைத் தேர்வு செய்து, அவற்றில் இம்முகமையின் நவீன திட்டங்களையும் தொழில் நுட்ப உதவிகளையும் செயல்படுத்தி, ஏனைய மீன் வளர்ப்போருக்கு உதாரணமாக

வும் ஆர்வத்தினைப் பெருக்குவதற்கும் முகமை, செயலாற்றி வருகிறது. வங்கிகள் மூலமாக மீன்குஞ்சுக் கடன், மராமத்துக் கடன் முதலியவைகள் மீன் வளர்ப்போருக்குக் கிடைக்க உதவி செய்வதன் மூலம் அவர்களின் சுயவேலை வாய்ப்புத் திட்டம் இம்முகமையின் மூலமாக செயல்பட்டு வருகிறது.

முகமையினால் தேர்வு செய்யப்பட்ட குளங்களுக்கு, முகமையின் மூலம் விநியோகிக்கப்படும் உயர்தர பெருங்கெண்டை மீன்குஞ்சுகளின் விலையை தேசீய வங்கிகள் மூலம் உடனடியாக மீன் வளர்ப்போர்கள் பெற, இம்முகமை ஏற்பாடு செய்கிறது. இவ்வாறு மீன் குஞ்சுகள் வாங்குவதற்காகவும் உரம் மற்றும் உணவு வாங்குவதற்காகவும் மீன் வளர்ப்போர்கள் பெறும் உள்ளீட்டுக் கடனில், முதல் ஆண்டிற்கு மட்டும் 25 சதவிகித மானியம் முகமையினால் வழங்கப்படுகிறது. இது போன்று குளத்தினை மேம்படுத்தவும் மராமத்துப் பணி பார்க்கவும் செலவிடப்படும் தொகைக்கு முதல் ஆண்டிற்கு மட்டும் 25 சதவிகிதம் மானியம் வழங்கப்படுகிறது.

**முகமையின் சாதனைகள்**

இதுவரை, இம்முகமையின் திட்டத்தினால் 422.31 எக்டேர் பரப்பளவுள்ள 195 குளங்கள் மீன் வளர்ப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 334 நபர்களுக்குப்பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

1980-81-ஆம் ஆண்டிலிருந்து இவ்வாண்டு 1990 ஜனவரி முடிய 73,27,675 உயர்தர மீன்குஞ்சுகள் குளங்களில் இருப்பு செய்யப்பட்டு வளர்க்கப்பட்டு 1,020 டன் மீன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

இதுநாள் வரை 106.38 எக்டேர் பரப்பளவுள்ள 43 குளங்களில் மராமத்துப் பணி பார்க்கப்பட்டு, அதற்காக ரூ.21,473.00 மானியம் வழங்கப்பட்டுள்ளது.

**மணிமுத்தாறு மீன் விதைப் பண்ணை**

மாவட்டத்திலுள்ள முகமைக் குளங்களுக்கு விரலளவு மீன் குஞ்சுகள் பொதுவாகப் பல்வேறு இடங்களிலிருந்து வாங்கப்பட்டு, விநியோகிக்கப்பட்டு வருகின்றன. வளர்ந்துவரும் இம்முகமைத் திட்டத்திற்கு ஈடுசெய்யவும், பிற நிலையங்களிலிருந்து வாங்கப்படும் தேவையை இயன்ற அளவு தவிர்க்கவும் இம் முகமையின் மூலமாக மீன்நுண் குஞ்சுகள் உற்பத்தி செய்து, வளர்ந்து, தரமுள்ள விரலளவு மீன் குஞ்சுகளை மீன் வளர்ப்போர்களுக்கு விநியோகிக்கும் வகையில் ரூ.5.01 இலட்சம் செலவில் மீன் பண்ணை ஒன்று தேசிய புறநகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், அரசால் இம் மாவட்டத்திலிருக்கும் மணிமுத்தாறில் கட்டப்பட்டுள்ளது. இதன்படி 16 நாற்றங்கால்கள், ஒரு பம்ப் ஹவுஸ், ஒரு பண்டக அறை ஆகியவை கட்டப்பட்டு, மீன் குஞ்சுகள் வளர்ப்புப் பணி 10.9.85 முதல் நடைபெற்று வருகின்றது.

1989-90-ஆம் ஆண்டில் அரசின் குறியீடான 55 இலட்சம் நுண் மீன்குஞ்சுகள் உற்பத்திக்கு எதிராக 55.25 இலட்சம் நுண்மீன் குஞ்சுகள் இதுவரை உற்பத்தி செய்யப்பட்டுச் சாதனை புரியப்பட்டுள்ளது. இதன் மூலம் 5,97,750 விரலளவு மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.


பால்வளம் பெருக!    முட்டை உற்பத்தி அதிகரிக்க!!

# கோத்ரெஜ்

## மாட்டுத்தீவனம்
## &
## கோழித்தீவனம்

**மாவட்ட விற்பனையாளர்;**

எஸ். சுந்தரலிங்கம்
கேப்ரோடு, கோட்டாறு, நாகர்கோவில்-629 002
போன்:
கடை 4369, வீடு 4278

**கிளைகள்:**

மார்கெட் ரோடு, மார்த்தாண்டம்
25, மேலமாடவீதி, திருநெல்வேலி டவுன்
போன்:24655

# சுழற்சி முறைப் பாசனம்

ந. மகாலிங்கம்
செயற்பொறியாளர்
பாசனப்பகுதிமேம்பாட்டுத்திட்டம்
ஈரோடு


முதல் மடை முதல், கடை மடை வரை உள்ள அனைத்து நிலங்களுக்கும் எளிதாக நீர் கிடைக்க அமைக்கப்பட்ட சிமெண்ட் வாய்க்கால்கள்.

இன்று நமது நாட்டில் வேளாண்மைக்கு மிகவும் இக்கட்டான இடு பொருள் பாசனநீர் ஆகும். ஆகவே கிடைக்கும் நீரைச் சரியான முறையில், பயிரின் தேவைக்கு ஏற்பவும், நீர்ப்பாசன நிலத்தின் தன்மை மற்றும் விகிதாச்சாரப்படியும், விநியோகம் செய்வது மிகவும் இன்றியமையாதது. இதற்கு நீர் மேலாண்மை மேற்கொள்வது சாலச் சிறந்தது.

புதுக்கோட்டை மாவட்டத்தில், 20 கண்மாய்கள் ஐரோப்பிய பொருளாதாரக்குழு நிதி உதவியுடன் நவீனப்படுத்தப்பட்டு, பண்ணை மேம்பாட்டுப் பணிகள், திறம்பட செயல்படுத்தப்பட்டு, சிறந்த நீர் மேலாண்மை மேற்கொள்ளும் நிலையில் உள்ளது. சிறந்த நீர் மேலாண்மைக்கு மிக அடிப்படைத் தேவை முறைப்பாசனம் அல்லது சுழற்சிப்பாசனம் அல்லது வாரபந்தி முறைப்பாசனம் ஆகும். அளவுக்கு ஏற்ப சிக்கனமாகப் பாசன நீரைப் பயன்படுத்தி மகசூலை அதிகரிக்க வேண்டும். தேவைக்கு அதிகமாகப் பாசன நீர் பாய்ச்சுவதால் பயிர் வளர்ச்சிக்குப் பாதகமான சூழ்நிலை ஏற்பட்டு மகசூல் பாதிக்கப்படும் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. ஆகவே நீர் மேலாண்மை உத்தியின் மூலம் வாரபந்தி முறை நீர்ப்பாசனத்தைக் கண்மாய்ப் பாசனப் பகுதிகளில் மேற்கொள்வது தற்பொழுது உள்ள சூழ்நிலைக்கு மிகவும் பொருத்தமானது.

**வாரபந்தி**

இதைச் சுழற்சி முறைப்பாசனம் அல்லது முறைப்பாசனம் எனவும் கூறலாம்.

இப்பாசன முறையின்படி ஒவ்வொரு விவசாயிக்கும் மதகின் கொள்ளளவிற்கேற்ப 5 (ஐந்து) நாட்களுக்கு ஒரு முறையோ, ஒரு வாரத்திற்கு ஒருமுறையோ அவருடைய நிலப் பரப்பிற்கு ஏற்றபடி அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட நேரத்தில் பாசனம் செய்ய அனுமதிக்கப்படும்.

வாரபந்தி என்பது முன்னரே தீர்மானிக்கப்பட்ட நாள், நேரம், காலஅளவு ஆகியவற்றை அட்டவணையிட்டு முறைப்படி பாசன நீரைப் பாசன நிலத்தின் விகிதாசாரத்திற்கேற்ப ஒவ்வொரு விவசாயிக்கும் பகிர்ந்து அளிப்பது ஆகும்.

**வாரபந்தியின் அவசியம்:**

வாரபந்தி முறைப்பாசனம் பின்பற்றப்படவில்லை என்றால் முதல் மடைப்பகுதி விவசாயிகளுக்கு அதிக அளவு பாசனநீர் கிடைக்கும். கடைமடைப் பகுதி விவசாயிகளுக்கு மிகக் குறைந்த அளவு பாசன நீர் கிடைக்கும். சில சமயங்களில் கடைமடைப் பகுதி விவசாயிகளுக்குப் பாசனநீர் அறவே கிடைக்காமலும் போகும். ஆதலின் விவசாயிகள் வாய்க்கால் கரைகளை வெட்டிப் பாசனம் செய்ய முயலுவார்கள். சில சமயங்களில் குறுக்கே அணையிட்டுப் பாய்ச்சவும் முயலுவார்கள். இதனால் குழப்பமான சூழ்நிலை நிலவுவதுடன் கண்மாய்ப் பாசன ஒழுங்குமுறை மேலாண்மை பாதிக்கப்படுகிறது.

முறைப்பாசனம் கடைபிடிக்கப்படாமல் இடைவிடாமல் தொடர்ந்து கள வாய்க்காலில் (Field Channel) பாசனநீர் போகுமானால் மிகக் குறைந்த அளவே நீர் செல்லும். மேலும் வாய்மடை (Turn out) எப்பொழுதும் திறந்தே இருக்கும். இதனால் விவசாயிகள் தொடர்ந்து பாசனநீர் எடுத்துக் கொண்டிருப்பார்கள். அதனால் போதிய அளவு நீர், பயிர்களுக்குக் கிடைப்பதில்லை. இதனால் பாசனநீர் கிடைப்பது பற்றிச் சந்தேகம் நிலவும். விவசாயிகள் பாசனப்பயிர் செய்யத்தயங்குவர். ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட வாரபந்தி முறை நீர்ப்பாசனம் கண்மாயில் இருக்கும் நீரின் அளவையே முழுவதும் சார்ந்தது ஆகும்.

**வாரபந்தியின் சிறப்பு அம்சங்கள்:**

வாரபந்தி பாசன முறையின் சிறப்பு அம்சங்களைக் கீழ்க்கண்டவாறு வரிசைப் படுத்தலாம்.

**1. நேர்மை: (Equity)**

ஒவ்வொரு விவசாயியும் அவருடைய நிலப்பரப்பு விகிதாசாரப்படி முன்னரே தீர்மானிக்கப்பட்ட அட்டவணைப்படி பாசனநீர் விநியோகம் பெற உரிமை உடையவர் ஆகிறார். கடைமடைப் பகுதியில் உள்ள நிலங்களுக்கு நீர் விநியோகம் செய்யும் போது களவாய்க்காலினால் ஏற்படும் நீர் இழப்பையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆகவே இதில் நேர்மையுள்ளது.

**2. சார்புத் தன்மை: (Dependability)**

ஒவ்வொரு விவசாயிக்கும் எந்த நாளில், எந்த நேரத்தில் அவர் பாசன நீர் எடுத்துக் கொள்வது **என்பது** பற்றி முன்னதாகவே தெரி விக்கப்படுகிறது. ஆகவே இம்முறை சார்புத் தன்மை உள்ளது.

**3. தேவைக்கேற்றது: (Adequacy)**

பாசனநீர் பொதுவாக பயிரின் பருவத்திற்கேற்றபடி நிபுணர்களின் சிபாரிசுபடி வழங்கப்படுகிறது. தேவைக்கேற்ற

அளவு கிடைக்கிறது.

**4. பங்கு நிரப்பு: (Coverage)**

ஒவ்வொரு மதகின் நீர்ப்பாசனப் பரப்பினைத் திட்டமிட்ட நீர்ப்பாசன சக்திக்குஏற்பக் குறிப்பிட்டு, விவசாயிக்குத் தெரிவிக்கப்படுகிறது. ஒவ்வொரு வயலுக்கும் பாசனநீர் சென்றடைகிறது. ஆதலின் ஒவ்வொரு விவசாயியின் நிலமும் பாசனம் பெறுகிறது.

**5 கட்டுப்பாடு: (Discipline)**

பாசனமுறை ஒரு தடவை உறுதியாக்கப்படுவதுடன் பாசனநீர் பயிர்ப்பருவத்திற்கு ஏற்பவும் நீர்ப்பாசன சக்திக்கு ஏற்பவும் வழங்கப்படுவதினால் ஒருவருக்குள்ள உரிமை மற்றவரால் அபகரிக்கப்படுவதில்லை.

**6. பொது முன்னேற்பாடு:**

மேற்கூறிய சிறப்பு அம்சங்களினால் ஒரு பாசனத் திட்டத்தைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் அதை மேற்கொண்டு அபிவிருத்தி செய்யவும் ஒவ்வொரு விவசாயிக்கும் தனி அக்கறை ஏற்படுகிறது.

**7. சிக்கனத் தன்மை:**

பாசன நீரின் அளவு, நேர அளவுக்குத் தகுந்தவாறு நிர்ணயிப்பதால், நீரைச் சிக்கனமாக உபயோகிக்க விவசாயிகள் முற்படுகிறார்கள்.

**வாரபந்தியினால் ஏற்படும் நன்மைகள்:**

1. ஒவ்வொரு வயலுக்கும் முழு நிறைபயனை அடையக்கூடிய அளவிற்கு, பாசனம் எளிதாக்கப்படுகிறது. மேலும் விவசாயிகள் நீர் நிர்வாகம் நல்ல முறையில் செய்கின்றனர். ஆகையினால் பாசனத்திற்குத் தேவையான நேரமும் வேலை ஆட்களும் குறைக்கப்படுகின்றன.

2. நல்லமுறையில் பாசனநீர் கட்டுப்படுத்தப்படுகிறது. விவசாயிகள் தங்களின் விருப்பம் போல் பயிரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆகையினால் மகசூல் ஒரு நிலத்திற்கு அதிகரிக்கப்படுகிறது. அதிக அளவு நிலங்கள் ஒரு அலகு பாசன நீருக்கு உபயோகப்படுத்தப்படுகிறது.

3. பாசனநீர் வீணாவது குறைக்கப்படுகிறது. அத்துடன் சச்சரவுகள் மற்றும் சட்டப்பிரச்சினைகளும் குறைக்கப்படுகின்றன.

4. சமுதாயத்தில் கீழ்மட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கும், கடைமடை விவசாயிகளுக்கும் பாசனநீர் தவறாமல் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

5. ஒவ்வொரு விவசாயிக்கும் எப்பொழுது எவ்வளவு பாசனநீர் கிடைக்கும் என்று முன்கூட்டியே தெரிவதனால் விவசாயப் பணிகளைத் தகுந்த முறையில் முன்னரே திட்டமிட முடிகிறது.

6. உயர்ந்த விதை, உரம் முதலியவற்றைப் பயன்படுத்த விவசாயிகள் ஊக்கம் அடைகின்றனர். அவ்விதம் உபயோகிப்பதனால் விளைச்சல் அதிகரிப்பதுடன் முதலீட்டுக்கு அதிக வருவாய் கிடைக்கிறது.

வாரபந்தி பாசனம் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்களில் நல்ல மகசூல் கிடைப்பதினாலும், பாசனநீர் அனைத்து விவசாயிகளுக்கும், நல்ல முறையில் பங்கிடப்படுவதினால் இத்திட்டம் விவசாயிகளிடம் நல்லவரவேற்புப் பெற்று உள்ளது.

இத்திட்டம் தஞ்சையிலும், ஈரோட்டிலும், முறையே காவிரிப் பாசனப்பகுதி மேம்பாட்டுத்திட்டத்திலும், கீழ்பவானி பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**அம்பேத்கர் நூற்றாண்டு**

**எல்லோரும் நமக்குச் சகோதரர்களே!**



**நாம் அடிமையாகப் பிறந்து விட்டோம் என்று உங்களுக்கு நீங்களே உறுதி செய்து கொண்டு விட்டீர்களானால், எந்த உரிமையையும் உங்களால் அடைய முடியாமலே போய்விடும். யாரும் யாருக்கும் அடிமையல்ல என்பதை உணருவோம். தலை நிமிர்ந்து நடப்போம். நாமும் மனிதர்களே; எல்லோரும் நமக்குச் சகோதரர்களே!**

**—டாக்டர் அம்பேத்கர்**


**கன்யாமில்க்**

**எங்களது சுவைமிக்க ''பால்பேடா''வை ருசித்து மகிழுங்கள்.**

தமிழ் நாட்டிலுள்ள பல மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்ஒன்றியங்களுக்கு எங்களது நயமிக்க சுவைமிக்க ''கன்யாமில்க்'' பால்பேடாவை வழங்கி வருகிறோம் என்பதில் பெருமையடைகிறோம்.

பதப்படுத்திய பால், பைகளில் அடைத்த பால், சூடான பால், சுவையூட்டிய பால், நறுமண நெய், நயமிக்க பால்பேடா தரமுடன் பெற்று நிறைவுடன் செல்ல எங்களது கன்யா பாலகங்களுக்கு வருகை தாருங்கள்.

கா.சேக் அகமது பாசா,
நிர்வாக இயக்குநர்.

எம்.கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப.,
பெருந்தலைவர்/மாவட்ட ஆட்சியாளர்

கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம்
எண். 2946, நாகர்கோவில்-629 003.

# நூல் நயம்

## கலைஞர் கருணாநிதியும் கனியமுதுச் செல்வங்களும்

**ஆசிரியர்:** டாக்டர் எஸ். குலசேகரன்

**வெளியீடு:**

அமிழ்தம் பதிப்பகம்
15 முத்துப் பிள்ளைத் தெரு,
வ.உ.சி. நகர், வேலூர்-632 001

விலை:ரூ.10 பக்கம்:102

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் அற்புதமான பண்புகளும், அரிய குண நலன்களும் இளந்தளிர்களுக்கு எளிதில் புரியும்படி, அழகாக, எளிமையாக இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது.

ஒவ்வோர் அத்தியாய முடிவிலும், அதனால் விளக்கப்படும் நெறி, விளக்கப்பட்டிருப்பது சிறப்பு. இளந் தலைமுறை படித்துப் பயன்பெற வேண்டிய நல்ல தொகுப்பு.

-என். குமாரசாமி

## போதிசத்துவர் கதைகள்

**ஆசிரியர்:** நெ.சி. தெய்வசிகாமணி,

**வெளியீடு:**

பைலட் பப்ளிகேஷன்ஸ்
304, லிங்கி செட்டித் தெரு,
சென்னை-600 001.

விலை:ரூ.12 பக்கம்:119.

துன்பங்களுக்குக் காரணம் ஆசையே என்றார் புத்தர். அவர், மக்களுக்காகத் துறவு நிலை மேற்கொண்டு, பல அரிய உண்மைகளை அறிவித்தார்.

அவரது வாழ்க்கையைச் சித்திரிக்கிறது இந்நூல். சிறுவர், சிறுமிகள் படிப்பதற்கேற்ற வகையில், எளிய தமிழில் தக்க படங்களுடன் எழுதப்பட்டுள்ளது.

## உலகத்தின் ஒளிச்சுடர்கள்

**ஆசிரியர்:** என்.ஏ. வேலாயுதம்

**வெளியீடு:**

அன்பு நிலையம்
வடிவீஸ்புரம்
நாகர்கோவில்-629 002.

விலை:ரூ.45 பக்கம்:376

உலகத்தின் ஒளிச்சுடர்களாயிருந்து, மறைந்தும் மறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் மகான்கள் பலர். அவர்களது வாழ்க்கை நமக்குக் கலங்கரை விளக்காக இருந்து வழிகாட்டிக் கொண்டிருக்கிறது.

அறிவியல் அறிஞர்கள், கவிஞர்கள், சுதந்திரப் போராட்ட வீரர்கள், ஆன்மீக ஞானிகள் இப்படிப் பலவேறு துறைகளில் சிறந்து விளங்கிய 101 பெரு மக்களைப் பற்றிய வரலாற்றுச் சுருக்கங்கள் இந்நூலில் காணக்கிடைக்கின்றன.

இளைய தலைமுறை படித்துப் பயன்பெற வேண்டிய அறிவுக் கருவூலம் இது.

—பி.வி.கிரி

## தண்ணீரும் இரத்தமும்

**ஆசிரியர்:** ஸ்வீட்லின் பிரபாகரன்

**வெளியீடு:**

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
சென்னை-3.

விலை:ரூ.4 பக்கம்:25

கிராமப்புறப் பெண்களின் முன்னேற்றம், சுதந்திரம் ஆகியவற்றிற்காகச் சில பெண்கள் முயன்று ஒரு கிராமத்தில் அவற்றைப் பெற்றுத் தர முயல்வதுதான் கதை. வரதட்சிணைக் கொடுமை, தண்ணீர்ப் பிரச்னை முதியோர் கல்வி, சுகாதாரம், தீண்டாமை என்று ஒரு கிராமத்தின் ஒட்டுமொத்தப் பிரச்னைகளையும் இச்சிறு நூலில் மிக அழகாக அணுகி இருக்கிறார் ஆசிரியர்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பது அழகாக விளக்கப்பட்டுள்ளது.

— குமார்

## பணமொழிகள்

**ஆசிரியர்:** ரமா வேல்சாமி

**வெளியீடு:**

நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்
41-பி சிட்கோ எஸ்டேட்
சென்னை-600 098.

விலை:ரூ.4 பக்கம் 31

பணம் சம்பந்தப்பட்ட பழமொழிகளின் தொகுப்பு. பணம், தனம், பொருள், காசு என்று பணம் பற்றிய பழமொழிகளோடு, கடன், செலவு, போன்று பணத்தோடு தொடர்புள்ள பழமொழிகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

## அனைவர்க்கும் அறிவியல்

**ஆசிரியர்:** தஸ்தகீர் சலாவுத்தீன்

**வெளியீடு:**

மகாசக்தி பதிப்பகம்
16, சுங்குராமத் தெரு,
சென்னை-600 001.

விலை:ரூ.16 பக்கம்:144

இன்று அறிவியல் துறை வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அதன் பயனாக மக்கள் அடைந்த பயன்களோ ஏராளம். அத்தகைய அறிவியல் உண்மைகளைத் தொகுத்துத் தருகிறது. இந்நூல்.

மூலக் கூறுகளின் விந்தை, தூசு மண்டலம், பரிதி ஆற்றல், செய்தித்தாள்கள், நிலவினைப் பற்றிய கொள்கை முதலான ஏராளமான அறிவியல் உண்மைகள் பொதிந்துள்ள அறிவுப் பெட்டகமாக இந்நூல் விளங்குகிறது. பள்ளி மாணவர் மட்டுமல்ல, மற்றவர்களும் படித்துத் தெரிந்து கொள்ளக் கூடிய சுவையான தொகுப்பு.

## நல்ல தாத்தா

**ஆசிரியர்:** கவிஞர் முத்தெழிலன்

**வெளியீடு:**

மலர்முகம் பதிப்பகம்
43, கோதண்டராமர்
கோயில் தெரு,
சென்னை-600 033.

விலை:ரூ.8 பக்கம்:64

குழந்தைகளை நல்வழிப்படுத்தும் குழந்தைப் பாடல் தொகுப்பு. எளிய இனிய சந்தங்களுடன் கூடிய சின்ன சின்னப் பாடல்கள் குழந்தைகளை மட்டுமல்ல, பெரியவர்களையும் மகிழ்விக்கும்.

பறவை, விலங்குகள் பற்றியும், நாட்டுத் தலைவர்கள் பற்றியும் பாடல்கள் உள்ளன. படிக்கவும், பாடவும் ஏற்ற பாடல்கள்.

## கவிதை இலக்கியம்-ஓர் ஆய்வு

**ஆசிரியர்:** மு. விவேகானந்தன்

**வெளியீடு:**

மு. விவேகானந்தன்
ஏ.எச்.15 தாடண்டர் நகர்
சென்னை-600 015.

விலை:ரூ.15 பக்கம்:151

திறனாய்வு என்பது ஒரு கலையாகும். அதுவும் இலக்கியத் திறனாய்வு செய்யப்படுவதற்கு மிகுந்த புலமையும், ஆழ்ந்த சிந்தனையும் வேண்டும். அத்தகைய ஆற்றல் பெற்றவர் இந்நூலாசிரியர் என்பதை இந்நூல் மெய்ப்பிக்கிறது.

ஏது கவிதை? என்பதிலிருந்து, கவிதை இலக்கியம் வளராததேன்? என்பது வரை எல்லாமே சிறந்த ஆய்வுக் கட்டுரைகளாக விளங்குகின்றன.

புதுக் கவிதையின் நோக்கும் போக்கும் கூட இந்நூலில் விளக்கப்படுகிறது.

-பி.வி.ஜி





காந்தியடிகளுடன்...



தமது அமைச்சரவையினருடன் (1954)

# பெருந்தலைவர் காமராசர்

பண்டித நேருவுடன்...



லால் பகதூர் சாஸ்திரியுடன்...



எகிப்து அதிபர் நாசர் மற்றும் தலைவர்களுடன்...



எத்தியோப்பிய மன்னருடன்...





தலாய்லாமாவுடன்...



ரஷ்ய அதிபர் கோசிஜின்னுடன்...

மூதறிஞர் இராஜாஜியுடன்...



தந்தை பெரியாருடன்...



பாபு ஜெகஜீவன்ராமுடன்



மாண்புமிகு முதல்வர் கலைஞருடன்...



# நெல்லை பால்

ஊட்டச்சத்து நிறைந்தது! ருசி மிகுந்தது!! உயர்தரமானது!!!

## ''நெல்லை பால்''

இல்லங்களுக்குத் தேவையான தரமான அக்மார்க் நெய்,
வெண்ணெய், நறுமணப் பால், பால்பவுடர் நியாய விலையில்
'நெல்லை பால்' பாலகங்களில் கிடைக்கும்.

பொதுமக்களின் வசதியை முன்னிட்டு
திருமணம், சடங்கு, வீட்டு விசேடங்கள் மற்றும்
பிற நிகழ்ச்சிகளுக்குத் தேவையான பாலுக்கு
முன்பதிவு செய்து பால் வழங்குகிறோம்.

ஹோட்டல்களுக்கு அதிகக் கொழுப்புச்சத்து அடங்கிய
பால், தொடர்ச்சியாக வழங்கி வருகிறோம்.
ஹோட்டல்களின் அன்றாடப் பால் தேவைகளுக்குத்
தொடர்பு கொள்ளவும்.

**திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவுப் பால்
உற்பத்தியாளர்கள் ஒன்றியம் (வரையறு)
ரெட்டியார்பட்டி சாலை,
திருநெல்வேலி-627 007.**

**தொலைபேசி எண். 72361, 71002.**

## மாணவர் பக்கம்

# வீடு மாறிப் போகிறேன்!



-தம்பி சீனிவாசன்.

வீடு மாறிப் போகிறேன்
வேறு வீடு போகிறேன்.
தேட வேண்டாம் எங்களை
திசைகள் மாறிப் போகிறோம்.

வீடு மாறிப் போகிறேன்,
வண்டி ஏறிப் போகிறேன்!
வேடிக் கையாய் வாழ்ந்தஊரை
விட்டு விட்டுப் போகிறேன்.

வீடு மாறிப் போகிறேன்
வேறு பேட்டை போகிறேன்.
தேட வேண்டும் வேறுபள்ளி,
தேட வேண்டும் நண்பரை.

வீடு மாறிப் போயினும்,
பள்ளி மாறிப் போயினும்,
உள்ளம் மாற வில்லைநான்
உணர்வும் மாற வில்லையே !

# அறிவுச் சுடர்

புவியை மையமாகக் கொண்டே சூரியன் சுற்றி வருகிறது என்ற கொள்கையை வெளியிட்ட அறிஞர் யார்?
-டாலமி.

ஆஸ்பரின் மருந்தைக் கண்டுபிடித்தவர் யார்?
-1889-ஆம் ஆண்டு ஜெர்மானிய நாட்டைச் சார்ந்த டிரன்ஸர் என்பவர் கண்டுபிடித்தார்.

உலகில் நாம் காணும் பொருட்கள் எவ்வகை நிலைகளில் காணப்படுகின்றன?
-3 நிலைகளில் காணப்படுகின்றன.
1. திண்மநிலை, 2. நீர்மநிலை, 3. வாயுநிலை.

பரப்பளவில் பெரியது கனடாவா? அமெரிக்காவா?
-கனடா.

இந்திய மாகாணங்களில் மிகப் பெரிய மாநிலம் எது?
-மத்தியப் பிரதேசம்.

இந்தியாவிலுள்ள மிக உயர்ந்த அருவி எது?
-மைசூரில் உள்ள கிராசப்பா அருவி.

இந்து மகா சமுத்திரத்தின் மிக ஆழமான பகுதி எது? ஆழம் எவ்வளவு?
-ஜாவா டிரன்ச் என்ற இடம். 7725 மீட்டர்.

ஊசல் கடிகாரங்கள் எதன் அடிப்படையில் இயங்குகின்றன.?
சுழற்சியில்

ரேடியன் எனப்படுவது என்ன?
புவியில் கோணத்தை அளக்கும் அலகு.

## தெரிந்து கொள்ளுங்கள்

# கம்போடியா

உலக நாடுகளில் ஒன்று கம்போடியா. இந்நாட்டு மக்கள் 'கெமர்' (Khmer) என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் பேசும் மொழியும் கெமர்தான். அவர்களுக்குப் பிரெஞ்சு மொழி கொஞ்சம் தெரியும். ஆனால் ஆங்கிலம் அவர்கட்குத் தெரியாது.

அந்தத் தேசத்தில் முழுவதும் ஓடும் ஒரே இரயில் நாம்பென்னுக்கும் பாட்டன் பாங்குக்கும் மட்டும்தான். அதுவும் ஒரு நாளைக்கு ஒரு தடவைதான்.

அங்கு தொழிற்படிப்பு படித்தவர்கள், அதாவது இன்ஜினியர்கள், டாக்டர்களும் விவசாய மற்றும் கால்நடைப் பட்டதாரிகள் விரல்விட்டு எண்ணும் அளவில்தான். கம்போடியா நாட்டு மக்கள் மிகவும் இனியவர்கள். நன்கு பழகுகின்றனர். அங்கு, சரியாகச் சாலை வசதியோ மற்ற சௌகரியங்களோ கிடையாது. பெண்கள் எலலா வேலைகளையும் சுறுசுறுப்பாகச் செய்கின்றனர்.

அங்கு, பழக்கத்தில் இருக்கும் நாணயம் ரியில் (Reil) என்பது. சுமார் 200 ரியில் ஒரு டாலருக்குச் சமம். நாட்டின் வருமானம் சராசரி நபர் ஒருவருக்கு 50 டாலர்தான்.

ஆசியாவிலே மிகப் பெரிய ஏரியான (Sweet Water) டான்லி சாப் என்பது இந்தத் தேசத்தில்தான் உள்ளது. இந்தத் தேசத்தின் வழியாகத்தான் துன்பத்தைத் தரும் மிகாங் நதி ஓடுகின்றது.

கம்போடியர்கள் பேசும்மொழியில் நிறைய சமஸ்கிருதம் கலந்து உள்ளது. அங்கு இருக்கும் கலாச்சாரம், தென் இந்தியாவின் கலாசாரத்தைப் போன்று உள்ளது.

—டாக்டர் இரா. க. சிவனப்பன்
(நன்றி: 'செய்திமடல்')

# அகஸ்தீஸ்வரம்
# ஊராட்சி ஒன்றியம்

## 1989-90-ஆம் ஆண்டு வளர்ச்சிப்பணிகள் சாதனை விபரம்

| | | எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு |
|---|---|---|---|
| 1. | ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் | 157 | 23,10,000 |
| 2. | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் | 364 | 5,70,000 |
| 3. | பெரு விவசாய உற்பத்தித் திட்டம் | 16 | 37,000 |
| 4. | குடும்ப நல்வாழ்வுத் திட்டம் | 313 | |
| 5. | சிறுசேமிப்புத் திட்டம் | | 80,80,000 |
| 6. | சாண எரிவாயு கலன் அமைத்தல் | 29 | 1,06,140 |
| 7. | புகையில்லா அடுப்புகள் அமைத்தல் | 250 | 13,000 |
| 8. | முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம் | 218 | 42,100 |
| 9. | மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் ஏழைப்பெண்கள் திருமண நிதி உதவித் திட்டம் | 44 | 2,20,000 |
| 10. | உபரி நிதி வேலைகள் | 54 | 34,24,542 |

**1986 மார்ச் முதல் 1989 டிசம்பர் முடிய.**

**திரு எஸ். இராஜரெத்தினம், பி.ஏ.,**
கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்

**திரு என். கணேசன், பி.எஸ்ஸி.,**
ஆணையாளர்

**திரு எஸ்.பி. நடராஜா, பி.ஏ., பி.எட்.,**
ஊராட்சி ஒன்றியத்தலைவர்

ஆதி திராவிடர்-பழங்குடியினருக்கு:

# தொழில் நெறி வழிகாட்டும் நிலையம்

பெ. கிருஷ்ணன்
உதவி இயக்குநர்
ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவித்தல்
மற்றும் வழிகாட்டல் நிலையம்
கோயம்புத்தூர்.

**ஆதி** திராவிட மற்றும் பழங் குடியினருக்காக, தமிழக அரசு, வேலூர், நெல்லை, திருச்சி, கோவை ஆகிய நான்கு இடங்களில் பயிற்று வித்தல் மற்றும் தொழில் நெறி வழி காட்டும் நிலையங்களை ஏற்படுத்தி யுள்ளது.

கோவையில் இந்தப் பயிற்சி நிலையம், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தின் வளாகத்திலேயே இயங்கி வருகிறது. இந்த நிலையம் கடந்த ஆண்டு (1989) ஏப்ரல் திங்களில் செயல்படத் தொடங்கியது.

இந்திய அரசியல் சட்டத்திலேயே ஆதி திராவிட பழங்குடியினருக்காக இட ஒதுக்கீடு செய்யப்பட்டு சமூகப் பாதுகாப்புக்காக வழி வகைகள் செய்து ஏறத்தாழ அரை நூற்றாண்டு ஆகியும் இன்று வரை எதிர்பார்த் திட்ட அளவு அவர்கள் ஏற்றம் பெற வில்லை என்பதை அரசு உணர்ந்து, முழுமையான அளவிலே அரசின் சலுகைகளையும் பெற்றுப் பயன் அடைந்திட, பயிற்றுவித்தல் மற்றும் வழிகாட்டும் நிலையங்களை ஏற் படுத்தி உள்ளது.

**நிலையங்கள் செய்வதென்ன?**

- ஆதி திராவிட மற்றும் பழங்குடி யினத்தைச் சார்ந்த படித்த இளைஞர் களின் ஆற்றலுக்கேற்பப் பொருத்த மான வேலை வாய்ப்புக்களை ஏற் படுத்திக் கொடுத்தல்,
- வேலைத் திறனை அதிகரிக்கும் வகை யில் பயிற்சி அளித்தல்,
- பொருத்தமான கல்வி நிலையில் தொழில் நெறி வழி காட்டல் வழங் கிடல்
- பள்ளிஇறுதி வகுப்பு, மற்றும் மேனிலைக் கல்வி முடித்தவர்களுக்கு என்ன தொழில் கல்வி அல்லது மேல்படிப்பு படிக்கலாம் என்ற விவ ரத்தை அவரவர் கல்வி மேம்பாட் டிற்கேற்ப எடுத்துச் சொல்லல்.
- பணிநாடிச் செல்லும் முறையில் எவ்வாறு அப்பணிகளுக்கேற்ப கல்வித் திறன், பயிற்சி ஆற்றல் பணி அனுபவம் அமைய வேண்டும் என்று விளக்குதல்.
- தட்டச்சு, சுருக்கெழுத்து போன்ற பயிற்சிகளைப் பெற முடியாதவர் களுக்கு அரசின் உதவித் தொகை அளித்து அப்பயிற்சிகளைப் பெறு வதற்கு வழிவகை செய்தல்.
- பல்வேறு வகையான போட்டித் தேர்வுகளுக்கு, முன் தேர்வுப் பயிற் சிகள் அளித்து, போட்டித் தேர் வினைத் திறமையாக எழுதுவதற்குச் சிறப்பு வகுப்புகள் நடத்துதல்.
- ''சுடர் விளக்காயினும் தூண்டு கோல் தேவை'' என்பதற்கிணங்க, தன்னம்பிக்கை அளிக்கும் வகையில் திங்கள் ஒரு முறை விண்ணப்பதாரர் களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டும் சொற்பொழிவு- கலந்தறிதல்- கலந் துரையாடல் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துதல்.
- அனைவருக்கும் அரசுப்பணி அமை வது அரிது என்பதால், சுயவேலை வாய்ப்புச் சிந்தனைகளை எழுப்பி, அவ்வாறு சுயதொழில் தொடங்கிட அனைத்து உதவிகளையும் உடனிருந்து செய்தல்.
- பணிவாய்ப்புக்கான நேர்காணலின் போது, பெரும்பாலானோர்,வேலை யளிப்பவர் எதிர்பார்க்கக் கூடிய வகையில் நேர் காணல் பேட்டி யினைச் செய்திட முடிவதில்லையாத லால், நேர் காணலுக்கு முன்னர், ஓர் ஒத்திகை நேர்காணல், நடத்தி ஊக்குவித்தல்.

இந்த நிலையம் ஆண்டுதோறும் பல்வேறு பயிற்சி வகுப்புகளை நடத்து கிறது.

மத்திய அரசு அலுவலகங்களில் பணியாளர்கள் தேர்வு செய்வது 'ஸ்டாப் செலக்ஷன் கமிஷன்' ஆகும். ஸ்டாப் செலக்ஷன் கமிஷன்- அ) எல்.டி.சி. பணிக்கான தேர்வு ஆ) இன்கம்டேக்ஸ்/கஸ்டம்ஸ் இன்ஸ் பெக்டர், ஆடிட்டர் போன்ற பணி களுக்கான தேர்வு இ) அஸிஸ்டண்ட் கிரேடு பணிகளுக்கான தேர்வு ஈ) ஸ்டெனோ கிராபர் பணிகளுக்கான தேர்வு, ஆகிய தேர்வுகளை நடத்து கிறது.

இந்தத் தேர்வுகளுக்கெல்லாம் முன் தேர்வுப் பயிற்சியினை இந் நிலையம் சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு நடத்துகிறது.

நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கி களுக்கான எழுத்தர், காசாளர், தட் டச்சர் போன்ற பணிகளுக்குப் பேங் கிங் சர்விஸ் ரெக்ரூட்மெண்ட் போர்டு நடத்தும் தேர்வுகள்.

இரயில்வே ரெக்ரூட்மெண்ட் போர்டு நடத்தும் எழுத்தர் பணிக் கான தேர்வு.

தமிழ்நாடு தேர்வாணையம் நடத் தும் நான்காம் நிலை, மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைப். பணிகளுக்கான தேர்வுகள்.

இது தவிர அவ்வப்போது பெரு வாரியான இடங்களுக்கு ஆட்சேர்ப் புத் தொடர்பாக நடத்தப்படும் முக் கியத் தேர்வுகளுக்கும் முன் தேர்வுப் பயிற்சிவகுப்புகள்நடத்தப்படுகின்றன.

**இந்நிலையம் மேற்கொண்ட தலை யாய பணிகள்:**

1. வேலை தேடும் படித்த ஆதி- திராவிட மற்றும் பழங்குடியினத்த வருக்குத் தொழில் நெறி வழிகாட்டல்.

2. நம்பிக்கை ஊட்டும் திட்டங்களை வடிவமைத்துச் செயல்படுத்துதல்.

3. பணிமேம்பாட்டுத் திட்டங்களை அமல்படுத்தல்

4. தட்டச்சு/சுருக்கெழுத்து பயிற்சிக்கு உதவுதல்

5. ஆள் பற்றாக்குறை பணியிடங்களை ஆய்ந்து அதற்கேற்ப நபர்களைத் தயார்ப்படுத்தல்.

6. முன் தேர்வுப் பயிற்சிகளை முறையாக நடத்துதல்.

7. சுய வேலைவாய்ப்பிற்கான வழிமுறைகளை எடுத்துக் கூறி ஈடுபடுத்துதல்.

8. பயிற்சி, மேல்படிப்பு, போன்றவைகளுக்கு நிதி ஆதாரங்களைப் பெற ஆலோசனை வழங்கல்.

9. சமுதாயச் சங்கங்களுடன் தொடர்பு கொண்டு ஊக்கம் அளித்தல்.

10. ஆதி-திராவிடர்/பழங்குடியினர் மாணவ/மாணவிகள் விடுதிகளுக்குச் சென்று தொழில் நெறி புகட்டல்.

**பயிற்சிச் சலுகைகள்:**

பயிற்சி பெறும் ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு ரூ.5 பயிற்சிக் காலத்தில் அளிக்கப்படுகிறது. வெளியூரிலிருந்து வருபவர்கள் கோவையில் தங்கிப் பயிற்சி பெற ஆதிதிராவிட நலத்துறை விடுதிகளில் இலவசமாகத் தங்கிக் கொள்வதற்கு ஆண், பெண் விடுதிகளில் தனித் தனியே ஏற்பாடு செய்யப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் தேவையான பாடங்கள், பாடக் குறிப்புகள் மாதிரித் தேர்வுத் தாள்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகின்றன பயிற்சி பெறுவதற்கு ஏற்ற நல்ல சூழ்நிலை உருவாக்கிட, பயிற்சி வகுப்புகள் அரசினர் பெண்கள் கல்வியியல் கல்லூரி, கோவை-1-இல் நடைபெறுகின்றன. ஆண்டுதோறும் ஆசிரியைகளை உருவாக்கி வரும் சிறந்த பயிற்சி ஆசிரியைகள்- ஒவ்வொரு பாடத்திலும் புலமை நிறைந்தவர்கள் முன் தேர்வுப்பயிற்சியினைப் பயிற்றுவிக்கிறார்கள்.

**''போட்டித் தேர்வு''**

ஒரு சில வேலைகளுக்கு பலநூறு பேர்கள் விண்ணப்பிக்கும் போது போட்டித் தேர்வு என்ற நிலை உருவாகிறது. எனவே இது தவிர்க்க முடியாதது. அத்தகைய போட்டித் தேர்வுக்கு நாம் நம்மை தயார்படுத்திக் கொள்வதே விவேகம்.

போட்டித் தேர்வுகளில் பெரும்பாலும் பொது அறிவுத் தொடர்பான வினாக்கள் வருவது உண்டு. பொது அறிவு என்பது மனித வாழ்வில் அன்றாட நிகழ்வுகளில் கலந்த விஷயங்களே! அவை, கலை, விஞ்ஞானம், சரித்திரம், பூகோளம், அரசியல், புவியியல் அனைத்து சம்பந்தப்பட்டவையே. இந்தப்பொது



## விண்ணப்பம் எழுதும் முறை!

நம்மில் அநேகருக்கு முறையாக ஒரு கடிதம் கூட எழுதத் தெரியாது என்பது உண்மைதான். அதிலும் ஒரு வேலைக்கு விண்ணப்பம் எழுதுவது என்பது மிகவும் சிரமமான காரியம்தான். நாம் அதைத் தெரிந்து கொள்ள வேண்டும். பொதுவாக விளம்பரப்படுத்தப்பட்ட வேலைகளுக்கு விண்ணப்பங்கள் படிவத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன. அந்த விண்ணப்பங்களில் கூட சில நேரங்களில் கல்வித்தகுதியை முழுமையாகத் தெரிவிக்கத்தவறிவிடுவது உண்டு. இன்னும் சிலர் அவசரக்கோலத்தில் கையெழுத்துப் போட மறந்து விடுவது உண்டு. சில நேரங்களில் விண்ணப்பம் அனுப்பும் முகவரியில் தன்னுடைய முகவரியை எழுதி விடும் அபத்தம் நேர்வது உண்டு. தவிர போதிய தபால் வில்லைகள் ஒட்ட மறந்து விடுவது உண்டு. இவையெல்லாம் தவிர்க்கப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவம் கொடுத்தும் கூட இந்தக் குறைபாடுகள் ஏற்படும்போது, விண்ணப்பப்படிவமே இல்லாத நிலையில் வேலை கேட்டு விண்ணப்பம் தனியார் துறைக்கோ அல்லது ஓர் அரசுச் சார்பு நிறுவனத்திற்கோ எழுதும் போது மிகவும் கவனமாக விண்ணப்பம் செய்திடல் வேண்டும்.

1. நீ ஏழை தான். அதனால் ஏழை என்று பறைசாற்றி விண்ணப்பிக்காதே. நீ கோழை ஆகி விடுவாய்.

2. வேலை அளிப்போரிடம் இரக்கத்தை எதிர்பார்க்கும் நிலையில்-உனது சுயமரியாதையை இழக்கும் நிலையில் விண்ணப்பம் இருக்கக் கூடாது.

3. உண்மை, தெளிவு, துணிவு, பணிவு, கனிவு இவை கலந்து விண்ணப்பம் அமைதல் வேண்டும்.

4. வள, வள, என்று நீண்ட கதை போன்ற விண்ணப்பம் எழுத வேண்டாம்.

5. பெயர், முகவரி, வயது, கல்வித் தகுதி தொழில் திறன், பணி அனுபவம் இவைகளைக்குறிப்பிட மறக்கலாகாது.

6. ஒரு பக்கம் அடங்கிய விண்ணப்பம் நல்லது.

7. கையால் எழுதினாலும் சரி, தட்டச்சு செய்து அனுப்பினாலும் சரி பார்க்க, படிக்க - ஈர்க்கக் கூடிய அளவில் இருக்க வேண்டும்.

8. ''உங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன்''. ''உத்தரவுக்காகக் காத்திருக்கிறேன்'' என்ற எதிர்பார்ப்புகளுடன் விண்ணப்பத்தை முடிக்காதே.

9. மொத்தத்தில் விண்ணப்பம் தன்னம்பிக்கை அடங்கியதாக அமைய வேண்டும்:

அறிவு, வாழ்வில் அன்றாட நிகழ்வுகளைச் சுற்றியதே ஆதலின், நாள் தோறும் நாளேடுகளைப் படிக்க வேண்டும். தவிர, ஒட்டு மொத்தமாக புத்தக வடிவிலும் அச்சிட்ட வெளியீடுகள் வந்துள்ளன. அவைகளையும் கவனமாகப் படிக்க வேண்டும். பொது அறிவினைப் பெருக்குவதன் மூலம் போட்டித் தேர்வினை எளிதில் சமாளிக்க முடியும்.

**அரசுச் சலுகைகள்:**

சமுதாயத்திலே அடித்தளத்தில் அன்றாட வாழ்க்கைக்குப் போராடும் ஆதி திராவிட, பழங்குடியினத்தவர்கட்கு அரசு பல்வேறு வகையான சலுகைகள் அளித்து, சமுதாயத்திலே சமத்துவம் பெற்றிட வாய்ப்பளித்து உள்ளது. 'சமுதாய நீதி அவர்கட்குக் கிடைத்தாக வேண்டும்' என்பதே சமுதாய நீதி ஆண்டாக இந்த ஆண்டைக் கொண்டாடிடும் அரசின் நோக்கம்.

கல்வி மேம்பாடு பெற்றால் சமுதாயத்திலே மதிக்கப்படுவார்கள் என்ற குறிக்கோளுடன் கல்விச் சலுகை அளித்துள்ளது. பட்டப் படிப்பு வரை இலவசம். இதற்கிடையில், தங்கிப் படிக்க உணவு, சீருடை இலவசம். மேல் கல்வி பயில உதவித் தொகை- கல்வியின் தரம் பொறுத்து அளிக்கப்படுகிறது. கல்லூரிகளில் 18 விழுக்காடு இடஒதுக்கீடு முறை அமலாக்கப்பட்டு ஆதி-திராவிட பழங்குடியினர்சமவாய்ப்புப் பெற வழி பிறந்துள்ளது. கல்வி பயின்ற பிறகு அதைத் தொடர்ந்து பயிற்சி பெறவும் அரசு உதவித் தொகை வழங்குகிறது. சான்றாகச் சட்டம் பயின்றவர்கள், வழக்கறிஞர்களாகப் பயிற்சி பெறவும், வணிகவியல் பட்டம் பெற்றவர் கணக்கர்களாகப் பயிற்சி பெறவும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பணிகளுக்கான பயிற்சியினை உதவித் தொகை அளித்துக்கொடுக்கிறது.

பொதுவாக, கல்வி பயில, கணக்கற்ற சலுகைகளை அரசு அளித்துள்ளது எனினும் அவைகளை முழுமையாகப் பயன்படுத்தாமை ஒன்றுதான் குறை என்று சொல்ல வேண்டும். ''கடையை விரித்தேன் கொள்வாரில்லை'' என்ற நிலை வரக்கூடாது என்பதுதான் இந்த நிலையத்தின் அவா. ●



## அற்புதங்கள் செய்யும் கம்ப்யூட்டர்!

**நூ**லகங்கள் என்பவை இப்போது புத்தகங்களும் செய்தித்தாள்களும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள இடங்களாகத் திகழ்கின்றன. எதிர்காலத்திலே நூலகங்களில் எல்லாத் தகவல்களும், செய்திகளும் மின்அணுத் தொகுப்புகளாகச் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் என்றும், வீட்டில் இருந்தபடியே கம்ப்யூட்டர் மூலம் இந்தத் தகவல்களை சுலபமாகப் பெற முடியும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

''சி.டி. ரோம் டிஸ்க்'' (C.D. Rom Disc) என்னும் கம்ப்யூட்டர் தட்டுகளில், புத்தகங்களின் செய்திகளையும் படங்களையும் நுணுக்கமாகப் பதிவு செய்யும் தொழில் நுட்பம் எப்போதோ துவங்கி விட்டது. இந்தக் கம்ப்யூட்டர் தட்டுக்களைத் தேவையான இடங்களுக்குத் தபாலில் அனுப்ப முடியும். கம்ப்யூட்டரில் இவற்றைச் செலுத்தி இயக்கினால், கம்ப்யூட்டர் திரையிலே இச்செய்திகளையும், படங்களையும் எளிதாகப் படிக்கலாம்.

அமெரிக்காவின் மிகப்பெரிய நூலகமான நாடாளுமன்ற நூலகம் (லைப்ரரி ஆஃப் காங்கிரஸ்) வாஷிங்டன் நகரில் உள்ளது. கம்ப்யூட்டர் டிஸ்க் புரட்சியில் இந்த நூலகம் இப்போது முன்னணியில் உள்ளது.

''அமெரிக்கன் மெமரி'' (அமெரிக்க நினைவுகள்) என்னும் மின்அணுத் திட்டம் இங்கு துவக்கப்பட்டுள்ளது. அமெரிக்க வரலாறு, சமுதாயம், கலாசாரம், தொடர்பான தகவல்களை 'சி.டி.ரோம்' கம்ப்யூட்டர் தட்டுகளில் பதிவு செய்வதே இப்பணி ஆகும்.

இந்த நூற்றாண்டின் முதல் 20 ஆண்டுகளில் அமெரிக்கா எப்படி விளங்கியது என்பதைச் சித்திரிக்கும் 30,000 புகைப்படங்கள், இங்குக் குடியேறியவர்களின் வாழ்க்கைச் சரிதங்கள், 1820 முதல் 1920-ஆம் ஆண்டு வரையில் கறுப்பர் அமெரிக்கர்களால் எழுதப்பட்ட கையேடுகள், அமெரிக்க அரசு ஏற்படுத்தப்படுவதற்கு முன்பாக நடைபெற்ற அரசியல் சாசன மாநாடு, முதலாவது நாடாளுமன்றக் கூட்டம் ஆகியவை தொடர்பான சாசனங்கள் முதலியவை இந்தக் கம்ப்யூட்டர் தட்டுக்களில் பதிவு செய்யப்படும்.

அங்குல நீளமுள்ள 'சி.டி. ரோம்' கம்ப்யூட்டர் தட்டு ஒவ்வொன்றிலும் 500 மெகாபைட்கள் அளவுக்குத் தகவல்களைப் பதிவு செய்ய முடியும். உதாரணமாக, ஒரு கம்ப்யூட்டர் தட்டில் 5,000 அரசியல் கார்ட்டூன்களைத் தெளிவாகப் பதிவு செய்யலாம். எழுத்துக்களைப் பதிவு செய்வதென்றால் பல கலைக்களஞ்சியங்களையே இதில் அடக்கலாம்.

தற்போது பரவலாக அமலில் உள்ள ''மைக்ரோ பிலிம்'' படச்சுருள் முறையை விட, இந்த சி.டி. ரோம் கம்ப்யூட்டர் தட்டு முறை பல வகைகளில் மேம்பட்டது.

உலகின் பல பகுதிகளிலே வீடியோ யுகம் எப்போதோ ஆரம்பமாகி விட்டது. சிறுவர்களும் வீடியோ விளையாட்டுகளில் தங்களை மறந்து ஈடுபடுகின்றனர். கம்ப்யூட்டர் தட்டு முறையானது இந்த வீடியோ யுகத்துக்கு ஏற்றது. பள்ளிகளில் பாடபோதனைக்கும், இந்த வீடியோ விளையாட்டுக்களுக்கும் இடையில் ஏற்படக்கூடிய இடைவெளியை இந்தக் கம்ப்யூட்டர் தட்டுகள் இட்டு நிரப்ப முடியும்.

# கன்னியாகுமரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி
# நாகர்கோயில்

தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுப்பணிகளைச் செயல்படுத்துவதில் கன்னியாகுமரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி முன்னணியில் நிற்கிறது. தனது 33-வது ஆண்டு சேவையில் அடி எடுத்து வைத்து வீறு நடைபோடும் ஒளி மயமான இந்த வங்கியின் பணி ஒரு தொடர்கதை.

## 1989-90-ஆம் ஆண்டு மாவட்டத்தில்:

| | | திட்டமிடப்பட்ட கடன் (ரூ.லட்சத்தில்) | வழங்கப்பட்ட கடன் (ரூ.லட்சத்தில்) | பயன் பெற்றவர்கள் |
|---|---|---|---|---|
| பயிர்க்கடன் | ... | 850 | 928 | 29,029 |
| மத்தியகாலக்கடன் | ... | 125 | 135 | 4,093 |
| நகைக்கடன் | ... | 1700 | 2379 | 82,231 |
| வேளாண்மை சாராக்கடன் | ... | 50 | 53 | 60 |

## 1990-91-ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட கடன் அளவு:

| | | ரூ.லட்சம் |
|---|---|---|
| பயிர்க்கடன் | ... | 1045 |
| மத்தியகாலக்கடன் | ... | 135 |
| நகைக்கடன் | ... | 1750 |
| வேளாண்மை சாராக்கடன் | ... | 25 |
| டிப்பாசிட்டுகள் நிலுவை | ... | 1548 |

குறியீடுகள் அனைத்தும் எய்தி, தமிழக அரசின் திட்டங்களைச் செயலாக்கம் காண்பதில் தமிழகத்தில் முதன்மை பெற்று, வரலாறு படைத்து வருகிறது. கடந்த ஆண்டுகளில் தவணை கடந்த கடன் முற்றிலும் வசூலித்து, பாராட்டுப் பெற்ற ஒரே வங்கி!

இதர வங்கிகளைவிட ½ சதவிகிதம் அதிக வட்டி அளிக்கிறோம்!

ஆதரவு தருக!

**சிவகிருஷ்ணன்**, பி.ஏ.,
தனி அலுவலர்

# விவசாயிகள்-கைவினைஞர்கள் நெசவாளர்கள் 12 லட்சம் பேர் பலன் பெறும் கடன் நிவாரணத் திட்டம்

விவசாயிகள், கைவினைஞர்கள் மற்றும் நெசவாளர்கள் ஆகியோர் 12 இலட்சம் பேர்களுக்குப் பலனளிக்கும் வகையில், கூட்டுறவுக் கடன்களில் இருந்து 10,000 ரூபாய் வரையுள்ள கடன்களுக்கு நிவாரணம் அளிக்கும் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு அண்மையில் அறிவித்துள்ளது. இவர்களுக்குக் கடன் நிவாரணம் அளிக்கும் திட்டத்தை விரைந்து செயல்படுத்துமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அலுவலர்களுக்கு ஆணையிட்டுள்ளார்கள். அவரது ஆணைப்படி, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், மண்டல கிராமிய வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கி அனாவாரி சான்றிதழ்களை அவ்வப்போது அளித்து வந்துள்ளனர். 1.4.86 முதல் 2.10.89 வரை வழங்கப்பட்ட அனாவாரி சான்றிதழ்களின் பட்டியல்களை 10.7.90 தேதிக்குமுன் தயாரிக்குமாறு மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியாளர்களிடமிருந்து இப்பட்டியல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வங்கி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின்கீழ் நிவாரணம் பெறத் தகுதியுள்ள கடனாளிகளைத் தெரிந்தெடுக்கும் பணியை முடிக்க

விவசாயிகள், நெசவாளர்கள், கைவினைஞர்கள் ஆகியோருக்கு இத்திட்டத்தின் பலன் விரைவில் கிடைக்க வேண்டுமென்பதில் தமிழக அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் நடவடிக்கைகளை மேலும் விரைவுபடுத்துவதற்காக மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சர் பொதுத்துறை கூட்டுறவு வங்கிகளின் ஒரு கூட்டத்தை மதுரையில் 12.7.1990 அன்று கூட்டியுள்ளார்.

இத்திட்டத்தின்கீழ் உரிய நடவடிக்கைகளை அரசுத்துறையும் வங்கியும் மேற்கொள்வதால், கடன் நிவாரணம் பெறுவதற்கு மேற்கண்ட

அலுவலர்கள் கொண்ட கூட்டத்தில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குக் கால அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது.

கடன் நிவாரணத்தில் பெரும் பகுதி எத்தனை ஆண்டுகட்கு முன்பு வாங்கியிருந்தாலும், 2.10.1989 அன்று குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் கடன் நிலுவை உள்ளவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படும். இதற்கு எவ்விதச் சான்றிதழும் தேவையில்லை. இவற்றை அன்னியில் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வழங்கப்பட்ட அனாவாரி சான்றிதழ்களின் அடிப்படையிலும் நிவாரணம் வழங்கப்படும். மாவட்ட ஆட்சியாளர்கள் வறட்சி நிலைமைக்கேற்ப தத்தம் மாவட்டங்களில் சுமார் 15 நாட்கள் தேவைப்படும். அதாவது 15.7.90-க்குள் இப்பணி முடிவுறும். அடுத்த கட்டமாக வட்டார அளவில் வங்கி அலுவலர்களின் ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் கூட்டித் தகுதியுள்ள கடனாளிகளுக்குத் தள்ளுபடி செய்யப்படவேண்டிய தொகை குறித்த நபர் வாரிப் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். கடன் நிவாரணத் திட்டத்தை விரைவில் முடிப்பதற்குத் தேவைக்கேற்ப வட்டார அளவில் அடிக்கடி இத்தகைய ஒருங்கிணைப்புக் கூட்டங்களைக் கூட்ட வேண்டுமென அரசு அறிவுரை வழங்கியுள்ளது. இப்பணியை முடிக்க சுமார் ஒரு மாத காலம் தேவைப்படும். கடன் நிவாரண நடவடிக்கைகள் 31.8.1990 தேதிக்கு முன் முடிந்துவிடும்.

கடனாளிகள் விண்ணப்பம் கொடுக்க வேண்டியதில்லை. இறந்துபோன கடனாளிகளின் வாரிசுதாரர்களும், நொடித்தவர் (Insolvent) என அறிவிக்கப்பட்ட கடனாளிகள் மட்டுமே கடன் வழங்கிய வங்கிகளுக்கு எழுத்து மூலமாக விண்ணப்பங்கள் கொடுக்க வேண்டும்.

2.10.1989 தேதிக்குப் பிறகு செலுத்தப்படவேண்டிய கடன்களுக்கு இந்த நிவாரணத் திட்டம் பொருந்தாது. எனவே இத்தகைய கடன் நிலுவைகளையும் இத்திட்டத்தின்கீழ் நிவாரணம் பெறத் தகுதியற்ற கடன் நிலுவைகளையும் உடனே திருப்பிச் செலுத்துமாறு சம்பந்தப்பட்ட கடனாளிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Phone:288, 365

# KAVERI LODGE
# &
# HOTEL NARMADHA

## BOARDING & LODGING

KOVALAM ROAD
KANNIYAKUMARI - 629 702.
TAMIL NADU.

வாடிக்கையாளர் அனைவருக்கும்
எங்கள் நல்வாழ்த்துக்கள்!

# A.D.S. STORES

NAGERCOIL - 629 001.

பயனடைந்தோர்
பகர்வன:

மூவலூர் இராமாமிர்தம்
அம்மையார் நினைவு திருமண
உதவித் திட்டம்:



மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்

# ஏழைப்பெண்களின் ஏக்கப்பெருமூச்சை நீக்கும் திட்டம்!

''பேச்சாலும் எழுத்தாலும் நாடக நடிப்பாலும் நாட்டுக்குத் தொண்டு செய்து பகுத்தறிவைப் பரப்புகின்ற வீரத் தமிழ் இளைஞர்''

இது, நமது முதல்வர் கலைஞர் அவர்களுக்கு 1948-ஆம் ஆண்டில் மூதாட்டியார் ஒருவர் சூட்டிய புகழாரம்.

அன்னிபெசன்ட் அம்மையார் போன்ற தோற்றமும், அழுத்தமான குரலும், ஆவேசமான பேச்சும் கொண்டு அடிமைப் பட்டுக் கிடந்த சமுதாயத்தின் எழுச்சிக்காகப்பாடு பட்ட அந்த மூதாட்டியார் வேறு யாருமல்ல; தந்தை பெரியாரின் வழிநின்று பெண் மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்ட மூவலூர் ஆ. இராமாமிர்தம் அம்மையார் அவர்கள்தான் அந்த மூதாட்டியார்.

பெண்களை வஞ்சித்திடும் நிலை கெட்ட சமுதாய அமைப்பினை நிர் மூலமாக்கிட 'தாசிகள் மோசவலை' என்னும் நூல் இயற்றி, கருத்துப் புரட்சிக்குப் பெரும் வலிமை சேர்த் திட்ட வீராங்கனையான மூவலூர் மூதாட்டியார் இராமாமிர்தம் அம்மை யாரின் நினைவாக, அவர் போற் றிய ''வீரத் தமிழ் இளைஞர்'' கண்ட சீரிய திட்டம்தான் இலவசத் திருமண நிதியுதவி வழங்கும் திட்டம்.

'ஏழையாகப் பிறந்ததனால் திருமணம் நடக்கவில்லையே' என்று ஏக்கப் பெருமூச்சுவிடும் பெண் களின் வேதனையை நீக்கவந்த திட்டம் இது. அடுப்பூதும் பெண் களுக்குப் படிப்பு எதற்கு என்ற பழ மொழியை மாற்றி, பெண் கல்விக்கு ஆக்கம் தரும் திட்டம், இது.

தமிழக முதல்வர் கலைஞர் அவர் களின் திருக்கரங்களால் 1974-இல் துவக்கிவைக்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்தில், இத்திட்டத்தின் கீழ், கடந்த ஆண்டு 408 பெண்கள் பயன்பெற்றுள்ளார்கள். இவர் களுக்குத் திருமண நிதி உதவியாக ரூ. 22.40 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.



அரசு நலத்திட்டத்தால் மணம் கண்ட சோலையம்மாள் தன் தாயாருடன்

இத்திட்டத்தின் கீழ், பயன்பெற்ற பெண்களைச் சந்தித்துப் பேசிய போது இத்திட்டத்தின் அருமையை உணர்ந்திட முடிந்தது. 'திருமணம் என்பது எட்டாத கனி' என்று எண்ணியிருந்த பெண்களின் வாழ் வில் மறுமலர்ச்சியைத் தோற்று விக்கும் மகத்தான திட்டம் இது என்பதை அனுபவபூர்வமாக அறிந் திட முடிந்தது.

இத்திட்டத்தின் கீழ், பயன்பெற்ற முள்ளூர் கிராமத்தைச் சேர்ந்த லலிதா என்ற பெண்ணைப் பார்த்து இத்திட்டம் குறித்துக் கேட்டபோது ''இப்படி ஒரு திட்டம் வராவிட்டால் என்னைப்போன்ற பெண்களுக்குத் திருமணம் நடந்திருக்குமா என்பது சந்தேகம்தான்'' என்று எடுத்தஎடுப்பி லேயே அந்தச் சகோதரி தெரி வித்தார்.

தனது கருத்தை நிலைநிறுத்த தனது வாழ்க்கைச் சித்திரத்தை அவர் வார்த்தைகளால் தீட்டிக் காட்டி னார்.

''சிறுவயதிலேயே நான் தாயை இழந்தேன். தந்தை மறுமணம் செய்து கொண்டதால் சொந்த வீட்டில் இருக்கமுடியாமல் சின்ன வயதி லேயே எனது அத்தை வீட்டில் அடைக்கலம் புகுந்தேன். தன்னையே காப்பாற்றிக் கொள்ள வசதியற்ற அத்தை கஷ்டப்பட்டு என்னை வளர்த்தார். எஸ்.எஸ்.எல்.சி. வரை படிக்க வைத்தார். 27 வயதாகியும்

எனக்குத் திருமணம் செய்துவைக்க முடியவில்லையே என்ற வருத்தம், அத்தைக்கு- ஆனால் அவர் பணத்திற்கு எங்கே போவார்? என்று தனது நிலையை விளக்கிய அந்தச் சகோதரி ''இந்த நிலையில் இத்திட்டம் குறித்து அடுத்த வீட்டிலிருந்த ஆசிரியை ஒருவர் தெரிவித்தார்.- விண்ணப்பித்தேன்; ரூ. 5,000 கிடைத்தது- திருமணம் செய்து கொண்டேன்'' என்று சொல்லி முடித்தார்.

''இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தது யார் என்று தெரியுமா?'' என்று கேட்டபோது ''இது கூடத் தெரியாதா- தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தான்'' என்று குறிப்பிட்ட அந்தச் சகோதரி, ''நாட்டு மக்களின் நாடித் துடிப்பபை உணர்ந்த அந்தத் தலைவர் மிகப்பெரிய சமுதாய விஞ்ஞானி என்பதை இத்திட்டம் பறை சாற்றுகிறது''. என்று நன்றிப் பெருக்கோடு குறிப்பிட்டார்.

அதன்பின், இத்திட்டத்தின் கீழ், பயன்பெற்ற வாகவாசல் கிராமத்தைச் சேர்ந்த கஸ்தூரி என்ற பெண்ணைச் சந்தித்தோம், பிளஸ்டு வரை படித்த இந்த 23 வயதுப் பெண்ணுக்கு அப்பா இல்லை; அம்மா மட்டும் உண்டு. சமூகநலத் துறையின் மூலம் இலவசமாகத் தையல் இயந்திரம் ஒன்றைப்பெற்று, துணிகள் தைத்து சொற்ப வருவாயைக் கொண்டு குடும்பம் நடத்தி வந்தார்கள்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதி உதவித்திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்றுப் பயன்பெற்ற இச்சகோதரி...

''வறுமையில் வாடும் பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக வாய்த்த திட்டம் இது'' என்று குறிப்பிட்டார். ''எங்கள் ஊரில் இந்தத் திட்டத்தின் கீழ், பயன்பெற்ற முதல் பெண் நான்தான் என்ற வகையில் பெருமை அடைகிறேன்'' என்று அந்தச் சகோதரி, ''இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைத்தமிழ் சமுதாயம் என்றும் நெஞ்சில் நிறுத்திப் போற்றும்'' என்று தெரிவித்தார்.

அடுத்து, திருவரங்குளம் ஒன்றியம் பூவரசகுடி கிராமத்தில் இத்திட்டத்தின் கீழ், பயன்பெற்ற சோலையம்மாள் என்ற பெண்ணைச்சந்தித்து, இத்திட்டம் குறித்துக் கேட்டோம்.

''நான் 8 மாதக்குழந்தையாக இருக்கும்போதே எனது தந்தை இறந்துவிட்டார். தமிழக முதல்வர் தந்தையின் நிலையிலிருந்து எனது திருமணத்திற்கு நிதியுதவி வழங்கியுள்ளதாகக் கருதுகிறேன்'' என்று மனநெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

சோலையம்மாளின் தாயார் திருமதி மீனாம்பாள் இத்திட்டம் குறித்துச் கூறியதாவது:

''என் பெண்ணுக்குத் திருமணம் செய்து வைப்பதற்குப் பல ஆண்டுகளாக முயற்சி செய்து வந்தேன். கையில் காசு இல்லாததால் இந்த ஆண்டு- அடுத்த ஆண்டு என்று திருமணம் தள்ளிப் போய்க்கொண்டே வந்தது. மகராசன் கொண்டுவந்த இந்தத் திட்டத்தால் ரூ.5,000 கிடைத்தது. கடந்த ஆனி மாதம் 25-ஆம் தேதி என் மகளுக்குத் திருமணம் செய்து வைத்தேன். ஏழை வீட்டில் விளக்கேற்றி வைத்த மகராசன், என்றும் வாழவேண்டும்''. நன்றிப்பெருக்கோடு அந்தத்தாய் குறிப்பிட்டார்.

வன்னியன் விடுதியைச் சேர்ந்த இந்திராணி, பூமதி ஆகிய பெண்கள் அரசின் இந்த அரிய திட்டத்தால் அடைந்த பயனை நம்மிடம் விவரித்தார்கள். ஆலங்குடி கலிபுல்லாநகர் 3-ம் தெருவைச் சேர்ந்த முத்துலிங்கம் மகள் விஜயலெட்சுமி என்பவர் இத்திட்டத்தின் கீழ், பயன்பெற்ற பாங்கினை எடுத்துக் கூறிவிட்டு- ''இதுபோன்ற திட்டம் இதுவரை எந்த ஒரு அரசும் செயல்படுத்தியது இல்லை'' என்று குறிப்பிட்டார்.

இத்திட்டச் செயலாக்கம் குறித்துத் திருவரங்குளம் ஒன்றியத்தின் சமூக நல விரிவாக்க அலுவலர் திருமதி புஷ்பம் அவர்களிடம் கேட்டபோது, திருவரங்குளம் ஒன்றியத்தில் 57 பெண்களுக்குத் தலா ரூ.5,000 வீதம் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

கலிபுல்லாநகரில் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த சிவமலர் என்ற

**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதிஉதவித் திட்டத்தால் பலன் பெற்ற இந்திராணி- பூமதி தம்பதியர்.**



பெண்ணுக்குத் திருமணம் நிச்சயிக்கப் பட்ட விவரத்தையும், பணம் இல்லாத தால் திருமணம் தடைபட்டும் போன செய்தியையும் இத்திட்டத்தின் கீழ், நிதி உதவி பெற்று அவர் திருமணம் செய்துகொண்ட விவரத்தையும் சமூக நல விரிவாக்க அலுவலர் விவரித்தார்.

ஜாதி பேதமின்றி அனைவருக் கும் உதவக்கூடிய சீரிய திட்டம் இது என்பதற்கு எத்தனையோ எடுத்துக் காட்டுகளைக் கூறமுடியும்.

வடகாடு கூட்டான்புஞ்சைப் பகுதியைச் சேர்ந்த பெரியவர் ஒருவர் இத்திட்டம் பற்றிக் குறிப்பிடுகையில், ''மன்னர்கள் ஆட்சியில் கிடைக்காத நன்மைகள்கூட கலைஞர் அவர்களின் ஆட்சியில் கிடைக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

தனது பகுதியைச் சேர்ந்த தனலட்சுமி என்ற பிராமண வகுப் பைச் சேர்ந்த 32 வயதுப் பெண் ணுக்குப் பொருளாதார நெருக்கடி காரணமாகத் திருமணம் நடக்காத சூழ்நிலையினையும், இத்திட்டத்தின் கீழ் ரூ.5,000 பெற்று அவர் மணம் முடித்துக்கொண்ட நிலையினையும் அந்தப் பெரியவர் விவரித்துக் கூறினார்.

புதுக்கோட்டை சமூகநல அலுவலர் திருமதி ராதா ஸ்ரீனிவாசன் அவர் களைச் சந்தித்து இத்திட்டம் குறித்துக் கேட்டபோது, ''அரசின் விருப்பம் உணர்ந்து, திட்டத்தின் பயன், சிந் தாமல் சிதறாமல் முழுமையாகப் பயனாளிகளைச் சென்றடைய வேண்டும் என்பதில் கண்ணும் கருத் துமாக இருந்து காரியமாற்றி வரு கிறோம்'- இத்திட்டம் பெண் கல்விக் குத் தூண்டுகோலாக அமைந்துள்ளது'' எனக் குறிப்பிட்டார்.

தமிழக அரசு அறிமுகப்படுத்திய இத்திட்டத்தின் கீழ், பயன்பெற்ற பெண்களும், அவர்களின் பெற்றோர் களும், மனம் திறந்து நன்றிப்பெருக் கோடு தெரிவித்த கருத்துக்களைக் கேட்டிடும் போது- ''பெண்ணாகப் பிறந்துவிட்டால் பெற்றோருக்குச் சுமைதான் என்ற நிலையை மாற்றிட வந்த திட்டம் இது'' என்ற எண்ணம் தான் நமது இதயத்தில் தோன்று கிறது.

இ.ரெ. மகாலிங்கம்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
புதுக்கோட்டை.



பாவேந்தர்

நூற்றாண்டு:

தமிழனுக்கு வீழ்ச்சியில்லை;
  தமிழன் சீர்த்தி
தாழ்வதில்லை! தமிழ்நாடு
  தமிழ மக்கள்
தமிழ்என்னும் பேருணர்ச்சி
  இந்நாள் போலே
தமிழ்நாட்டில் எந்நாளும்
  இருந்த தில்லை!
தமிழர்க்குத் தொண்டுசெய்யும்
  தமிழ னுக்குத்
தடைசெய்யும் நெடுங்குன்றும்
  தூளாய்ப் போகும்!
தமிழுக்குத் தொண்டுசெய்வோன்
  சாவ தில்லை!

## அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

★ தருமபுரி மாவட்டத்தில் காவேரிப்பட்டிணம் அருகில் நடப்பாண்டில் ரூ.20 கோடி மதிப் பீட்டில் பழம் பதனிடும் தொழிற்சாலைக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்.

★ நலிந்த குடும்பங்களுக்கு உதவும் வகையில் ''நலிந்தோர் குடும்பநல உதவித் திட்டம்'' மற்றும் ''விபத்து நிவாரணத் திட்டம்'' ஆகிய இரு திட்டங் களைத் தமிழக அரசு அறிவித்துள்ளது.

இவற்றின் மூலம் ஒரு குடும்பத்தில் பொரு ளீட்டும் குடும்பத் தலைவர் இறந்துவிட்டால், அக் குடும்பத்தினருக்கு ரூ.3000/- தமிழக அரசு மூலம் உதவியாய் கிடைக்கும். இதுபோன்று ஏழைக் குடும்பத்தினர் கை-கால்-கண் இழந்தால், ரூ.10,000 உதவித் தொகையாகத் தமிழக அரசு வழங்கும்.

★ பன்னிரண்டு இலட்சம் விவசாயிகள் பயன் பெறும் வகையில் ரூ.500 கோடி அளவிற்குக் கடன் நிவாரணம் அளிக்கப்படுகிறது என்றும் இந்தக் கடன் நிவாரணச் சட்டம் 24.6.90 முதல் அமலுக்கு வருகிறது என்றும் தமிழக அரசு அறி வித்துள்ளது.

With
Best
Compliments
From

# RAJA STUDIO

Air Conditioned
College Road,
Nagercoil.

Phone: 5132

Pin: 629 001.

GRAM: MANICKAM PHONE:387

## MANICKAM TOURIST HOME
**NORTH CAR STREET, (NEAR SEA SHORE)**
**KANNIYAKUMARI-629 702.**

**A/C & NON A/C ROOMS & RESTAURANT ATTACHED**
**CHECKOUT TIME 24 HOURS**

★ HOME AWAY FROM HOME
★ HOMELY 24 HOURS SERVICE
★ CHINESE & CONTINENTAL DISHES
★ ALL ATTACHED BATH ROOMS
★ HOT AND COLD WATER
★ COMMON T.V. & VIDEO
★ MUSIC CHANNEL
★ VERY GOOD VIEW FOR SUN RISE & MOON RISE

தமிழகத்திற்குத் தடையின்றி

# மத்திய திட்ட உதவி தேவை!

முதல்வர் கலைஞர்

**மா**ண்புமிகு மத்திய திட்டக் கமிஷன் துணைத் தலைவர் ராமகிருஷ்ண ஹெக்டே தமிழக அரசுடனும், மாநில திட்டக் கமிஷனுடனும் 22.6.90 அன்று சென்னையில் விவாதம் நடத்தினார். பல்வேறு திட்டப்பணிகளும் பற்றி விவாதிக்கப்பட்ட இந்தக் கூட்டத்தில் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

''மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர் திரு ஹெக்டே அவர்களையும் மற்றும் நண்பர்களையும் உளப்பூர்வமாக வரவேற்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் வழிகாட்டுதலுடன் திட்டக் கமிஷன் தயாரித்த அருமையான செயல்திட்ட அறிக்கை குறித்தும், தேசிய வளர்ச்சிக் குழுவின் 41-வது கூட்டம் நடத்தப்பட்ட விதத்தையும் பாராட்ட விரும்புகிறேன்.

தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்திற்குப் பிறகு, எங்கள் மாநில திட்டக் குழுவைக் கலந்தாலோசிப்பதற்காக நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள முதலாவது மாநிலம் தமிழகம் என்பதில் பெருமகிழ்ச்சியடைந்து உங்களை நாங்கள் வரவேற்கிறோம்.

மாநிலங்கள் தங்களுக்கெனத் திட்டக்குழுவை அமைக்க வேண்டுமென்று மத்திய அரசு தெரிவித்த யோசனைக்கு முதன்முதலாகச் செவி சாய்த்தது தமிழகம்தான். 1971-ல் தி.மு.கழக அரசு, மற்ற எல்லா மாநிலங்களுக்கும் முன்மாதிரியாக அமையும் வகையில் மாநிலத் திட்டக் குழுவை அமைத்தது. அப்போது எல்லோருமே அதனை ஒருமுகமாகப் பாராட்டினார்கள்.

ஆனால் துரதிஷ்டவசமாக, கடந்த சில ஆண்டுகளில் மாநில திட்டக் குழுவில் வல்லுநர்களின் பங்கு பெரிதும் குறைக்கப்பட்டு, திட்டக் குழுவும் செயலற்றதாகி விட்டது.

1989-ல் நாங்கள் இந்த மாநிலத் திட்டக்குழுவை ''சிந்தனைக் கருவூலமாக'' (THINK TANK) இயங்கும் வகையில் பல்வேறு துறைகளில் புகழ் பெற்ற வல்லுநர்களைக் கொண்டு புதுப்பித்திருக்கிறோம்.

இந்த மாநிலத் திட்டக் குழு, 1989 மே மாதத்திலிருந்து இதுவரை நான்கு தடவை கூடியிருக்கிறது. திட்டக் குழுக் கூட்டங்களில் குறிப்பிட்ட சில விஷயங்களை விரிவான விவாதத்திற்காக எடுத்துக் கொண்டு ஆலோசனை நடத்தியிருக்கிறோம்.

வல்லுநர்கள் தெரிவிக்கும் புதிய கருத்துகளுக்கும், புதிய முயற்சிகளுக்கும், திட்டங்களை நிர்வகிப்பவர்கள் அமல் நடத்தும் திட்டங்கள் மற்றும் பணிகளுக்கிடையில் நல்லதொரு தொடர்பு இருக்குமாறு மாநில அரசு பார்த்துக் கொள்ளுவதை இந்தக் கூட்டங்கள் சாத்தியமாக்கியுள்ளன.

1990 பிப்ரவரி மாதத்தில் ஆண்டுத்திட்டம் பற்றி விவாதம் நடைபெற்றபோது, நான் தங்களிடம் கொடுத்த முறையீட்டில் இந்த மாநிலத்தை எதிர் நோக்கியுள்ள பல்வேறு அவசரப் பிரச்சினைகள் குறித்து விரிவாக விளக்கியிருக்கிறேன். இந்தப் பிரச்சினைகளில் சிலவற்றைப் பற்றி தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலும் நான் வலியுறுத்தியிருக்கிறேன்.

குறிப்பாகச் சில திட்டங்கள் குறித்து மீண்டும் உங்கள் ஆதரவைக் கோர விரும்புகிறேன். முதற்கண் வேலையில்லாத் திண்டாட்டம் பற்றி வலியுறுத்த விரும்புகிறேன்.

செயல்திட்ட அறிக்கையிலே கூட இதுபற்றி ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த மாநிலத்தின் பாசன வசதிகளை நாங்கள் முழு அளவில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். வேளாண்மைத் துறையில் வருங்கால வளர்ச்சிக்கு மிகக் குறைவான வாய்ப்புக்களே உள்ளன. கிராமப்புறத் தொழிலாளர்களைத் தொழில்களில் ஈடுபடுத்துவது ஒன்றுதான் இதற்கு ஒரே வழி என்று தோன்றுகிறது. தொழில்கள் வளர்ச்சிக்கு மின் உற்பத்தி இன்றியமையாததாகும்.

இந்த மாநிலத்தில் மின்சார உற்பத்திக்கு மிக அதிகமாகச் செலவாகிறது. சிங்கரேணியிலிருந்து நிலக்கரி அனுப்புவதற்குப் பதிலாக, வடமாநிலங்களிலிருந்து நிலக்கரியை ரயில், கப்பல் மூலமாக இங்கு கொண்டுவர வேண்டியிருப்பதுதான் இந்த அதிகச் செலவுக்குக் காரணம்.

நில மார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும் வெகு தூரத்திலிருந்து நிலக்கரியைக் கொண்டு வருவதால் 1989-90-ஆம் ஆண்டில் எங்களுக்கு ரூ.107 கோடி கூடுதலாகச் செலவாகியுள்ளது. ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு - நிலக்கரிக்காக ஆகும் செலவு சுமார் எழுபத்தைந்து பைசாவாகும். இதற்காக எங்களுக்கு நஷ்ட ஈடு கிடைக்கச் செய்வது அவசர அவசியமான ஒன்றாகும். அதுவரை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் உற்பத்தியாகும் மின்சாரம் முழுவதையும் தமிழ்நாட்டுக்கு ஒதுக்குவது பற்றி மத்திய அரசு பரிசீலித்தாக வேண்டும்.

பம்பாய் ஆழ்கடல் எரிவாயுவைத் தென் மாநிலங்களுக்கு விநியோகிப்

---

## இன்பம்!

நாமெல்லாம் ஒருகுடும்பம்!
ஆகா, அந்த
நயம்மிகுந்த வார்த்தையில்தான்
என்ன இன்பம்!

—கவிஞர் கண்ணதாசன்

பதற்காகப் பொது விநியோக அமைப்பு (GRID) ஒன்றை ஏற்படுத்த விரைவில் அனுமதி கிடைக்கச் செய்ய உங்கள் உதவியை, கர்நாடக மாநிலத்துடன் இணைந்து நானும் கோருகிறேன்.

மின்உற்பத்தித் துறையும், பெட்ரோலியத்தை அடிப்படையாகக் கொண்ட இரசாயனத் தொழில் துறையும் தென்னகத்தில் வளர்ச்சியடைய இது பெரிதும் துணைபுரியும்.

உற்பத்தி முனையிலும், நுகர்வோர் முனையிலும் மூலப் பொருட்களுக்கு விலைகளை நிர்ணயிக்கும் விஷயத்தில் நமது நாட்டில் கணிசமான நிர்ப்பந்தங்கள் காணப்படுகின்றன. விலைச் சமநீட்டு முறைக்கு (Price Equalisation) எல்லா இடங்களிலும் எதிர்ப்புக் காணப்படுகிறது. வரப்போகும் ஆண்டுகளில் மார்க்கெட் பொருளாதாரத்தை - குறிப்பாகத் தொழில்துறையில் - பேணி வர வேண்டுமெனில் எல்லா மாநிலங்களிலும் குறிப்பாகத் தென் மாநிலங்களில், அரிதான மூலப் பொருட்களும், விசை ஆதாரங்களும் கிடைக்கச் செய்ய விரைவில் நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டியது இன்றியமையாததாகும். தென் மாநிலப் பொருளாதாரம் போட்டியிடக் கூடிய திறன் உள்ளதாக விளங்கச் செய்வதற்காகத் தென்னக எரிவாயு பொது விநியோக அமைப்பிற்கு (Southern Gas Grid) தலையாய முன்னுரிமை வழங்க வேண்டுமெனத் தீவிரமாக வலியுறுத்துகிறோம்.

மாநிலத்தில் மத்திய அரசு முதலீடு செய்வது சம்பந்தப்பட்ட பிரச்சினையை இந்த மாநிலம் எழுப்ப விரும்புகிறது. ஆரம்பத்தில் பாரத் கனரக மின் நிறுவனம், இணைப்பு ரெயில் பெட்டித் தொழிற்சாலை, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் போன்ற சில பெரிய தொழில் நிறுவனங்களால் சிறு தொழில்கள் வளர்ச்சியடைவது சாத்தியமாயிற்று. ஆனால், அண்மை ஆண்டுகளில் பொதுத் துறையில் பெரிய முதலீடுகள் எதுவும் இல்லாமல் போய்விட்டதால், தொழில் வளர்ச்சி சுணக்கமடைந்துள்ளது. இந்த விஷயத்தில் மத்திய அரசு தலையிட்டு இந்த மாநிலத்தில் மத்திய அரசின் முதலீட்டைப் பெருக்கியாக வேண்டியது அவசியமாகும். அண்மை ஆண்டுகளில் இந்த மாநிலத்தில் மத்திய அரசின் முதலீடு மிகக் கடுமையாகக் குறைந்துவிட்டிருக்கிறது. மத்திய அரசு இவ்வாறு முதலீடு செய்யுமானால் மாநில அரசு மகிழ்ச்சியுடன் அதற்கான அனைத்து உதவிகளையும் புரியும்.

இது தொடர்பாக ஒரு விஷயத்தை வலியுறுத்த விரும்புகிறேன். சென்னை சுத்திகரிப்பு ஆலை நிறுவனத்தின் அரோமெட்டி தொழிற்சாலைத் திட்டத்திற்கு விரைவில் அனுமதி வழங்க வேண்டும். இது இந்த மாநிலத்தின் வளர்ச்சிக்கு மிக மிக முக்கியமானதாகும். இந்தத் திட்டத்திற்கான ஆயத்த நடிவடிக்கைகள் பலவற்றை மாநில அரசு ஏற்கனவே எடுத்திருக்கிறது.

ஒன்பதாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளினால் ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வுகள் பற்றித் தமிழ்நாடும், மற்ற மாநிலங்களும் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் எழுப்பியுள்ளன. அரசியல் சட்ட ரீதியான ஒரு அமைப்பின் பரிந்துரைகளை ஏற்றாக வேண்டியதுதான் என்று நிதியமைச்சர் அந்தக் கூட்டத்தில் பொதுப்படையாகக் கூறியதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். என்றபோதிலும், இந்தப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வைக் காண்பதற்காக மாற்று வழிமுறைகளைக் கண்டாக வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம்.

மனிதவள மேம்பாட்டுக்காக இது வரை செய்யப்பட்டுள்ள முதலீடுகளை மதிப்பிட்டு, அதனடிப்படையில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக ஒன்பதாவது நிதிக்குழு முயன்றிருக்கிறது.

தமிழ்நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து வல்லுநர் குழுக்கள் நடத்தியிருக்கும் ஆய்விலிருந்து, மனித வள மேம்பாட்டிற்காக இந்த மாநிலம் அதிகமாகவே முதலீடு செய்திருக்கிறது என்பது தெளிவாகிறது.

மத்திய அரசு மானியங்களில் இந்த மாநிலத்துக்கு உரிய பங்கு கிடைப்பதற்கு இந்த முன்னோடி நடவடிக்கைகள் ஒரு இடையூறாக இருந்து விடக்கூடாது.

ஒன்பதாவது நிதிக்குழுவின் பரிந்துரைகளின் விளைவாக ஏற்பட்டிருக்கும் முரண்பாடுகளைக் களைந்து-மத்திய திட்ட உதவிகளும் மற்றும் பிற வகையான உதவிகளும் தமிழகத்திற்குத் தங்குதடையின்றிக் கிடைக்க மத்திய திட்டக் குழுவும், அதன் துணைத் தலைவரான தாங்களும் தலையிட்டு ஆவன செய்வீர்கள் என நம்புகிறோம்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் உரையாற்றினார்.


நல் வாழ்த்துக்கள்

# ஹோட்டல் பிரபு

(அசைவம்)

121 மதுரை ரோடு
திருநெல்வேலி ஜங்சன்
பின்: 627 001.
போன்: 24094
தந்தி: PROTTA

245 காலேஜ் ரோடு,
நாகர்கோவில்
பின்: 629 001.
போன்:5015
தந்தி: BIRIYANI

# நகர்ப்புற ஏழைகளுக்கு வீட்டு வசதி



தேசிய வீட்டுவசதிக் கொள்கை பற்றிய நகல் மீதான, தென் பிராந்திய வல்லுநர்கள் மற்றும் அதிகாரிகள் மாநாடு சென்னையில் (22.6.90) நடைபெற்றது.

மாண்புமிகு மத்திய திட்டக்குழுத் துணைத்தலைவர் திரு இராமகிருஷ்ண ஹெக்டே, மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு முரசொலி மாறன் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்த இந்த மாநாட்டில், தேசிய வீட்டுவசதிக் கொள்கைக் கருத்தரங்கினை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், தொடங்கி வைத்துப் பேசினார்.

அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

**வீட்டுமனைகள், புதிய வீடு கட்டுதல், வீடுகளை அபிவிருத்தி செய்தல், பழைய வீடுகளைப் பழுது பார்த்தல், பழைய வீடுகளைப் புதுப்பித்தல் ஆகிய விஷயங்களில் கிராமப்புறங்களிலும், நகரங்களிலுமுள்ள ஏழை மக்களின் தேவைகளைக் குறைந்த அளவுக்கே பூர்த்தி செய்ய முடிந்திருக்கிறது என்பதை நாங்கள் உணராமல் இல்லை.**

**வீட்டு வசதி செய்து தருவதற்காக மட்டுமின்றி, அத்தகைய வீட்டு வசதிகளைச் செய்து தரும்போது கூடவே செய்தாக வேண்டிய குடிநீர் விநியோகம், வடிகால் வசதி, சாலை வசதி போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்காகவும்கூட, போதிய நிதி வசதி இல்லாததுதான் தமிழ்நாட்டின் முன்பும், மற்ற மாநிலங்களின் முன்பும் உள்ள மிக முக்கியமான இடர்ப்பாடாகும். நிதி வசதிகளை எழுப்பும் விஷயத்தில் நூதனமான வழிமுறைகளைக் கண்டுபிடித்துக் கையாண்டால்தான், இந்தப் பிரச்சினையை நாம் சமாளிக்க முடியும். இது தொடர்பாக, கணக்கில் காட்டாமல் மறைத்து வைக்கப்படும் வருமானங்களையும், கறுப்புப் பணத்தையும் குடிசை மாற்றுத் திட்டம், ஏழை-எளிய மக்களுக்கான வீட்டுவசதித் திட்டம் போன்ற காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற யோசனை இந்த நகல் கொள்கை அறிக்கையில் இடம் பெற்றிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.**

**நகர்ப்புற மனைகள், வீடுகள் விற்பனையில் ஹேஷ்ய பேரங்கள் மூலம் ஏராளமான கறுப்புப் பணம் உருவாகியிருப்பதால், இவ்வாறு சேர்ந்துள்ள பணத்தைப் பயன்படுத்துவதில் வீட்டு வசதித் திட்டங்களுக்கே தலையாய உரிமை அளிக்க வேண்டுமென்பதுதான் பொருத்தமாகும். இது சம்பந்தமாகத் திட்டவட்டமான திட்டமொன்றை மத்திய அரசு விரைவில் அறிவிக்குமென்று நம்புகிறேன்.**

**நகர்ப்புற நிலங்களையும், வீடுகளையும் விற்பதன்மூலம் கிடைக்கும் மூலதன லாபம், குடிசைப் பகுதி அபிவிருத்தி, வீட்டு வசதி ஆகியவற்றுக்காகப் பயன்படக் கூடிய மற்றொரு நிதி ஆதாரமாகும். தற்போது இத்தகைய மூலதன லாபங்களை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட செக்யூரிடிகளில் (அரசு கடன் பத்திரங்கள் போன்றவற்றில்) முதலீடு செய்தால், அவற்றுக்கு வரிவிலக்கு அளிக்கப்படுகிறது. இவ்வாறு முதலீடு செய்யப்படும் நிதிகளை மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளவேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்த விரும்புகிறேன்.**

**அப்படிச் செய்தால், மாநிலங்கள் சுழற்சி முறை அடிப்படையில் இந்த நிதி வசதியை நகர்ப்புற எழை மக்கள் வீட்டு வசதிக்காகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். சேரிப் பகுதிகளை மனிதர்கள் வசிப்பதற்கும் ஏற்ற குடியிருப்புகளாக அபிவிருத்தி செய்வதற்காக நகர்ப்புறப் பணக்காரர்களுக்குப் புதிய வரி ஒன்றை விதிக்கும் சாத்தியக்கூறு பற்றியும் தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**நகர்ப்புற நிலங்கள் மற்றும் வீடுகளை விற்பதன் மூலம் கிடைக்கும் மூலதன லாபத்தில் குறைந்த பட்சம் ஒரு பகுதியையாவது வளைத்துப் போடக் கூடிய நடவடிக்கைகளுடன் இந்த வரியை இணைக்கலாம். பணக்காரர்கள் வைத்துக்கொள்ளக் கூடிய**

நிலங்கள், வீடுகள் ஆகியவற்றுக்கு நியாயமான ஒரு உச்சவரம்பை விதித்து, அந்த வரம்புக்கு மேல் அவர்களிடமுள்ள நிலம் மற்றும் வீடுகளுக்கு வரி விதிப்பதுடனும் இதை இணைக்கலாம்.

இது சம்பந்தமாக இந்த நகல் கொள்கை அறிக்கையில், மனைகளுக்கும், குடியிருப்புகளுக்கும் குறைந்தபட்ச வரம்பு மட்டுமின்றி, உயர்ந்தபட்ச வரம்பும் நிர்ணயிக்கும் உத்தேசம் இருப்பதாகக் குறிப்பிட்டிருப்பது சரியான திசையில் அடியெடுத்து வைப்பதாகும். மிக ஏழ்மை நிலையிலுள்ள மக்களை வறுமைக் கோட்டுக்கு மேல் உயர்த்தும் முயற்சியில் வெற்றி காணவேண்டுமெனில், பிரதமர் அண்மையில் சுட்டிக்காட்டியிருப்பதுபோல, வளமைக்கோடு நிர்ணயிப்பது பற்றி நாம் சிந்தித்தாக வேண்டும்.

குறிப்பாக, வீட்டு வசதி விஷயத்தில் இது மிகப் பொருத்தமானதாகும்.

கிடைப்பதற்கு அரிதாக உள்ள நிலத்தையும் நிதி வசதியையும், கட்டிடப் பொருட்களையும் பணக்காரப் பிரிவினர் தங்கள் ஏகபோகமாக்கிக் கொள்வதை நாம் அனுமதிக்க முடியாது.

மிக முக்கியமான இந்தப் பிரச்சினை குறித்த தேசிய விவாதத்தை மத்திய திட்டக் கமிஷனின் துணைத் தலைவரும், எனது மதிப்புக்குரிய நண்பருமான திரு ராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் துவக்கி வைப்பது சாலப் பொருத்தமாகும்.

முதலமைச்சராக இருந்தபோதும், தற்போது திட்டக் கமிஷனிலும் அவருக்குக் கிடைத்துள்ள அரிய அனுபவம், பிரத்தியட்ச ரீதியில் அனுபவசாத்தியமான வீட்டு வசதிக் கொள்கையை வகுக்கவும், இந்தச் சிக்கலான பிரச்சினைக்கு நீடித்த பரிகாரம் ஒன்றைக் காணவும் வழிகாட்டி உதவும் என்பது திண்ணம்.

என் உரையை நிறைவு செய்யும் இந்த நேரத்தில், மிகவும் முற்போக்கான கொள்கை ஒன்றைத் தயாரித்து, வீட்டு வசதிக் கொள்கை பற்றிய அனைத்து அம்சங்கள் குறித்தும் சம்பந்தப்பட்ட அனைவருடனும் நாடு தழுவிய அளவில் விவாதம் நடத்த ஏற்பாடு செய்தமைக்காக மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிக்கிறேன். உங்கள் முயற்சிகளுக்கு வெற்றி கிடைத்திட வாழ்த்துகிறேன்.

—இவ்வாறு முதல்வர் கலைஞர் உரையாற்றினார்.

# பார்த்தோம் படித்தோம்

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் வண்ண முகப்பு (1.6.90) அருமை. கலைஞரின் பிறந்த மண் பெருமையை இதைவிட வேறு எவரால் எண்ணி எழுதி சிந்திக்க முடியும்?

—ப. முருகேசபாண்டியன்
கரப்பாடி
(கோயம்புத்தூர் மாவட்டம்)

கவியரசு வைரமுத்துவின் கவிதை தித்திக்கும் இன்பத் தேன் துளிகள்!

—க. குமரேசன்
திருவாரூர்
(தஞ்சை மாவட்டம்)

மாண்புமிகு கலைஞர் அவர்களின் வண்ண முகப்பு அருமையாக இருந்தது.

—எம்.எஸ். வேலுமணி
கே. மேட்டுப்பாளையம்
(பெரியார் மாவட்டம்)

தமிழகத்தில் புதிய ஆளுநராகப் பதவி யேற்ற மேதகு பர்னாலா அவர்களின் வாழ்க்கைக் குறிப்பையும், படத்தையும் வெளியிட்டமைக்கு நன்றி.

—எம். சேகர்,
தோட்ட நாவல்
(செங்கை-அண்ணா மாவட்டம்)

'மாணவர் பக்கம்' பாதுகாக்கப்பட வேண்டிய பகுதி.

—கொ.மு. மோகன்
வை. தொட்டியபட்டி,
(சேலம் மாவட்டம்)

தமிழக அரசின் திட்டங்களை மக்களுக்குத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. 'தமிழரசு', படித்துப் பாதுகாக்கப்பட வேண்டிய இதழ்.

—ஆர். சுப்பாராஜு
குருவிகுளம்
(திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்)

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களைப் பற்றி பல்வேறு தலைவர்களின் கருத்தோவியங்கள் சிறப்பிதழுக்குப் பெருமை சேர்த்தது.

—பி. கோவிந்தசாமி
ஊத்தங்கரை
(தருமபுரி மாவட்டம்)

## ஊக்குவிக்கும் ஒரு பணி

சென்னை-இராயப்பேட்டையில் உள்ள அரசுப் பொது மருத்துவமனையில் இருக்கும்- எங்களது இதயநோய் சிகிச்சைப் பிரிவுத் துறையின் மருத்துவப் பணிகள் பற்றி 'தமிழரசு' 16.5.90 இதழில் மிக அருமையாக வெளியிடப்பட்டிருந்தது. அதற்காக மருத்துவமனை சார்பிலும், அத்துறையின் தலைமை மருத்துவர் என்ற முறையிலும் 'தமிழரசு' ஆசிரியர் குழுவினருக்கு எங்கள் பாராட்டுதலையும், இதயபூர்வமான நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மருத்துவமனையில் உள்ள இதய நோய் சிகிச்சைப் பிரிவு பற்றி உள்ளது உள்ளபடி நல்லவிதமாக எழுதியிருப்பதானது - மற்ற அரசுத் துறைகளில் இருப்பவர்களது தூய பணியை இன்னும் ஊக்குவிப்பதாக உள்ளது. மருத்துவமனைகளில் இருக்கும் மற்ற மற்ற சிகிச்சைப் பிரிவுகள் குறித்தும் இதுபோன்ற கட்டுரைகள் தொடர்ந்து ஒவ்வொரு 'தமிழரசு' இதழிலும் இடம்பெறச் செய்யலாம். நன்றி.

—டாக்டர் சி.வி. பிரம்மானந்தம்
தலைமை மருத்துவர்
இருதய நோய் சிகிச்சைப் பிரிவு,
இராயப்பேட்டை மருத்துவமனை,
சென்னை-600 014.

''மக்களுக்கு- குறிப்பாக விவசாயிகளுக்குப் பயன்படக்கூடிய வகையில் புதுமையைக் கண்டுபிடிக்கிற வித்தகர்களுக்கு ஆண்டுதோறும் அரசின் சார்பில் விருது வழங்கப்படும்... இனி, இந்த வேளாண்மைப் பல்கலைக் கழகம் 'ஜி.டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்' என்று அறிவிக்கப்படும்''- என, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 24.6.90 அன்று கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பேருரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

## வேளாண்மை உற்பத்தி பெருகிட

# மேலான தொழில்நுட்பம் காண்போம்

4-வது ஆட்டை சொல்லும் செய்தி:

1969-ல் பஞ்சாப் மாநில முதல்வர் திரு குர்னாம்சிங் அவர்களால் அழைக்கப்பெற்று, அந்த மாநிலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன். மாலை நேரத்தில் சாலைகளில் டிராக்டர்களில் விவசாயிகள் தங்கள் குடும்பத்தினருடன் அழகிய உடைகள் அணிந்து திரைப்படக் காட்சிகளுக்குச் செல்லும் குதூகல வாழ்வைக் கண்டு பூரிப்பு கொண்டேன். அந்த மண்ணின் மைந்தர்களுக்கு ஆக்கப்பூர்வமான விவசாய வளர்ச்சிக்கு வழி வகுத்திடும் விபரம் அறிந்தேன். அங்கிருந்து திரும்பியவுடன் தமிழகத்திலும் ஒரு வேளாண்மைப் பல்கலைக் கழகம் உருவாகும் என அறிவித்தேன். அந்தப் பல்கலைக் கழகம்தான் இது!

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 1971-ல் பல்கலைக் கழகமாக மலர்ந்ததும், கடந்த 19 ஆண்டுகளாக, வேளாண்மை வளர்ச்சியின் முக்கிய அங்கமாக, அரணாக இருந்து, ''உழுவோம், உழைப்போம்! உயர்வோம்!'' என்னும் உயரிய குறிக்கோளுடன் பணியாற்றி வருவதும், வரலாறு பெருமையோடு குறித்துக்கொள்ள வேண்டிய செய்திகளாகும்.

உலகப்பொதுமறை, 10 குறட்பாக்களில் பாங்காக விளக்கிய வேளாண்மையை- உழவுத் தொழிலை- இன்று அறிவியல் வாயிலாக, ஆராய்ச்சிகளின் பரிமாணங்களை வரையறுத்து, தொழில் நுட்ப உத்திகளைப் பெருக்கி, உழவுத்தொழிலை உன்னதமாகச் செய்து வருகின்ற உழவர் பெருமக்களுக்கு வழங்கிடும் புனிதமான பணியில் ஈடுபட்டிருக்கின்ற வேளாண்மைக் குடும்பத்தைச் சார்ந்த விஞ்ஞானிகள், விரிவாக்கப் பணியாளர்கள், உழவர்கள் அனைவரும் பெருமையோடு போற்றத்தக்கவர்கள்.

''நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்'' என்னும் பாவேந்தர் நல்மொழிக்கிணங்க, இந்தப் பல்கலைக் கழகத்தில் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மைப் பொறியியல், வனவியல், மனையியல் ஆகிய பல்வேறு பிரிவுகளும் ஒரு நல்ல குடும்பமாக இணைந்திருப்பது கண்டு பெருமையடைகின்றேன்.

வேளாண்மை வளர்ச்சியில், நாம் ஒரு திருப்பு முனையை ஆர்வமாக எதிர்நோக்கியுள்ளோம். 21-ம் நூற்றாண்டில் நம் நாட்டின் மக்கள் தொகை 100 கோடியை நெருங்கும். இந்த 100 கோடி மக்களுக்கும், மொத்தமாக உணவு உற்பத்தித் தேவை 240 மில்லியன் டன்களாக உயரும் என்பது கணிப்பு.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்தில் சீராக முன்னேறிக்கொண்டே வருகின்றோம். சாகுபடி நிலப்பரப்பு குறைந்து வருகின்ற போதிலும், தானிய உற்பத்தி அதிகரித்துள்ளது. தமிழ் நாட்டில் ஒரு தனி நபருக்குக் கிடைக்கக்கூடிய நிலத்தின் அளவு இந்தியாவில் மற்ற பகுதி மக்களுக்குக் கிடைக்கக் கூடிய நிலத்தின் அளவில் அரைப்பங்குதான். தண்ணீரைப் பொறுத்தவரை கால் பங்கு மட்டுமே. இருந்த போதிலும் 1989-90 ஆண்டில் தமிழகத்தின் அரிசி உற்பத்தி அறுபத்தி இரண்டரை இலட்சம் டன்களாக உயர்ந்திருக்கின்றது. எக்டருக்கு சுமார் 3090 கிலோ அரிசி என்ற கணக்கில் நல்ல விளைச்சல் கண்டு பெரிய சாதனை படைத்துள்ளோம். அதேபோன்று, கரும்பு, நிலக்கடலை, பருத்தி ஆகிய பயிர்களிலும் உற்பத்தி கணிசமாக உயர்ந்திருக்கிறது. இந்த முன்னேற்றங்களுக்கெல்லாம் அச்சாணியாக இருப்பது, வேளாண்மை ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விரிவாக்கப் பணியாளர்களின் ஒருங்கிணைந்த முயற்சியும், உழவர்களின் இடையறா உழைப்பும் ஆகும்.

தமிழ்நாட்டின் தற்போதைய மக்கள் தொகை 5.2 கோடியாகும். இது கி.பி. 2000-ல் 6.6 கோடியாக உயர்ந்துவிடும் என கணக்கிடப்பட்டுள்ளது. 2000-ம் ஆண்டில் நமக்கு 100 இலட்சம் டன் உணவுத் தானியங்கள் தேவையாக இருக்கும். நமது இந்த தேவைகளைக் கணக்கில் கொண்டே வேளாண்மை மற்றும் சார்புத் தொழில்களுக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு, வருகின்ற ஆண்டில் வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்கு ரூ.160.29 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு நமது மாநிலத்தில் விளைநிலத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு உத்திகளைக் கையாளுவதுடன், நிலச் சீர்திருத்தச் சட்டங்களையும் கொணர்ந்து விரைவாகச் செயல்பட ஆவன செய்து வருகிறது.

கிராமப்புற வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, சாலை மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல் மானாவாரி பண்ணை சாகுபடி, சிறப்பு உணவு தானியங்கள் உற்பத்தித் திட்டம், கரும்பு மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த பண்ணை மேம்பாட்டுத் திட்டங்கள் எனப் பல்வேறு வேளாண்மைத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

உலக வங்கியின் உதவியுடன் பண்ணைக்குட்டை அமைப்புத் திட்டம் மற்றும் மானாவாரித் தொழில் நுட்பங்களைப் பரிமாறுதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறப்பு உணவு தானிய உற்பத்தித் திட்டத்தில், தீவிர நெல் சாகுபடி உற்பத்தித் திட்டம் செங்கை அண்ணா, வடஆர்க்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை சம்புவராயர், தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி,



# சென்னையில் 25 ஏழை மகளிருக்குத் திருமண நிதியுதவி

தமிழ்நாடு அரசின் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் சென்னை மாநகராட்சி மூலம் திருவல்லிக்கேணி யில் 25 ஏழை மகளிருக்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் ஒவ்வொருவருக்கும் 30.6.90 அன்று ரூ.5,000 பெறுமான காசோலைகளை வழங்கினார்.

சென்னை மாநகராட்சியில் 8 வது வட்டத்தைச் சார்ந்த 21 பேர்களுக்கும், 9 வது வட்டத்தைச் சேர்ந்த 4 பேர்களுக்கும் 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கிப் பேசுகையில், "அரசின் நல வாழ்வுத் திட்டங்களைக் குறைகூறுவோரும், பழித்தும் இழித்தும் பேசுவோரும் இருப்பினும் அரசு இடையுறாது தொடர்ந்து இந்தத் திட்டங்களை நிறைவேற்றியே தீரும்" என்றும், "மக்களுக்கு நன்மைகள் சென்று சேர வேண்டும் என்று ஒரே நோக்கத்தோடு செய்யப்படுகின்ற பணிகள் இவை" என்றும் கூறினார்.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய உறுப்பினர் திரு. எஸ்.ஏ.எம். உசேன் தலைமை வகித்தார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. அரங்கநாதன், ஒன்பதாவது வட்ட அலுவலர் திரு. வி. இரமணன் ஆகியோர் பேசினர். திரு. முரளி நன்றி கூறினார்.

---

புதுக்கோட்டை, மதுரை மற்றும் நெல்லை கட்டபொம்மன் ஆகிய ஒன்பது மாவட்டங்களில் நடப்பு ஆண்டில் தொடரப்பட்டு வருகிறது.

கீழ் மட்டத்தில் இடு பொருள் விநியோக வசதிகளை வலுப்படுத்தும் பொருட்டு தற்போதுள்ள 783 வேளாண்மை விரிவாக்க மையங்களுடன் 100 புதிய விரிவாக்க மையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. சான்றளிக்கப் பட்ட நெல் விதை விநியோகத்தை அதிகரிக்கும் பொருட்டு வரவு - செலவுத் திட்டத்தில் ரூ.8.28 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உலக வங்கியின் உதவியுடன் ரூபாய் 170 கோடி செலவில் ஒருங்கிணைந்த வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் வேளாண்மை விரிவாக்கப் பணிகளைத் திருத்தி அமைப்பதும், விதை உற்பத்திக்கான வசதிகளைப் பெருக்குவதும், தீவனப்பயிர் மேம்படுத்துதலும், நீர்ப்பள்ளத்தாக்கு பராமரிப்புத் திட்டங் களும் மற்றும் ஊரகச் சாலை மேம்பாட்டுத்திட்டங்களும் அடங்கும்.

டென்மார்க் நாட்டின் உதவியுடன் ரூ.6.25 கோடி செலவில் ஒரு மானாவாரி பண்ணைத் திட்டம் வ.உ. சிதம்பரனார் மற்றும் நெல்லை-கட்டபொம்மன் மாவட்டங் களில் 44 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்தப் பட உள்ளது. இத்துடன் மாநிலம் முழுவதும் ரூ.1.50 கோடி செலவில் ஒருங்கிணைந்த மானாவாரி பண்ணைத் திட்டத்தைச் செயல்படுத்தவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

ஏராளமான நிலமில்லாத விவசாயத்தையே நம்பி யிருக்கும் கூலி வேலை செய்பவர்களின் வாழ்க்கைத் தரம் உயர, ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்பு கிடைக்க, வேளாண்மையுடன் கால்நடை பராமரிப்பு, மீன்வளர்ப்பு, பண்ணைக் காடுகள் ஆகியவை இணைந்த கலப்புப் பண்ணைத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். வேளாண்மைச் சார்புத் தொழிலையும் பெருக்க வேண்டும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக மாணவ, மாணவிகள் பல்வேறு பொதுத் தேர்வுகளில், பெருமைப் படத்தக்க இடங்களைத் தக்க வைத்துக் கொண்டிருக் கிறார்கள் என்பதையறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆண்களோடு சரிநிகர் சரிசமமாகப் போட்டியிட்டு, எண்ணிக்கையிலும், கல்வியின் தரத்திலும் வளர்கின்ற பல்கலைக்கழகத்தின் பெண் பட்டதாரிகள் ''அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு'' என்கின்ற பழமையைப் பழமையாக்கி, வேளாண்மை வளர்ச்சிக்கு வித்திட்டிருக் கிறார்கள்.

இந்தப் பாரம்பரியம் மிக்க பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்கள் கற்ற வேளாண்மைக் கல்வியையே அடிப்படையாகக் கொண்டு, சுயவேலை வாய்ப்பில் ஈடுபட்டு கிராமங்களில், சிறு நகரங்களில் நீங்கள் முன்னுதாரணமாக செயல்பட்டு வளம் பெருக்க வேண்டு மென்று விரும்புகின்றேன். இதன் மூலம் வேளாண்மை யிலும் சிறு சிறு தொழில்கள் செயல்படுத்தப்படும் கிரா மங்களில் வேளாண்மையில் புது மறுமலர்ச்சி ஏற்பட வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

இப்பல்கலைக் கழகத்தின், பழைய மாணவர்கள்- திக்கெட்டும் சென்று- பல்வேறு உயர்ந்த நிலைகளில் பணிபுரிந்து வருகின்றார்கள். இப்பட்டமளிப்பு விழாவில்- சிறப்புப் பட்டங்கள் பெறுகின்ற பெருமைக்குரிய நண் பர்கள் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் ராமச்சந்திரன், மற்றும் கடந்த ஆண்டு சிறப்புப் பட்டம் பெற்ற டாக்டர் சுவாமிநாதன் ஆகியோர் இப்பல்கலைக் கழகத்தின் பழைய மாணவர்களே என்று அறிந்து மகிழ்கின்றேன். இச்சிறப்பால், அவர்களுக்கும் பெருமை - அவர்களால் இப்பல்கலைக் கழகமும் பெருமை பெறுகின்றது.

வேளாண்மைக் கல்வியை மேலும் வலுவூட்டும் வகை யிலும், நமது மாநிலத்தின் நடுநாயகமாக அமைந்துள்ள திருச்சி மாவட்டம், அதைச் சுற்றிலுமுள்ள புதுக்கோட்டை, திண்டுக்கல் காயிதே மில்லத், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங் களில் வறண்ட பகுதிகளை மேம்படுத்தவும், அங்குள்ள வேளாண் குடிப்பெருமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டத்தில் உள்ள குமுழூர் கிராமத்தில் அன்பில் தர்ம லிங்கம் வேளாண் கல்லூரியை இந்த அரசு சென்ற ஆண்டு தொடங்கியுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு, நமக்குத் தேவை யான உணவுப் பொருட்கள் கிடைக்காமல், வெளிநாடு களில் இருந்து இறக்குமதி செய்தது நாமெல்லாம் அறிந்த நிகழ்ச்சியாகும். ஆராய்ச்சியின் மூலமாக உயர் விளைச்சல் இரகங்களும், தொழில் நுட்பங்களும் கண்டறியப்பட்டு இன்று நமக்குத் தேவையான உணவை நாமே உற்பத்தி செய்யும் நிலையில் உள்ளோம். அதற்காகப் பாடுபட்ட இப்பல்கலைக் கழக வேளாண்மை விஞ்ஞானிகள், வேளாண்துறை அலுவலர்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் ஆகியோரைப் பாராட்டுகிறேன்.

இனிவரும் ஆண்டுகளில் நீர்ப்பராமரிப்பு, மானாவாரி சாகுபடி, சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி, தரிசு நிலங்களை மேம்படுத்துதல், கடலோரப் பகுதி நிலமேம்பாடு ஆகிய துறைகளில் அதிக அளவில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

நமக்குத் தேவையான நிலத்தடி நீர் குறைந்து வருகிறது. சாகுபடி நிலப்பரப்பில் 47 விழுக்காடு மட்டுமே பாசன வசதி பெற்றுள்ளது. இத்தருணத்தில் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். குளம், குட்டை, கால்வாய், கிணற்று நீர்ப்பாசனங்களின் நிர்வாகத்தைச் செம்மைப் படுத்த வேண்டும். மழை நீர், நிலத்தில் வழிந்து ஓடாமல் தேக்கி வைத்து விவசாயத்திற்கு முழுமையாகப் பயன் படுத்த வேண்டும். தோட்டப் பயிர்களின் சாகுபடியில் நவீன உத்திகளைக் கையாண்டு மகசூலை அதிகரிக்க வேண்டும். குறிப்பாக தோட்டப் பயிர்களில் சொட்டு நீர்ப்பாசனம் பெருமளவு பயன்படுத்தப்பட்டு மகசூலை அதிகரிக்க வேண்டும். ஒவ்வொரு பயிருக்கும் குறைந்த அளவு நீர்த் தேவை, அதிக மகசூல் அடைவதற்கான நீர்த் தேவை முதலியவற்றைக் கணக்கிட வேண்டும். நமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு சொட்டுத் தண்ணீரையும் வீணாக் காமல் பயன்படுத்த வேளாண் பெருமக்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

நமது மாநிலத்தில் உள்ள ஏராளமான தரிசு நிலங்களை சாகுபடிக்கு ஏற்ற நிலங்களாக மாற்ற வேண்டும். அதற்கேற்ற பயிர்களையும், சாகுபடி முறை களையும், ஆராய்ச்சியின் மூலமாக உருவாக்க வேண்டும். கிராமப்புற மேம்பாட்டுக்காக கால்நடை, மீன்வளம், வேளாண்மை, வேளாண் பொறியியல், வேளாண் வனவியல் ஆகியவை ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

இப்பல்கலைக் கழகத்தில் உயிரியல் தொழில் நுட்பத் துறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக, எளிதில் அடைய முடியாத அநேக உயர் விளைச்சல் பயிர் இரகங் களையும், நோய் பூச்சி எதிர்ப்பு சக்தி உள்ள இரகங்களை யும், உருவாக்க இயலும். நோய் பூச்சிகளைக் கட்டுப் படுத்தி நிர்வகிக்கவும், கழிவு நீரை நுண்ணுயிர்கள் மூலம் சுத்தம் செய்து சுற்றுப்புறத்தைப் பாதுகாக்கவும், இதுவரை உபயோகத்திற்குக் கொண்டு வராத இயற்கை சக்திகளைப் பயன்படுத்தவும் இத்துறை பெரிதும் உதவும். அறிவியல் பூர்வமான தொழில்நுட்பங்களை, வணிக ரீதியில் இலாப கரமான தொழில்களாக மாற்றுகின்ற உத்திகளை உழவர் களுக்கும், கிராமங்களிலுள்ள இளைஞர்களுக்கும் அறிய வைத்து பயன்பெறச் செய்ய வேண்டும். இதுவே இன்றைய கிராமங்களின் அடிப்படை முன்னேற்றத்திற்கு அடிகோலு வதாகும்.

அதிக மகசூல் அடைய உயர் விளைச்சல் இரகங்களின் தரமான விதைகளைப் பல்கலைக்கழகமும், வேளாண் துறையும் இணைந்து செயல்பட்டு வேளாண் பெரு மக்களுக்கு வழங்கி வருவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். இத்தருணத்தில், மூலவிதை, ஆதாரவிதை, சான்றிதழ் பெற்ற விதை உற்பத்தியின் அளவை மென்மேலும் அதிகப்படுத்தி, வேளாண் பெருமக்கள் அனைவரும் அதன் பயனை அடைய ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

உணவு உற்பத்தியில் ஆராய்ச்சியும், சாதனையும், மனநிறைவு தருவதாக இருந்தாலும், எண்ணெய்வித்து பயறுவகை, காய்கறி, மற்ற தோட்டப் பயிர்களின் ஆராய்ச்சியைத் தீவிரப்படுத்த வேண்டும்.

மண், நீர், காற்று ஆகிய மூன்றும் அதிக அளவு மாசுபடுத்தப்பட்டு வருவதை உலகம் முழுவதும் மிகுந்த கவலையுடன் நோக்கி இருக்கும். இத்தருணத்தில், சுற்றுப் புறச்சூழல் ஆராய்ச்சியை மேற்கொண்டு, விரைவில் சுற்றுப் புறத்தைப் பாதுகாக்க வழிவகுக்க வேண்டும். இந்தத் துறையின் இப்பல்கலைக் கழகத்துடன் தமிழ்

**பசியெனத் தோன்றுவோர்**
**பகைவர்கள் ஆயினும்**
**புசியெனச் சொல்லுவோம்**
**புதியதோர் உலகிலே!**
**—கவியரசர் கண்ணதாசன்**

நாட்டில் உள்ள மற்ற பல்கலைக் கழகங்களும், தனியார் நிறுவனங்களும் இணைந்து செயல்பட வேண்டும் என விரும்புகிறேன்.

மேலும் போதிய மழைப் பொழிவைப் பெறவும், இயற்கைச் சூழ்நிலையைப் பாதுகாக்கவும், குறைந்தும், அழிந்தும் வரும் வனப் பகுதியைப் பாதுகாக்கவும் தீவிர ஆராய்ச்சி கல்வி மற்றும் பயிற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

விரிவாக்கக் கல்வி மூலமாக விவசாயிகள் நிலத்தில் அனுசரணை ஆராய்ச்சி மேற்கொள்ளுதல், மாதிரிப் பண்ணைகள் அமைத்தல், விரிவாக்கப் பணியாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் பயிற்சி அளித்தல், வானொலி, ஒலி-ஒளி நாடாக்கள், தொலைக்காட்சி மூலமாக விவசாயிகளுக்குப் பாடங்களையும், பயிற்சிகளையும் அளிப்பதுடன், உருவாக்கப்பட்ட உயர் விளைச்சல் இரகங்களும், தொழில் நுட்பங்களும் விரைவில் கிராமப்புற விவசாயிகளைச் சென்று சேர்தல் ஆகியவற்றால் நாம் எதிர்பார்க்கும் நல்ல மாற்றங்களை விரைவில் அடைய முடியும்.

விஞ்ஞானிகள், விவசாயப் பெருங்குடி மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, அவர்களின் தேவைகளை நேரிடையாக அறிவதனால் அவர்களின் தேவைக்கேற்ற ஆராய்ச்சி மேற்கொள்ளவும், ஏற்கனவே வெளியிட்டுள்ள தொழில் நுட்பங்களைச் சீர்படுத்தவும் இயலும்.

விவசாய வேலையில் ஈடுபட்டுள்ள பெண்களும் மற்றவர்களும் சோர்வடையாமல் வேலை செய்வதற்காக, புதிய கருவிகள் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியும், அந்தக் கருவிகளைப் பயன்படுத்தப் பயிற்சியும் மேற்கொள்ள வேண்டும்.

நமது பட்டப்படிப்பு, ஏட்டோடு நில்லாமல் சமுதாயத்தில் நலிந்தவர்கள், கிராமப்புறப் பெண்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து வரும் ஏழை எளிய மக்கள் ஆகியோரின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான இப் பல்கலைக் கழகத்தில் அளிக்கப்பட்டுவரும் பயிற்சிகள் மேலும் தீவிரப்படுத்தப்பட வேண்டும்.

உணவுப் பொருள் தேவை காரணமாக, வேளாண்மை உற்பத்தியில் நிலவிவரும் இயற்கைச் சூழ்நிலையையும் விவசாயிகளினுடைய இலாபத்தினையும் பொருட்படுத்தாத நிலையில் நமது திட்டங்கள் அமைந்துவிடக் கூடாது. ஆகவே, பொருளாதார ரீதியில் வலுவான, இயற்கையோடு இணைந்த வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கும் தொழில் நுட்பங் கண்டறிந்து பரப்ப வேண்டும்.

இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக அறிவியலார் தங்கள் முழுமையான ஆற்றல், அறிவு, அனுபவம் ஆகியவற்றைப் பயன்படுத்தி வேளாண் விளைபொருள் உற்பத்தியை அதிகப்படுத்துவதில் நாட்டம் கொள்ள வேண்டும்.

1971-ல் முதலமைச்சராக நான் இப்பல்கலைக் கழக வளாகத்திற்கு வரும் வாய்ப்புப்பெற்றேன். இலண்டன் மாநகரில் எனக்குப் பரிசாக வழங்கப்பட்ட பர்கூசன் டிராக்டரை இந்தப் பல்கலைக் கழகத்திற்கு வழங்குவதாக அந்த இடத்திலேயே அறிவித்தேன். இதிலிருந்து எனக்கு இந்தப் பல்கலைக் கழகத்தின்பால் உள்ள பாச உணர்வு எத்தகையது என்பதை அறிவீர்கள். இந்தியாவில் முதன்மை பெற்று விளங்கும் ஒருசில வேளாண் பல்கலைக் கழகங்களில் இப்பல்கலைக் கழகமும் ஒன்று என்பதில் நான் மிகவும் பெருமை கொள்கிறேன்.

இப்பல்கலைக் கழகத்திலிருந்து பட்டம் பெற்று வெளியே சென்றுள்ள பட்டதாரிகள் உலகத்தின் பல்வேறு பகுதிகளில் உயர் பதவி வகிக்கின்றார்கள். தற்போதைய தமிழக அரசு, வேளாண்மைக்கு அதிக அளவில் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்கு உங்களின் சேவையையும் - அறிவுத் திறமையையும் பயன்படுத்திக் கொள்ள தமிழக அரசு அதிக வாய்ப்புகள் கொடுக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

இவ்விழாவில் பட்டம் பெறும் உங்களுக்கு வளமான எதிர்காலம் அமைய வாழ்த்துகிறேன். தமிழக மக்களின் முன்னேற்றத்திற்கு அதிக அளவில் நீங்கள் பாடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். இதன்மூலம் மிகச் சிறந்த நிறுவனமாகத் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் தொடர்ந்து சிறந்து விளங்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இங்கு வேளாண்மைத்துறை வாயிலாக சில பரிசுகள் பற்றி அறிவிக்கப்பட்டது. அதோடு இணைந்து ஆண்டுதோறும் ஒரு பரிசை சிறந்த ஆராய்ச்சிப் பேராசிரியர்கள் தேவையான ஒரு புதிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு, மக்களுக்கு குறிப்பாக விவசாயிகளுக்குப் பயன்படக்கூடிய புதுமையைக் கண்டுபிடிக்கின்ற வித்தகர்களுக்கு ஆண்டுதோறும் அரசின் சார்பில் ஒரு விருது வழங்க ஒரு லட்ச ரூபாய் (பலத்த கைதட்டல்) வைப்பு நிதிக்கு வழங்கப்படும். அதிலிருந்து கிடைக்கின்ற வட்டியைக் கொண்டு அவர்களுக்கு ஆண்டுதோறும் அரசின் சிறப்பு விருது வழங்கப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன் இந்தக் கோவையில் பிறந்து விஞ்ஞானத் துறையிலே அதிக வசதி வாய்ப்புகள் இல்லாத கால கட்டத்திலேயே விஞ்ஞானத்தில் பல புதுமைகளைச் செய்து விவசாயத் துறையிலே பல அற்புதங்களைச் செய்து காட்டியவர் ஜி.டி. நாயுடு என்பதை அனைவரும் அறிவோம். ஆனால் அவருக்கு அன்றிலிருந்து அரசுகளால் எந்த விதமான அனுமதியும், அங்கீகாரமும் தராத காரணத்தால் குடத்திற்குள் வைக்கப்பட்ட விளக்காக அவருடைய ஆராய்ச்சிகள் போய்விட்டன. அவருடைய பெருமையை உலகிற்கு எடுத்துச் சொல்ல இந்த வேளாண்மைப் பல்கலைக் கழகம் ''ஜி.டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்'' என்று அறிவிக்கப்படுகிறது. வேந்தர் அவர்களையும் கலந்து கொண்டு இதனை அறிவிக்கிறேன்.

## பாவேந்தர் நூற்றாண்டு:



தமிழகத்தில் மலைபோன்ற
செல்வத் தாரும்
தம்ஆணை பிறர்ஏற்க
வாழு வாரும்
தமிழர்க்கோ தமிழுக்கோ
இடையூ றொன்று
தாம்செய்து வாழ்ந்தநாள்
மலையே நிற்றே!

TNPSC

**விளம்பர எண். 21/90**

தேர்வாணையத்தின் விளம்பர எண் 7/90இல் வெளியிடப்பட்ட தேர்வாணையத்தின் அலுவலர்/ மகளிர் பள்ளி ஆய்வாளர் பதவியில் 13 காலியிடங்களுக்கு விண்ணப்பங்களை வரவேற்கும் அறிவிக்கையில் கீழ்க்கண்ட பாடங்களில் முதுகலைப் பட்டம் பெற்ற விண்ணப்ப. தாரார்களைக் கொண்டு இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது:

| Subject (1) | | No. of Vacancies (2) |
|---|---|---|
| Physics | - | 3 |
| Mathematics | - | 2 |
| Chemistry | - | 4 |
| Commerce | - | 1 |
| Zoology | - | 1 |
| Botany | - | 1 |
| Geography | - | 1 |

கீழ்க்கண்ட பாடங்களில் முதுகலைப் பட்டம் பெற்ற விண்ணப்பதாரர்களைக் கொண்டு இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது:-

| Subject (1) | | No. of Vacancies (2) |
|---|---|---|
| Physics | - | 2 |
| Mathematics | - | 2 |
| Chemistry | - | 2 |
| Commerce | - | 1 |
| Zoology | - | 1 |
| Botany | - | 1 |
| Geography | - | 1 |
| Tamil | - | 1 |
| Economics | - | 1 |
| History | - | 1 |

ஏற்கெனவே அறிவிப்பு செய்யப்பட்ட மற்ற நிபந்தனைகளில் கல்வித் தகுதியில் உள்ள மாற்றத்தைத் தவிர மாறுதல் ஏதும் இல்லை.

தமிழ்நாடு கல்விப் பணியில் மாவட்ட கல்வி அலுவலர்/ மகளிர் பள்ளி ஆய்வாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட கீழ்கண்ட பாடங்களில் முதுகலைப்பட்டம் பெற்ற விண்ணப்பத்தாரர்களிடமிருந்து மட்டும் 30.7.1990 அன்று மாலை 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன:-

தமிழ், பொருளாதாரம், வரலாறு

ஏற்கெனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை. **இப்பதவிக்கு தமிழ், பொருளாதாரம் மற்றும் வரலாறு பாடங்களுக்குக் குறிப்பிட்டுள்ள வயது மற்றும் தகுதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது:**

**வயது:** **I. For recruitment to vacancies to be filled from Open Market** (i.e. Other than teachers of recognised Aided Secondary Schools). - Below 30 years as on 1st July 1990.

**II. For recruitment to vacancies reserved to be filled from among teachers employed in recognised Aided Secondary Schools.**

Below 40 years as on 1st July 1990.

**தகுதி:** The candidates should possess the following or equivalent qualifications on the date of their applications:-

I. For both Open Market and teacher candidates (i.e., teachers employed in recognised Aided Secondary Schools):-

(i) Master's degree of any University in the State of Tamil Nadu or a degree of equivalent standard/M.O.L. of Annamalai University with not less than 50 percent of marks in the Master's degree examination/M.O.L. of Annamalai University in any one of the following subjects/language, viz, Tamil, Economics and History.

Provided that a candidate possessing a degree of M.A. or M.Sc., or an equivalent degree awarded under the grading system shall not be considered eligible for appointment unless he has obtained the said Degree with 'O' or 'A' or 'B'.

(ii) B.T. or B.Ed., degree of any University in the State of Tamil Nadu or a degree of equivalent Standard.

NOTE: Candidates who do not possess the B.T. or B.Ed. degree may also apply for vacancies to be filled from Open Market. But such candidates, if selected, should acquire the said qualification before appointment.

(iii) Must have studied Tamil Undec Part I or Part II of the Intermediate or Pre-University or Higher Secondary Course.

**Note:** Paragraph 7 of the Commission's Instructions, etc. to Candidates will not apply to this recruitment.

II. **Only for recruitment to the vacancies to be filled from among the teachers employed in recognised Aided Secondary Schools.**

Teaching experience in a recognised School for a total period of not less than twelve years after acquiring the qualifications specified in item (ii) above

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற் விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்கும் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில் தரப் பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைக்ள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2. அவர்களுக்கு எழுத்துமூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேரிவாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.6.1990 அன்றோ அதற்குப்பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணையுடனும், அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bahk of India) ஏதாவது ஒரு கிளையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.6.1990 அன்றோ அதற்குப்பிறகோ வாங்கப்பட்ட சென்னை-600 006, ஆயிரம்விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க ரூபாய் 10/-க்கான கேட்புக்காசோலை (Demand Draft)-யுடன் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்பட மாட்டா.

DIPR/1548/MS/90

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

அதி / நவீன / பருத்தி / வகைகள்




உங்கள் ஆடை அணிகள் பொலிவுடன் விளங்குவதில் உங்களுக்கு அதிக விருப்பம். ஆகவேதான் உயிரோட்டமான வண்ணங்களின் உன்னத்தை உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் பருத்தி வகைகளில் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

**கோ-ஆப்டெக்ஸ்**
தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
• பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23





கோவையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்புவிழா மேதகு ஆளுநர் திரு. பர்னாலா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்தினார். மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள் விழாவில் கலந்துகொண்டார். (24.6.90)